கடல் உணவின் களஞ்சியம்
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றிட
Kasturi Limited
IMPORT & EXPORT
290B, Ealing Road, Wembley, Middlesex, HA0 4LL, UK.
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827
Mobile: 0958 246580

France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly

முரசு: 4 | 16 - 22 ஏப்ரல் 1998 | முழக்கம்: 170

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126

# தீவில் இரு இராணுவங்கள் சாத்தியமானதா?

அண்மையில் யாழ். ஆயர் அவர்கட்கும், திரு. பாலசிங்கத்திற்கும் (விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன், சுதா, விதுரன் ஆகியோருடன்) இடையே வன்னியில் இடம்பெற்ற சந்திப்பானது இனமுரண்பாட்டைத் தீர்ப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடக்கலாம் என்ற கருத்தை மீளக் கிளம்பியுள்ளது.

(கொழும்பு இராணுவ ஆய்வாளர் தராகியின் இராணுவ எதிர்காலம் பற்றிய ஆய்வுக் கட்டுரை பக்கம் - 6)



கிளிநொச்சி நகர்ப்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் இவ்வாரம் விடுதலைப் புலிகளினால் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

# பன்னிரெண்டாம் மாதத்தில் ஜெயசிக்குறுய் புதிய தாக்குதல் ஆலோசனைகள்

கடந்த வருடம் மே மாதம் 13ம் திகதி வவுனியா, யாழ் பாதை திறக்கவென பெரும் ஆரவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட 'ஜெயசிக்குறுய்' இராணுவ நடவடிக்கை தனது பன்னிரண்டாவது மாதத்தில் அடியெடுத்து வைத்துள்ளது.

இது வரை விடுதலைப் புலிகளின் மரபு வழியிலான பல தாக்கியளிக்கும் நடவடிக்கைகள், ஊடறுப்பு தாக்குதல்கள் போன்றவற்றில் சிக்கிய ஜெயசிக்குறுய் படையணி தனது இராணுவ நடவடிக்கை வரலாற்றில் சந்திக்காத ஆளணி

(☞ 2ம் பக்கம்)

## வேலூரில் ஈழத் தமிழர் உண்ணா விரதம்

(சென்னை)

மண்டபம் பகுதியில் உள்ள ஈழதமிழர் அகதி முகாமில் தங்கியுள்ள தமது பெற்றோருடன் தம்மை இணைக்கக்கோரி வேலூர் கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 11 இளைஞர்கள் கடந்த 10ம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

உண்ணாவிரதத்தின் மூன்

(☞ 2ம் பக்கம்)

## யாழ். குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகள் இராணுவத்தினரே

### புலிகள் சந்தேகம்

(12.04.98)

புதுவருடதினத்தை முன்னிட்டு யாழ் நகரில் பெருமளவில் மக்கள் குழுமியிருந்த வேளையில் இன்று மாலை 5.40 மணியளவில் கைக்குண்டு வீச்சு இடம் பெற்றுள்ளது. இக் குண்டு வீச்சில் காயமடைந்தவர்களில் மூன்று பெண்களின் தாய் ஒருவர் பலியாகியுள்ளார்.

காயமடைந்தவர்களில் மேலும் மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரியவருகிறது.

இக் குண்டுவீச்சு இடம் பெற்று சில மணிநேரத்திற்கு இராணுவத்தினரோ, பொலிசாரே வரவில்லை எனவும், இக் குண்டுவீச்சு திட்டமிட்ட சதி எனவும், இதனை சிறீலங்கா படையினரே மேற்கொண்டிருக்கவேண்டும் என தகவல்கள்

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
RATHY JEWELLERS
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்

28 Ealing Road, Wembley, Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை

நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்

ஆசிரியர்:
பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
யோ. சிறீஸ்கந்தராஜா
Tel: 03 04 35 29 23
அருந்தவராஜா:
Tel / Fax: 02 151 39 73 83

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30, 1th
7430 Ikast, Denmark.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Verlag: People Shop
Henrich Str-85; 8005 Zürich.
Druckerci: Frankreich.
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145
குணம்: - Tel: 0956277718

இத்தாலி:
மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

# ஒலுமடுவில் புலிகள் தாக்குதல் காவலரண்கள் அழிப்பு

(09.04.98)

மாங்குளம் முல்லைத்தீவு வீதியில் சிறீலங்காப் படையினரால் அமைக்கப்பட்டுவரும் புதிய காவல் நிலைகள் மீது இன்று காலை 10.00 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இத் தாக்குதலின் போது சிறீலங்கா படையினரால் அமைக்கப்பட்ட புதிய காவல்நிலைகள் அழிக்கப்பட்டுள்ளன.

இத் தாக்குதலை படைத்தரப்பு ஒத்துக்கொண்ட போதிலும் தாம் அதை முறியடித்துவிட்டதாக வழமைபோல் தெரிவித்துவிட்டனர். ஆனால் வவுனியா செய்திகளின் பிரகாரம் புலிகள் தாக்குதலை ஆரம்பித்த வேளையில் காவலரண் அமைப்பில் ஈடுபட்ட படையினர் தமது நிலைகளைவிட்டு பின்வாங்கி ஓட விடுதலைப் புலிகள் அவற்றை அழித்துள்ளனர்.

இத் தாக்குதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டு, நால்வர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தோர் அநுராதபுர வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

## ஜெயசுக்குறுய் என்றாவது ஒருநாள் வெற்றிபெறும் – ரத்வத்தை

ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை முற்றுப்பெறுவதற்கு சித்திரை புத்தாண்டை காலவரையாக கூறியிருந்த சிறீலங்காப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தை தற்பொழுது தனது காலக்கெடுவை 'என்றாவது ஒரு நாள்' என மாற்றியுள்ளார்.

சிறீலங்காப் பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு விவாதத்தை முடித்துவைத்து உரையாற்றிய ரத்வத்தை 'யுத்தம் என்பது சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்துவது போலல்ல. இன்று எம்மால் மேற்கொள்ளப்படும் ஜெயசிக்குறுய் நடவடிக்கையினை இவ்வருடம் இல்லாவிடினும் என்றாவது ஒரு நாள் வெற்றி அடைய வைப்போம்' எனத் தெரிவித்துள்ளார்.

ஜெயசிக்குறுய் நடவடிக்கையின் களநிலமையை கருத்திற் கொள்ளாது ஏற்கனவே பல தடவைகள் காலக்கெடு விதித்த ரத்வத்தை, இராணுவ அதிகாரிகளின் கண்டனத்தைப் பெற்றுக்கொண்டதால்தான் புதிய காலக்கெடுவாக என்றாவது ஒருநாள் என்ற புதிய பல்வியை கூறி தப்பித்துள்ளார் என கொழும்பு இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### பன்னிரெண்டாம்...

இழப்பினையும், பெரும் ஆயுத தளவாட இழப்பினையும் சந்தித்து சில கிலோ மீற்றர்வரை முன்னேறி தனது இலக்கினை அடையமுடியாது சிக்கித்தவிக்கிறது.

விடுதலைப் புலிகளின் மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் மூலம் ஆயிரக் கணக்கான படையினர் காயமடைந்து சண்டைக்களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டும், வழிநடத்தி செல்லும் தளபதிகளும் காயப்படுத்தப்பட்டமையும் இந் நடவடிக்கைக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது இந் நிலையில், ஜெயசிக்குறுய் படையணிகளை மீள் கட்டுமானங்களை செய்து எதிர் வரும் வாரங்களில் பாரிய நடவடிக்கையை மேற்கொள்ள இராணுவம் திட்டமிட்டு வருகிறது.

புலிகளின் பீரங்கி நிலைகளை கண்டறியும் விசேட ராடர் உபகரணங்களின் பின்னணியில் இந்த நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வருட முடிவிற்குள் பல இராணுவ உயரதிகாரிகள், தளபதிகள் ஓய்வுபெற இருப்பதால் அனுபவமுடைய இவ் அதிகாரிகளின் காலத்திலேயே ஜெயசிக்குறுய் நடவடிக்கையை முடித்துவிட வேண்டுமென உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ்.குண்டு...

வெளியாகி உள்ளன.

இவ்வாறன குண்டுவெடிப்புச் சம்பவங்களை மட்டக்களப்பு நகரில் சிறீலங்கா படையினர் முன்னர் மேற்கொண்டு வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் குண்டுவெடிப்புத் தொடர்பாக இன்று விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட அறிக்கையில், இராணுவத்தினரே இக் குண்டுவெடிப்பினை நடாத்தியிருக்கலாம் என சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

யாழ். குடாச் செய்திகளை ஆதாரம் காட்டியுள்ள இன்றைய புலிகளின் அறிக்கையானது, குண்டுவெடிப்பு நடந்த இடமானது பொதுவாக இராணுவத்தினர் அதிகளவில் நிலை கொள்ளும் இடமாக இருந்த போதிலும், சம்பவத்தின் பின்னர் சில மணி நேரங்கள் கழித்தே படையினர் அங்கு வந்தது சந்தேகத்தைக் கிளப்புவதாக உள்ளது எனக் கூறியுள்ளது.

## கொழும்பு சுற்றிவளைப்பில் அரசுடன் தமிழ் குழுக்கள்

கொழும்பில் என்றுமில்லாதவாறு நாடாத்தப்பட்டுவரும் சுற்றிவளைப்புகள், கைதுகளில் சிறீலங்காப் படையினருடன் தமிழ் குழுக்களும் ஈடுபடுவது குறித்து மனித உரிமைச் சட்டத்தரணி ஒருவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காப் படையினருடன், சீருடையணியாமல் வரும் மேற்படி தமிழ் குழுவைச் சேர்ந்தவர்கள் கைதான தமிழ் மக்களை இனங்காட்டுபவர்களாக செயல்படுவதாக கைதான தமிழ் மக்கள் தெரிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டிய அவர் இவர்களால் கொழும்பில் வாழும் மக்கள் தினமும் பீதியுடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். படையினருக்கு உதவியாக செயற்படும் தமிழ் குழு உறுப்பினர்கள் சிறீலங்கா புலனாய்வுத்துறையினரின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயல்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறீலங்கா பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பின்போது உரையாற்றிய தமிழ் குழுக்களைச் சேர்ந்தவர்கள் கண்துடைப்பிற்காக கொழும்புக் கைதுகளை கண்டித்துப் பேசிவிட்டு, அவசரகால சட்டத்தை நீடிப்பதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

## கொழும்பில் தாக்குதலுக்கு திட்டமிட்டோர் யாழில் கைது?

கொழும்பு கோட்டைப் பகுதியில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையொன்றை தாக்க திட்டமிட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் இரு இளைஞர்களை சிறீலங்கா பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இவ்விரு இளைஞர்களும் யாழ் குடாவிலிருந்து கொழும்பு வர திட்டமிட்ட பொழுதே தம்மால் கைது செய்யப்பட்டதாக தெரிவித்த பொலிஸ் தரப்பினர் இனிமேல் யாழ் - கொழும்பு பயணிகள் போக்குவரத்திலும் கவனமாக செயற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

யாழ்.. குடாவில் இருந்து கொழும்பு செல்வோரை கட்டுப்படுத்துவதற்கு முன்னோடியாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு யாழ் குடாவிலிருந்தே கொழும்புக்கு புலிகள் ஊடுருவுவதாக அண்மையில் தெரிவித்திருந்தது குறிப்பிடத் தக்கது.

கடந்த காலங்களில் இதே குற்றச்சாட்டுகளின் கீழ் ஏராளமான தமிழர்கள் கிழக்கு மாகாணத்தில் அரச படைகளினால் கைது செய்யப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத் தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### வேலூரில்...

றாவது நாளான கடந்த ஞாயிறன்று உண்ணாவிரதிகள் மூவர் நிலை மோசமாகவே மருத்துவர்கள் சிகிச்சைக்கு முயற்சித்த போதும் அவர்கள் அதை புறக்கணித்ததால் வேலூர் உதவி கலெக்டர் உட்பட்ட அதிகாரிகள் குழு உண்ணாவிரதிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து மே 10ம் திகதிக்கு முன்னர் இப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக உறுதியளித்தனர். இவ் உறுதி மொழியை அடுத்து அவர்கள் தமது போராட்டத்தை முடித்துக்கொண்டனர்.

இது ஒருபுறமிருக்க வன்னிப் பகுதியிலிருந்து 16 குடும்பங்களைச்சேர்ந்த 50 பேர் படகு மூலம் தனுஷ்கோடி கடற்கரைக்கு கடந்த 12.04.98 அன்று வந்துசேர்ந்துள்ளனர்.

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

ERRANCES TRAVELS
Tel: 01 42 09 70 00
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc

à partir de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,800 Frs. |
| Singapour | - | 3,400 Frs. |
| Madras | - | 3,600 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்புவதில் ஜேர்மனி துரிதம்

ஜேர்மனியில் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட அகதிகள் - அவர்கள் எந்த நாட்டவராயிருந்தாலும் அவர்களை அவர்களது சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை ஜேர்மனிய அரசு துரிதப்படுத்தியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த சர்வதேச மன்னிப்புச்சபை ஐ.நா. அகதிகள் பிரிவு உட்பட பல பொது அமைப்புக்கள் எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. தீவிர வலதுசாரியான உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அகதிகளை அனுப்பும் விடயத்திலும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். ஆனால் எதிர்க்கட்சியான எஸ்.பி.டி கட்சி ஆட்சியில் உள்ள மாநிலங்களில் தீவிர நடவடிககைகள் மேற்கொள்ளப்படவில்லை.

ஜேர்மனிக்கு வரும் தமிழ் அகதிகள் இங்குள்ள அரசியல் தஞ்சம்கோரும் அகதிகளுக்கான சாதாரண சட்டங்களை அறிந்திருப்பது நல்லது. தழிர்கள் பொலிசாரால் பிடிக்கப்பட்டு நாடு கடத்தப்படுவதை தவிர்ப்பது எப்படி என்பதையும் நிச்சயம் அறிந்திருக்கவேண்டும்.

புதிதாக வந்த தமிழ் அகதிகள் அரசியல் தஞ்சம்கோரி முதல் அகதி விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டதும், பெரும்பாலும் தற்போது 99% நிராகரிக்கப்படுகின்றது. ஆனால் இவ்வாறு நிராகரிக்கப்பட்டதும் அதனை நீதிமன்றத்தில் மீளாய்வு செய்யுமாறு மனுதரரர் மனுத் தாக்கல் செய்யமுடியும். அதுவும் நிராகரிக்கப்பட்டால் மேல் நீதிமன்றத்திற்குச் செல்லமுடியும். அதுவும் நிராகரிக்கப்பட்டால் மாநில அரசு அதிகாரிகள் அல்லது பொலிசார் மனுதாரரை நாட்டைவிட்டு புறப்படலாம் என கடிதம் அனுப்புவார்கள். இக் கடிதம் கிடைத்தும் பல தமிழர்கள் நாட்டைவிட்டு அருகில் உள்ள நாடுகளுக்குச் சென்று வாழுவார்கள். சிலர் இதற்கு மேல் என்ன செய்வதென்று தெரியாமல் யோசனையால் இருந்துவிடுகிறார்கள். இவ்வாறானவர்கள் முதலில் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள். ஆனால் அகதி ஒருவர் அகதி விண்ணப்பம்கோரி மூன்று முறை மனுத்தாக்கல் செய்ய முடியும். ஒவ்வொரு மனுவும் மூன்றுமுறை நீதிமன்ற விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். எனவே மேல் நீதிமன்றத்தில் மனு நிராகரிக்கப்பட்டதும் உடனடியாக அடுத்த மனுவைத் தாக்கல் செய்ய வேண்டும். மூன்று அகதி விண்ணப்ப மனுக்களும் ஒன்பது முறை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும். நாட்டைவிட்டுப் போகுமாறு இதற்கிடையில் கடிதம் வந்தாலும் அவர்களால் மனுதாரரை நாட்டைவிட்டு வெளியேற்ற முடியாது.

ஆனால் அகதி விண்ணப்பம் எல்லா நிலைகளிலும் நிராகரிக்கப்பட்டால் மனுதாரரை நாட்டைவிட்டு வெளியேற்ற பொலிசாருக்கு அதிகாரம் உண்டு. இருப்பினும் கடவுச்சீட்டு இன்றி விமானத்தில் போக முடியாது. கடவுச்சீட்டு இன்றியே இங்கு தமிழர்கள் பெரும்பாலும் அகதி விண்ணப்பம் தாக்கல் செய்கின்றார்கள். முன்பு ஜேர்மன் அதிகாரிகள் கோரினால் அவசர கடவுச்சீட்டு உடனடியாக வழங்கிய ஜேர்மனியில் உள்ள சிறீலங்கா தூதரகம் இப்போது அவசர கடவுச்சீட்டு மூன்று மாதத்தின் பின்னே வழங்கப்படும் என அறிவித்துள்ளது. இதனால் கடவுச் சீட்டு எடுத்தால் விசா தருகிறேன் என தமிழர்களிடம் பொலிசார் கூறி வருகின்றனர். அவர்களின் உறுதி மொழியை நம்பி கடவுச் சீட்டுப் பெற்ற சிலர் சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள். உங்களிடம் கடவுச் சீட்டு இல்லாவிடில் உங்களை நாட்டைவிட்டு வெளியேற்றமுடியாது. என்னிலையிலும் பொலிசாரிடம் பிடிபடாமல் இருக்கும்வரை கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஜேர்மனியில் இருந்து கொழும்பு செல்லும் எயர்லங்கா விமானத்தில் இலங்கைத் தமிழரே கூடுதலாகச் செல்கின்றார்கள். நாளொன்றுக்கு ஜேர்மனியில் இருந்து சராசரியாக 150 தமிழர் இலங்கைக்குப் போய்வருகின்றார்கள். சிலர் இங்கிருந்துகொண்டே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்ல பதிவுசெய்து இங்கிருந்து சென்ற மறுநாளே யாழ்ப்பாணம் செல்கின்றார்கள். அவ்வாறு சென்று திரும்பிய தமிழர்கள் இங்கு பலர் இருக்கின்றனர். இந்நிலையில் அகதி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை திருப்பி அனுப்பினால் அவர்களின் உயிருக்கு ஆபத்து என்ற கூற்றை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்.

இவ்வாறு அரசு அதிகாரி ஒருவர் கேள்வி எழுப்பியுள்ளார். ஜேர்மனியில் மனிதநேய அடிப்படையில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் மேற்கொள்ளப்பட்டால் தமிழர்களை அனுப்புவது தாமதப்படுத்தப்படும்.

*வீ. ஆர். வரதராஜா*

## கொலனாவை குண்டு வெடிப்பை நடாத்தி முடித்தவராம் ஐந்து வருடம் வெளிநாட்டில் வாழ்ந்தவர் கைது

ஜேர்மனியில் அகதி அந்தஸ்துக்கோரி விண்ணப்பித்திருந்த பிரபாகரன் என்னும் இளைஞன் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சிறீலங்கா அனுப்பிவைக்கப்பட்டார். அங்கே விமான நிலையத்தில் அவர் கைதானார்.

இலங்கையைவிட்டு ஐந்து வருடங்களுக்கு முன் வெளியேறி, ஜேர்மனியில் மூன்று வருடமாக வசித்துவரும் இந்த இளைஞர் அகதி அந்தஸ்துக்கான விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சிறீலங்காவுக்கு பலாத்காரமாக அனுப்பி வைக்கப்பட்டார்.

ஐந்து வருடமாக மகனைப் பிரிந்திருந்த தாய் விமான நிலையத்திற்குச் சென்று மகன் வரவைக் காத்திருந்தவேளை அவருக்கு அருகிலேயே நின்ற புலனாய்வுப் பிரிவினர் தாயை நோக்கி வந்த பிரபாகரனை கைதுசெய்தனர். பொலிசார் அந்த இளைஞனுக்கு எதிராக தொடுத்த குற்றப் பத்திரிகையில் அவர் கொலனாவ குண்டுத்தாக்குதலை நடத்தினர் என குறிப்பிட்டுள்ளனராம்.

ஜேர்மனியில் வாழ்ந்த ஒருவரால் எப்படி கொலனாவ குண்டுத் தாக்குதலை நடத்த முடியும் என்ற கேள்விக்கு எப்படி சிறீலங்காவின் நீதித்துறை முகம்கொடுக்கப் போகின்றது என ஏளனமாகவும் பரிகாசமாவும் பலர் கேட்டுக்கொள்கின்றனர்.

## இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர் சுட்டுக்கொலை

சிறீலங்கா இராணுவ புலனாய்வுத்துறையில் கடமையாற்றிய இராணுவத்தினர் ஒருவர் கடந்த புதனன்று சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இவர் செயல்பட்டுக்கொண்டிருந்த வேளை இவருக்கு அச்சுறுத்தல் விடப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து இவர் தன் கடமையை விட்டு விலகி மூதூரில் சென்று தங்கியிருந்ததாகவும் கூறப்படுறது.

சம்பவம் நடந்த அன்று முஸ்லீம் உடையில் இவர் தங்கியிருந்த வீட்டில் நுழைந்த சிலரால் இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவரது கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என சிறீலங்கா இராணுவ தரப்பினர் தகவல் தெரிவிப்பதாக மேலும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டு வாகனங்கள் மோப்ப நாய்கள் மூலம் பலத்த சோதனை

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகள் வாகனங்கள் அனைத்தும் சிறீலங்கா அரச படைகளின் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. இச் சோதனைகளின் போது, குண்டுகள் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ளனவா என கண்டுபிடிக்க மோப்ப நாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் பின்னர் குண்டு கண்டுபிடிக்கும் கருவிகள் மூலம் வாகனங்கள் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றன.

இதேவேளை, பயணிகள் அனைவரும் வாகனங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னரே இச் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதனால் பயணிகள் மணித்தியாலக் கணக்காக காத்திருக்க வேண்டியுள்ளதால் நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரியவருகிறது.

## அடையாள அட்டை தகராறில் ராசிக்குழு உறுப்பினர் பலி - பொலிசார் காயம்

மட்டக்களப்பில் சிறீலங்கா இராணுவத்தினரின் ஒன்பதாவது துணைப்படையாக இயங்கிவரும் ராசிகுழுவினருக்கும் சிறீலங்காப் பொலிசாருக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கம் ஒன்றில் ராசிக்குழு உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட, பொலிசார் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த 5-ம் திகதி நடந்ததாகக் கூறப்படும் இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது இரண்டு ராசிக்குழு உறுப்பினர்கள். வீதியில் வந்துகொண்டிருந்தபோது சீருடையில் நின்ற சிறீலங்காப் பொலிசார் அவர்களது அடையாள அட்டையை காண்பிக்கும்படி கேட்டுள்ளனர். இதில் ஒருவரிடம் அடையாள அட்டை இல்லாததால் தாம் ராசிக்குழுவை சேர்ந்தவர்கள் என அவர்கள் கூறியபோதும் மற்றவரது அடையாள அட்டையை பறிமுதல் செய்து அவர்களைப் பொலிஸ் நிலையத்திற்கு வந்து சந்திக்கும்படி கூறிச் சென்றுள்ளனர்.

இதன்பின்னர் தமது குழுவினருடன் நாவற்குடா பொலிஸ் காவல் நிலையத்திற்குச் சென்று வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்ட இவர்களுக்கு இடையே துப்பாக்கிச்சண்டை தொடங்கியது. சுமார் அரைமணிநேரமாக நடைபெற்ற இச் சண்டையிலேயே ஒருவர் கொல்லப்பட இன்னொருவர் காயமடைந்துள்ளார்.

தற்போது இவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள [illegible] நிலையை தணித்து இரு பகுதியினரையும் சமரசம் செய்து வைக்கும் முயற்சியில் சிறீலங்கா இராணுவத்தினர் ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது.

## யானை தாக்கி இளம்பெண் பலி

செங்கலடி ஈரளக்குளத்தில் காட்டு யானை தாக்கியதில் இளம் பெண் ஒருவர் பலியானார். கடந்த வியாழன் அன்று நடந்த இச் சம்பவம் அங்குள்ள மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. ஏனெனில் கடந்த ஆண்டில் இதே நாளில் இதே இடத்தில் பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் யானை தாக்கி கொல்லப்பட்டிருந்தார்.

அதிகாலை 3 மணியளவில் தனது தாயாருடன் சேனைவாடியில் நித்திரையில் இருந்த கந்தசாமி சோதி மலர்(18) என்பவர் கொல்லப்பட அவரது தாயார். யானை தூக்கி வீசியதில் பட்டு காயமடைந்து மட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பிந்திக் கிடைத்த செய்திகளின்படி இவரது தாயாரான கந்தசாமி பாக்கியம்(50) என்பவரும் இறந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

## ஆறு மாதங்களின் பின் தரை இறங்கிய உலங்குவானூர்தி

மட்டக்களப்பு வலையறவு விமான நிலையத்தில் ஆறு மாதங்களின் பின்னர் உலங்குவானூர்தி ஒன்று தரையிறங்கியுள்ளது. கடந்த செவ்வாய் அன்று மட்டக்களப்பு நகரப் பகுதிகளை தீவிரமாக நோட்டமிட்ட பின்னர் வேகமாக இறங்கி, சிலமணி நேரங்களில் மேலெழுந்து சென்றுவிட்டதாக தெரியவருகிறது.

மட்டக்களப்பு விமான நிலையத்தை இலக்குவைத்து விடுதலைப் புலிகளால் எறிகணை தாக்குதல்கள் நடாத்தப்பட்டதனாலேயே விமானங்கள் தரையிறங்குவது இடைநிறுத்தப்பட்டிருந்தது. அத்துடன் இலக்குத்தவறாத எறிகணை வீச்சுக்களினால் ஓடுபாதையும் சிதைந்து போயுள்ளதால் விமானங்கள் வந்து இறங்கிச் செல்வது தடைப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வெளிவந்துவிட்டது
பாலம்
மாசி 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு அரசியலை கலக்கும்

# சனி ராசி

கடந்தவார கொழும்பு நிலவரங்களில், விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் யாழ் ஆயர் தொடர்பு, ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற பகிஸ்கரிப்பு- அஞ்ஞாதவாச முடிவு, தொழிற்சங்க வேலைநிறுத்தங்கள் ஆகியவற்றுடன் நகரில் இடம்பெற்ற 'பகற் கொள்ளைகளும்' முக்கிய இடத்தினைப் பிடித்துக்கொண்டன.



கொழும்பு: தமிழர் பிரவேசிக்கத் தடை

வன்னியில் இடம் பெற்ற ஆயருடனான சந்திப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கலந்துகொண்டு விடுதலைப் புலிகளின் 'நிலைப்பாட்டினை' எடுத்துக் கூறியுள்ளார். (பார்க்க - முன்பக்க ஆய்வுச் செய்தி). திரு..அன்ரன் பாலசிங்கம் இச் சந்திப்பில் கலந்து கொண்டமை சிறீலங்கா அரசின் கோயபல்ஸ் பிரச்சாரத்தினை நம்பி பாலசிங்கம் அவர்கள் பற்றிய பலவித ஊகங்களுக்கும் எண்ணக்கரு கொடுத்த 'குருட்டு ஊடகங்களுக்கு' முகத்தில் கரியைப்பூசி உண்மையை வெளிப் படுத்தியுள்ளது.

கடுமையான போர்நடைபெறும் ஒரு பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் பதட்டம் எதுவுமின்றி தமது இராணுவ - அரசியல் முன்னெடுப்புகளை நடத்தி வரும் இந்தவேளையில், கொழும்பில் படையினர் புடைசூழ வலம் வரும் அரசியல் வாதிகளுக்கு சித்திரைப் புத்தாண்டு இராசிபலன் பற்றிய கலக்கம் பீடித்துள்ளமையால் இராசி மாற்றம் நிகழும் 17ம் திகதியையும், அண்டிய நாட்களையும் முன்னிட்டு தமது இருப்பிடங்களை விட்டு கடல்கடந்து செல்ல தொடங்கிவிட்டனர்.

இந்த சனி இராசி மாற்றம் பல விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தி விடுமென்ற 'ஆரூடத்தை' நம்பி வெளிநாடு செல்லும் அரசியல் பிரமுகர்களில் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில், அநுரா, ரொனி டி மெல், காமினி அத்து கோரளை, ஜீ.எல்.பீரிஸ், தசாநாயக்கா, இரத்தினசிறி விக்கிரமநாயக்கா, ஜெயராஜ் பெர்னான்டோ புள்ளே, மகிந்த ராஜபக்ஷ, டி.எம்.ஜெயரத்தினா மற்றும் சிங்கள அரசியலுக்கு தலையாட்டும் புளொட் சித்தார்த்தன், ஈ.பி.டி.பி. டக்ளஸ் ஆகியோர் உட்பட்டதான பட்டியல் விரிந்து செல்கிறது.

விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தை நன்றாகவே கணித்துள்ள சோதிடர்கள் அரசியல் வாதிகளுக்கு 'கலக்கல்' கொடுக்கும் யுக்தியை நன்றாகவே புரிந்து கொண்டுள்ளமை இதன் மூலம் புரியவருகிறது.

உச்ச பாதுகாப்பில் இருக்கும் சந்திரிகா கூட பொதுநிகழ்ச்சிக

## பேம்பி

ளில் கலந்துகொள்வதை தவிர்த்து வருகிறார். அண்மையில் கொழும்பில் நடந்த சரசவிய திரைப்பட விழாவிற்கு முன்னர் வருவதாக இருந்த சந்திரிகா, தனது வருகையை இறுதிநேரத்தில் இரத்துச் செய்துவிட்டார். அத்துடன் மொரனாகலையில் திட்டமிடப்பட்டிருந்த நடமாடும் ஜனாதிபதி சேவையும் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

தற்போது வெளிநாட்டு விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர் கட்சித் தலைவர் தனது பிரயாணப் புறப்பாட்டிற்கு முன்னர் ஐ.தே.வின் பாராளுமன்ற பகிஷ்கார அஞ்ஞாதவாசத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

தமது பகிஷ்காரத்தினால் மென்டிஸ் விவகாரத்தில் அரசுக்கு சாதகமான சூழ்நிலைகள்



சலுகைக்காக...

தொடர்ந்தும் ஏற்படுவதை சகித்துக் கொள்ளாத ஐ.தே.க, 'விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத' கதைகளோடு கடந்தவாரம் மீண்டும் பாராளுமன்றத்திற்குள் நுழைந்து அவசரகால சட்ட மூலத்திற்கு எதிராக வாக்களித்துள்ளது. ஏதோ தமிழ் மக்களில் கரிசனையாக ஐ.தே.க சட்டமூலத்திற்கு எதிராக வாக்களிக்கவில்லை. மாறாக அரசு என்ன செய்தாலும் அதை எதிர்த்து தனது வீராப்பைக் காட்ட வேண்டும் என்ற கோதாவில் இறங்கியிருக்கிறது; அவ்வளவுதான்!

ஆனால், அவசரகால சட்டத்திற்கு ஆதரவாக ஈ.பி.டி.பி, இ.தொ.கா. ஆகியன கை உயர்த்தி சட்ட மூலத்தினை ஒப்பேற்றியுள்ளன. பேரினவாத அரசுகளுடன் அவசரகால சட்டங்கள் தமிழ் மக்களுக்கு எதைக் கொடுக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் இந்தக் கையுயர்த்திகளுக்கு கவலை கிடையாது. அரசிற்கு 'முண்டு' கொடுத்து தம்மைக் காப்பற்றிக் கொள்வதற்கு இந்தக் கையுயர்த்தும் விளையாட்டுக்களை காலம் காலமாக கை உளையாமல் புரிந்து வருவதை தமிழ் மக்கள் என்றோ உணர்ந்துவிட்டதை இந்த கையுயர்த்திகள் இன்னும் உணரவில்லை.

இது ஒருபுறமிருக்க, எதிர்வரும் மகாணசபை தேர்தல் களங்களை மனத்தில் நிறுத்தி மனப்பால் குடிக்கும் அரசியல் முறை, கூட்டணி உள்ளிட்டதான தமிழ் அரசியல் வாதிகளையும் தொற்றிக்கொள்ள ஆரம்பித்துள்ளமை தற்போது மெல்லமெல்ல வெளியாகத் தொடங்கியுள்ளது. பேரினவாதக் கட்சிகள் தமது கட்சிகளுக்கிடையேயான உட்பூசல்களை தேற்றிக் கொள்ள சிறுபான்மைக் கட்சிகளை பயன்படுத்த முனைகின்றனர். ஆனால் இதனை அறியாத சிறுபான்மைக் கட்சிகள் சேற்றுக்குள் புதைந்த எருமைகளாகக் கிடப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். தமிழ் மக்களுடைய வாழ்விலும், அரசியலிலும் இவர்கள் அவ்வப்போது. ஏற்படுத்தி வரும் தாக்கத்தின் 'மீள் தாக்கம்' இவர்களை என்றோ அனுபவித்தே தீரும்.

## நீலனின் முகம்

கடந்தவாரம் சிறீலங்கா பாராளுமன்ற சபாநாயகர் அறையில் ஒரு சிங்களப் புத்தக வெளியீடு நடந்தது. புத்தகத்தை எழுதியவர் வேறுயாருமல்ல; சந்திரிகாவின் ஆலோசகரும், கூட்டணியின் முக்கியஸ்தருமான நீலன் திருச்செல்வமே அவராவார்.

'அரசியலும், கலாச்சாரமும், புதிய சகாப்தத்தின் முகங்கள்' என்ற தலைப்பிலானதே இப் புத்தகம்.

நீதியான அரசியல், பண்பான கலாச்சாரம் ஆகியவற்றை தொலைத்த இவர்கள் புத்தக வடிவிலாவது இவற்றை எழுதி மகிழ்கின்றனர்.

## பகல் கொள்ளைகள்

மழைவிட்டாலும் தூவானம் விடாத கதையாக எயர்லங்கா விமான சேவை நிறுவனத்தின் பங்குகள் விற்கப்பட்ட கதை மற்றும் எயர்பஸ் விமான கொள்வனவில் தரகுப்பணமாக பல மில்லியன் டொலர்கள் கையளிப்பு இப்படி ஊழல்கதை தொடர்கிறது.

இவ் ஊழல்கள் தொடர்பாக எயர் லங்காவின் புதிய இயக்குனரும், எமிரேட் விமானசேவை அதிபரும் பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு முன்பாக விளக்கமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர். கொழும்புப் பத்திரிகைகளோ தினமும் புதிய, புதிய ஊழல் தொடர் கதைகளை தொடர்ந்து வெளியிட்டுவருகின்றன.

ஐ.தே.க. இவ் விடயத்தை ஒரு பிடி பிடிப்பதால் ஐ.தே.கவினர் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் சதிகாரர்கள் என அரசு திட்டுவதுடன், எயர்லங்காவில் நடைபெற்றது ஒரு பகற்கொள்ளை அல்ல என திரும்ப திரும்பக் கூறுகிறது.

எயர்லங்காவில் நடந்தது பகற்கொள்ளையோ இல்லையோ கடந்த வாரம் கொழும்பு நகரில் இரு பகல் கொள்ளைகள் நடந்தேறியுள்ளன. தமிழ் மக்கள் அதிகம் வசிக்கும் கொட்டாஞ்சேனை பகுதியில் இக் கொள்ளைகள் இடம்பெற்றுள்ளதால் இப்பகுதியில் 'காக்கிச்சட்டை கெடுபிடிகளை மேலும் இறுக்க' இவை திட்டமிடப்பட்ட நாடகமோ என்ற கருத்துக்களும் நிலவுகின்றன.


வெகு விரைவில் Coming Soon

ஈரோ தமிழ் ஒளி
Euro Tamil oli

இன்றே எங்களிடம் தொடர்பு கொள்ளுங்கள் ரசீவர் டெக்கோடர் வர்த்தக நிலையங்களிலும் அல்லது எங்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.
பார்ப்பதற்கான சந்தா கட்டணம் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| ஒரு மாதம் | 40 DM | அரை வருடம் | 235 DM |
| மூன்று மாதம் | 129 DM | ஒரு வருடம் | 455 DM |

Euro Tamil Oli
N.Navajeevakumar
Bahnhof str-1, 96224 Burgkunstadt,
Germany.
Tel : Fax: 09572 -603135

☎ பேசித் தொலை ☎

சுவிஸிலிருந்து வெளிநாடுகளுக்கு பேசுவதற்கு சுவிஸிலேயே மிகவும் குறைந்த கட்டணத்தில் தொலைபேசி அட்டைகள்.
Sfr 10-, 20-, 30-, 50-, 100-, 200
பெறுமதியான அட்டைகள்.
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
சுவிஸில் எல்லா பாகங்களிலும் விற்பனைக்கு முகவர்கள் தேவை.
Tel: 01/461 70 18 01/ 462 55 05, 079/320 23 74


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ச் செய்திகள்

## தாளையடி - யாழ்ப்பாணம் ஐந்தரை மணி நேரப் பயணம் !

வடமராட்சியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தாளையடியில் இருந்து ஒருமணிநேரத்தில் செல்லும் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல தற்போது ஐந்தரை மணித்தியாலங்கள் எடுக்கின்றன. அதுவும் பயணிகள் விரும்பியபடி பயணத்தினை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் ஒரு நாளுக்கு ஒரு பேருந்து மட்டுமே தாளையடியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதால் மிகவும் அவசர தேவைகள் கருதிச் செல்பவர்களே அனுமதிக்கப்படுகின்றனர்.

காலை 7.00 மணிக்கு தாளையடியில் இருந்து புறப்படும் இப்பேருந்து சுமார் 17 சோதனைச் சாவடிகளைக் கடந்து யாழ்ப்பாணம் சென்றடைவது நண்பகல் 12.30 மணியளவிலாகும்.

33 கிலோமீற்றர் இடைவெளி உள்ள இத் தூரத்தை கடப்பதற்கு ஏன் இவ்வளவு தாமதம் என அறிய முற்பட்ட வேளை, 17 சோதனைச் சாவடிகளிலும் பயணிகள் இறங்கி நடந்துசெல்லவேண்டியுள்ளது. இதில் மூன்று முக்கிய சோதனைச் சாவடிகளில் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு பதியப்படுகின்றன. இதன் பின்னர் அவர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்கான காரணங்கள் கூறப்பட்ட பின்னரே பயணத்தை தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் என அறிய முடிந்தது.

இதன்பின்னர் மீண்டும் யாழ் நகரில் இருந்து பகல் 2.00 மணிக்கு புறப்படும் பேருந்து மாலை 7.30 மணியளவிலேயே தாளையடியைச் சென்றடைகின்றது.

## படையினரின் மோட்டார் சைக்கிள் மோதியதில் மாணவன் பலி

(11.04.98)

யாழ். ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் (9.04.98) சிறீலங்காப் படையினரின் மோட்டார் சைக்கிள் தொடரணி, எதிரில் வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் பல்கலைக் கழக மாணவன் ஒருவன் உயிரிழக்க இன்னொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாலை 7.00 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து யாழ். நகர் நோக்கி இவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். அப்போது பருத்தித்துறை வீதி வழியாக வடமராட்சி நோக்கி மிக வேகமாகச் சென்றுகொண்டிருந்த இராணுவ அணியின் மோட்டார் சைக்கிள் ஒன்று இவர்களின் மோட்டார் சைக்கிளுடன் வேகமாக மோதியதில் புலோலி உபய கதிர்காமத்தைச் சேர்ந்த பசுபதி சிவதாசன்(24) உயிரிழந்தார். அவருடன் பின்னால் இருந்து பயணித்த உடுப்பிட்டியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை கணேசலிங்கம்(31) படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாக இவர்கள் அச்சுவேலி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அழிக்க முடியாததால் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு மாணவன் இறந்துவிட மற்றவர் இன்னும் மயக்கமடைந்த நிலையிலேயே இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## படையினரின் புதுவருடக் கொண்டாட்டம் பலாலியில்

புதுவருடக் கொண்டாட்டங்களுக்கு விடுமுறை பெற்ற இராணுவத்தினர் தமது சொந்த இடங்களுக்குச் சென்று உறவினர்களுடன் புதுவருடத்தைக் கொண்டாட முடியாமல் திண்டாடுகின்றனர். இவர்களுக்கான விடுமுறை அனுமதி கிடைத்துள்ளபோதிலும் விமானப் போக்குவரத்து கட்டுப்படுத்தப் பட்டுள்ளமையே இதற்கான காரணம். இவ்வாறு விடுமுறை பெற்ற சுமார் 2000 சிறீலங்காப் படையினர் பலாலியில் இராணுவ போக்குவரத்து விமானத்தை எதிர்பார்த்து காத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் • பருத்தித்துறைக் கடலில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின் இராணுவத்தினரின் கடல்வழிப்போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டதாகவும் விமானப் போக்குவரத்து விமானப் பற்றாக்குறையுடன் புலிகளின் விமானங்கள் மீதான தாக்குதல் காரணமாகவும் இராணுவ விமானப் போக்குவரத்துக்கள் வரையறைக்குட்பட்டே நடைபெறுகின்றன. இதனால் விடுமுறையைப் பெற்றுள்ள இராணுவத்தினர் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாமல் விடுமுறையை பலாலித் தளத்தினுள்ளே கழித்து விட்டுச் செல்லவேண்டி ஏற்படுகின்றது என விடுமுறை பெற்று பலாலித் தளத்தில் நின்ற இராணுவத்தினர் ஒருவர் கூறியதாகப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## யாழ்.குடாவில் காணாமல்போனோரை கண்டுபிடிக்க தொலைபேசி

யாழ். குடாநாட்டை சிறீலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்த பின்னர் கைதாகிக் காணாமல் போனவர்கள் பற்றி அறிவதற்கு தொலைபேசி இணைப்பு ஒன்றை ஏற்படுத்தி இலக்கம் ஒன்றையும் இராணுவத்தினர் வழங்கியுள்ளனர்.

இத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு காணாமல் போனவர்கள் பற்றிய விபரம் பெயர், எங்கு கைதுசெய்யப்பட்டார், எப்போது கைதுசெய்யப்பட்டார் போன்ற விபரங்கள் அனைத்தையும் வழங்கினால் அவர்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தருவதற்காகவே இது அமைக்கப்பட்டுள்ளதாக இராணுவ தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை இத்தொலைபேசி பற்றி கருத்துத் தெரிவித்த குடாநாட்டுவாசி ஒருவர் 'நேரில் முகாமிற்குச் சென்று அழுது புரண்டபோதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதவர்கள் முகம் தெரியாத தொலைபேசியின் ஊடாகவா தேடித் தரப் போகிறார்கள்' என்றார்.

## மிதிவெடிகளால் ஆலயங்களுக்குச் செல்லமுடியாத மக்கள்

மாதகல் பணாவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலயப் பகுதியிலும் அதற்கு அண்மைப் பகுதியிலும் முனியப்பர் ஆலயப் பகுதிகளிலும் சிறீலங்கா இராணுவத்தினர் ஏராளமான மிதிவெடிகளைப் புதைத்து வைத்திருப்பதால் அங்கு மீளக் குடியேறியுள்ள மக்கள் ஆலயங்களுக்குச் சென்று வணங்கமுடியாமல் பெரும் வேதனை அடைந்துள்ளனர்.

கோயில் வீதிகளில் ஏராளமான மிதிவெடிகள் புதைத்து வைத்துள்ளதால் பல கால் நடைகள் இறந்துகிடப்பதாகவும், அப் பகுதிகளில் செல்லும் வளர்ப்பு மிருகங்கள் மிதிவெடிகளில் அகப்பட்டு காயமடைந்து இறப்பதாகவும் அங்கு மீளக் குடியேறியுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவற்றினை அகற்றித் தருமாறு இராணுவத்தினரிடம் பிரதேச செயலகங்களினூடு கேட்கப்பட்டபோதிலும் இராணுவ பாதுகாப்புக் காரணங்களுக்காக இவை புதைக்கப்பட்டுள்ளதால் இவற்றினை அகற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என தெரியவருகிறது.

## சிற்றூர்தி குடைசாய்ந்து பதினைந்துபேர் காயம்

பண்டத்தரிப்பிலிருந்து மட்டுவில் நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிற்றூர்தி குடை சாய்ந்ததில் 15 பயணிகள் படுகாயமடைந்துள்ளனர்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பங்குனித் திங்கள் உற்சவத்தில் கலந்துகொள்ளச் சென்றவர்களின் சிற்றூர்தி வண்ணாத்திவில்லு பாலமருகே 50 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்தவேளை குடை சாய்ந்தது.

இதன்போது காயமடைந்தவர்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தெல்லிப்பளையில் புதிய சிறைச்சாலை ?

யாழ்ப்பாணத்தில் தற்போது கைது செய்யப்படுபவர்களை தடுத்து வைப்பதற்கென அமைத்துள்ள சிறைச்சாலையில் இடவசதிகள் காணாததால் அதனை விரிவுபடுத்தி வேறொரு இடத்தில் கட்டி அமைப்பதற்கு சிறீலங்கா நீதி அமைச்சின் உயர்மட்டக் குழுக்கள் ஆலோசனை நடாத்தியதாக தெரியவருகிறது.

இவ்வகையில் பாதுகாப்புக்களுடன் பெரியளவிலான சிறைச்சாலையை அமைப்பதற்கு தெல்லிப்பளையில் இடம் ஒன்று பார்த்து வருவதாகவும் மேலும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாடசாலைகள் இயங்க ரத்வத்தை அனுமதி மறுப்பு

யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்குப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ள பல முக்கிய பாடசாலைகளில் அதே இடங்களில் இயங்குவதற்கு சிறீலங்காப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை அனுமதி மறுத்துள்ளார்.

கடந்தவாரம் பலாலிக்குச் சென்றிருந்தவேளை இவரைச் சந்தித்து தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி யூனியன் கல்லூரி, வசாவிளான் மகாவித்தியாலயம், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை போன்றனவற்றை மீண்டும் இயங்குவதற்கு அனுமதி வழங்கும்படி கேட்ட போதே இக் கோரிக்கையை நிராகரித்த ரத்வத்தை மேற்படி பகுதிகள் இராணுவத்தினரின் அதி உயர் பாதுகாப்பு வலையங்களாக உள்ளன. அதனால் இப்படியான பாதுகாப்பு வலயங்களில் உள்ள பாடசாலைகள் இயங்க அனுமதிக்கப்படமாட்டாது என தெரிவித்துள்ளார். இதேவேளை யாழ்குடாநாட்டை இராணுவத்தினர் ஆக்கிரமித்த பின்னர் 35-ற்கும் மேற்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியேறவோ பாடசாலைகளை இயங்க வைக்கவோ அலுவலகங்கள் அமைக்கவோ படையினர் இதுவரை அனுமதி வழங்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலண்டனில்
நகைத் தெரிவுகளுக்கு
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887

வீடுகள் வாடகைக்கு
Colombes (92) இல் S.N.C.F இற்கு மிகவும் அருகாமையில் 2 Pieces வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை 3255 Frs C.C
சகல தொடர்புகளுக்கும்: சிவா
Tel: 01 46 71 66 91 / Mobil: 06 09 91 12 66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவில் இரு இராணுவங்கள் சாத்தியமானதா?

அண்மையில் யாழ். ஆயர் அவர்கட்கும், திரு. பாலசிங்கத்திற்கும் (விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன், சுதா, விதுரன் ஆகியோருடன்) இடையே வன்னியில் இடம்பெற்ற சந்திப்பானது இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடக்கலாம் என்ற கருத்தை மீளக் கிளம்பியுள்ளது.

திரு. பாலசிங்கம் யாழ் ஆயருக்கு என்ன கூறினார் என்ற விடயமானது, மேற்கத்தேய மத்தியஸ்த்தம் இடம்பெறலாம் என்ற ஒரு பகுதி பத்திரிகைகளின் சந்தேகத்துடன் ஒத்துப் போகின்றது. ஆயினும் சந்திப்பில் திரு. பாலசிங்கம் தெரிவித்த முக்கியமானதொரு அவதானிப்பு பத்திரிகைகளினால் முக்கியப்படுத்தப்படவில்லை.


விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் இராணுவச் சமநிலையை அடையும்போதுதான் சமாதானம் சாத்தியமானது என அவர் யாழ். ஆயரிடம் கூறியிருந்தார்.

வன்னியில் இராணுவத்தினரை எதிர்கொள்ள விடுதலைப் புலிகளிடம் போதுமான நவீன ஆயுதங்கள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

1991ல் இடம்பெற்ற ஆனையிறவு சமர் காலத்திலிருந்து அவர்கள் தீவினில் இரு இராணுவங்கள் எனக் கதைத்து வருகின்ற போதிலும் முதல் முறையாக இப்போதுதான் தன்னம்பிக்கையுடன், தாம் சமனான இராணுவப் பலத்தினை பெற்றாலேயே நாட்டினில் சமாதானத்தை அடைய முடியும் என தெரிவித்துள்ளனர்.

1996-ம் ஆண்டு கடைசிக் காலப்குதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே உத்தியோகப் பற்றற்ற பேச்சுவார்த்தையொன்றினை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கத்தேய அரசு ஒன்று மேற்கொண்டிருந்தது. ஆயினும் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் யாழ் குடாவில் 'ஒப்பரேஷன் ரிவரிசா'விற்கு முற்பட்ட நிலைகளுக்கு செல்ல வேண்டும் வலியுறுத்தியதனால் இந்த முயற்சி தோல்வியடைந்தது.

எது இடம்பெற்றாலும் இத்தகைய நிபந்தனைகளுக்கு அரசாங்கம் ஒத்துவராது என்பது வெளிப்படையானது. முல்லைத் தீவுத் தோல்வியைத் தவிர யாழ், வன்னி நெடுஞ்சாலையை கைப்



பற்றி விடுதலைப் புலிகளை ஒடுக்கும் நடவடிக்கை வெற்றி பெறும் என்பது ஒரு முடிந்த முடிவாகக் கருதப்பட்ட காலம் அது. ஆகவே, சிறீலங்கா அரசாங்கத்தினுடனான பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப் புலிகள் முன்வைத்த நிபந்தனையானது ஒரு தற்கொலைக்கான கூறுகளைக் கொண்டதாகத் தோற்றமளித்தது. புலிகள் அமைப்பினை உடைத்து அதனை ஒரு அரைகுறை மரபு சக்தியாக மாற்றத்தக்க நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் நம்பிக்கையினைக் கொண்டவர்களுக்கு அது அவ்வாறு இருந்தது. ஆனால், எமது ஆய்வில் விடுதலைப் புலிகள் இவ்வாறு நிபந்தனை விதிப்பதற்கான காரணங்கள் உள்ளது. ஏனெனில், ஈழப் போரில் குறிப்பிட்ட நடவடிக்கைகளூடாக பலத்தினைப் பெறும் நம்பிக்கைகளை அவர்கள் கொண்டிருப்பதற்கு தகுந்த காரணங்கள் உள்ளன. திரு. பாலசிங்கம் விடுதலைப் புலிகளின் இராணுவத் திட்டத்தினை தெளிவாக அறிவித்துவிட்டார். விடுதலைப் புலிகளை தொடர்ச்சியாக எல்லா முனைகளூடாகவும் தாக்கி பலவீனப்படுத்தி அவர்களை பேச்சுவார்த்தை மேடைக்குக் கொண்டுவரும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிரானதே அவரது கருத்தாகும்.

அரசாங்கத்தின் ஞானமானது மரபுரீதியானது; இதையொத்த போராட்டங்கள் நடக்கும் உலகின் பிற பகுதிகளின் உதாரணங்களிலிருந்து பிறந்தது.

எல்லா மேற்கத்தேய நாடுகளும் இந்திய நிறுவகத்தின் ஒரு பகுதியும் தந்திரோபாய ரீதியாகவோ அல்லது வெளிப்படையாகவோ ஐக்கிய முன்னணி அரசின் போர் முயற்சிகளை ஆதரித்து விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதே

> **வன்னியில் பாரிய அளவிலான இராணுவ விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டமொன்றினை விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ளனர். விரிவாக்கப்பட்ட இராணுவ பயிற்சித் திட்டமொன்று அங்கு இடம்பெறுவதை யாழ். ஆயர் அவதானித்துள்ளார்**

அவர்களைப் பேச்சுவார்த்தை மேடைக்குக் கொண்டுவருவதற்கான வழி என உறுதியாக நம்பினர்.

அவர்கள் அறிந்துகொள்ள மறுத்தது என்னவெனில் பல வீனமான விடுதலைப் புலிகளே தற்கொடைத்தனமான உறுதியினை தொடர்ந்து போரிடுவதில் கொண்டிருப்பர். இம் மனோ நிலையானது தமிழர் கலாச்சாரத்தினதும், தேசியவாதத்தினதும் ஒரு அம்சமாக ஆழவேரூன்றியுள்ளது.

விடுதலைப் புலிகளினால் இராணுவ பலத்தைப் பொறுத்த வரை சமநிலையினை அடைய முடியுமா? இதற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க சிந்தனைத் தளங்கள் உள்ளதா?

அரசாங்கமானது யாழ்ப்பாணத்தை கைப்பற்றியதனாலும்,



'ஒப்பரேஷன் ஜெயசிக்குறுய்' மூலம் ரத்வத்தை கூறியபடி, படைகள் மெதுவாக ஆனால் உறுதியாக வன்னியில் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி வருவதனால், போரிலே தனது கை ஓங்கியுள்ளதாகக் கருதுகிறது. ஆனால், புலிகள் மறுபுறம் இராணுவத்தினரை சேதப்படுத்தும் தமது ஆளுமை அதிகரித்து வருவதாகக் கருதுகின்றார்கள். ஆட்பலத்திலும் ஆயுத பலத்திலும் இராணுவம் அடைந்துவரும் தோல்விகளை அவர்கள் பட்டியலிடுகின்றனர். இராணுவமானது பல்வேறு முனைகளில் தன்னை வெளிக்காட்டியதன் மூலம் தன்னைத் தானே ஒரு மூலைக்குள் முடக்கி போரை முன்னெடுப்பதற்கான பலத்தை தம்மிடம் தந்துவிட்டதாக புலிகள் கருதுகின்றனர்.

இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தினை கட்டுப்படுத்தியாக வேண்டும். அங்கு தினசரி தாக்குதல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மேலும், வடமராட்சியிலும் புங்குடுதீவிலும் பாரிய தளங்களை நிறுவியுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ரீதியானதும் இராணுவ ரீதியானதுமான சவால்களை சந்திக்க வேண்டும்.

மேலும் கிளிநொச்சியில் நிலைகொண்டுள்ள புலிகளிடமிருந்து பரந்தனைப் பாதுகாக்க வேண்டும்; ஜெயசுக்குறுய் நடவடிக்கையில் சண்டையிட வேண்டும்; கிழக்கில் புலிகள் கட்டுப்படுத்தும் விரிவாக்கப்பட்ட பிரதேசங்களினால் வரும் பிரச்சினைகளைக் கையாள வேண்டும். அத்துடன் கொழும்பையும் பிற பகுதிகளையும் பாதுகாக்க வேண்டும்.


குறிப்பாக கிளிநொச்சியின் இதயம் போன்ற பகுதியில் உள்ள தமது தற்போதைய நிலைகள் பற்றி கடந்த வாரம் வன்னியில் இருந்து அனுப்பிய புகைப்படங்களில் தமது இராணுவ வளர்ச்சியினை புலிகள் வெளிக்காட்டியுள்ளனர். அவர்களுடைய இராணுவ வரலாற்றில் முதல் தடவையாக அவர்களினால், நீடிக்கப்பட்ட ஒரு இராணுவ தளத்தின் ஒரு பகுதியினைக் கைப்பற்றி தொடர்ச்சியாக தொடர்ந்தும் அவற்றினை கட்டுப்படுத்த முடிகிறது.

வன்னியில் பாரிய அளவிலான இராணுவ விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டமொன்றினை விடுதலைப் புலிகள் ஆரம்பித்துள்ளனர். விரிவாக்கப்பட்ட இராணுவ பயிற்சித் திட்டமொன்று அங்கு இடம்பெறுவதை யாழ். ஆயர் அவதானித்துள்ளார் எனத் தெரிகிறது. தொழில்நுட்ப பார்வையில் இப் போரினை ஆராய்பவர்களுக்கு நான் கூறும் ஆலோசனையானது வேடிக்கையானதாகத் திகழலாம். அதாவது, திரு. பாலசிங்கத்தின் அவதானிப்புத் தொடர்பாக ஐக்கிய முன்னணி அரசாங்கமானது தனது இராணுவத்தினை அரசியல் திட்டத்திற்காகப் பயன்படுத்துவதற்கு முன்னர் ஒரு மீள்பார்வை செய்வது நல்லது.

**(கொழும்பு இராணுவ ஆய்வாளர் திரு. தராகி அவர்களின் ஆய்வுக் கட்டுரையின் தழுவல்)**



> **வன்னியில் இராணுவத்தினரை எதிர்கொள்ள விடுதலைப் புலிகளிடம் போதுமான நவீன ஆயுதங்கள் இருப்பதாக பாலசிங்கம் கூறியுள்ளார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாறிவரும் தமிழீழப் போரியல்' வரலாறு

## ரிவிரெச, ஜெயசிக்குறுய் - யாழ்.குடா, தென்தமிழீழம்

சிறீலங்கா அரசினால் தமிழீழத்தில் நடாத்தப்பட்ட பெரும் இராணுவ நடவடிக்கைகளில் 'ரிவிரெச' என அழைக்கப்பட்ட யாழ். குடா ஆக்கிரமிப்பு இராணுவ நகர்வு, கிளிநொச்சி நோக்கிய வவுனியா - யாழ்.பாதை திறப்பிற்கான ஜயசிக்குறுய் இராணுவ நகர்வு போன்றவைகள் மிகவும் பாரிய இழப்புகளை ஏற்படுத்தின என கூறலாம்.

இவ் இராணுவ நகர்வுகளினால் சிறீலங்கா படைத் தலைமை இரண்டு வித இலாபங்களை அடையமுனைந்தது. ஒன்று விடுதலைப் புலிகளின் போராடும் திறனை அழித்தல்; இதன் மூலம் தான் கைப்பற்றிய பிரதேசங்களில் போலி நிர்வாகத்தை அமைத்து சர்வதேசத்தை ஏமாற்றுதல். இரண்டாவது தான் பெற்றுக் கொண்ட வெற்றிகளை சிங்கள மக்களுக்கு விளம்பரப்படுத்தி மீண்டும் வரும் தேர்தலில் வெற்றி பெறுவதுடன், தான் தயாரித்து வைத்திருக்கும் 'தீர்வுப்பொதி' எனும் ஏமாற்று வித்தையை அரங்கேற்றுதல் என குறிப்பிடலாம்.

கடந்த பதினைந்து வருடங்களாக தொடரும் சிறீலங்கா தமிழீழம் யுத்தத்தில் ஏராளமான படை நகர்வுகளை சிறீலங்கா மேற்கொண்டுள்ளது. அவற்றில் ஒருசில குறிப்பிடக்கூடிய வெற்றிகளை அவர்களுக்கு பெற்றுக் கொடுத்தன என்பதுவும் மறுக்க முடியாததுதான். தாராளமான போரியல் வளங்களைக் கொண்டு சிறீலங்காவால் நடத்தப்பட்ட இவ் இராணுவ நகர்வுகளை மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை கொண்டிருந்த விடுதலைப் புலிகள் கூடியவரை எதிர்த்துப் போரிட்டிருந்தார்கள். இவ் வகையில் ரிவிரெச, எடிபல, சத்ஜய போன்ற இராணுவ நகர்வுகளை குறிப்பிடலாம்.

'ரிவிரெச' இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ் குடாவை சிறீலங்கா கைப்பற்றிக் கொண்டது. அதே போல் சத்ஜய, எடிபல போன்றவைகளின் மூலம் ஆனையிறவு முதல் கிளிநொச்சி வரை, அதேபோல் மதவாச்சி முதல் மன்னார் வரை பிரதான பாதைகள் சிறீலங்கா படைகளின் கைகளுக்குள் வீழ்ந்தன.

ரிவிரெசவின் மூலம் யாழ். குடாவை சிறீலங்காப் படைகள் ஆக்கிரமித்துக் கொண்டபோது விடுதலைப் புலிகள் தங்கள் தளவாட வளத்தையும், ஆட்பலத்தையும் பாதுகாத்துக்கொண்டு பாதுகாப்பான நிலைகளுக்குள் நகர்ந்து கொண்டார்கள். ஆனால் சிறீலங்கா இராணுவமோ யாழ். குடாவை சிறைக்கூடமாக்கி மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தியது. குடியேற்றப் பகுதிகளை வேறு வேறாக்கி தனிமைப்படுத்தியதுடன், பாரிய இராணுவ வேலிகளையும் ஏற்படுத்தியது. இதன் மூலம் மீண்டும் விடுதலைப் புலிகள் யாழ். குடாவுக்குள் நுளைவதை தாம் தடைசெய்து விட்டதாக இராணுவம் எண்ணிக்கொண்டது. ஆனால் யாழ்குடாவை விட்டு புலிகள் சென்றால்தானே மீண்டும் வருவதற்கு!




ரிவிரெசவின் வெற்றியைத் தொடர்ந்து 'சத்ஜய' வின் மூலம் கிளிநொச்சியை சிறீலங்கா இராணுவம் கைப்பற்றிக்கொண்டது. சத்ஜய இராணுவ நகர்வை மிக தந்திரோபாயமான முறையில் எதிர்த்த விடுதலைப் புலிகள் கிளிநொச்சி நகர்ப்புறத்தை விட்டு சுற்றுவட்டாரங்களுக்கு பின்வாங்கிக்கொண்டனர். கிளிநொச்சியை சிறீலங்கா இராணுவத்தினர் கைப்பற்றிக்கொண்ட சமயம் ஒரு சிங்கள ஆய்வாளர் 'இன்று கிளிநொச்சியை கைப்பற்றிக்கொண்ட வெற்றியை எமது தளபதிகள் கொண்டாடுகிறார்கள், ஆனால் இது ஒரு குறுகிய காலத்திற்கான வெற்றியே. ஆனால் நீண்டதொரு தோல்விக்கான அறிகுறி இது' எனக் குறிப்பிட்டார்.

'ரிவிரெச', 'சத்ஜய' போன்ற படை நடவடிக்கைகளில் தான் பெற்றிருந்த வெற்றியை விடுதலைப் புலிகள் பலவீனமடைந்துவிட்டார்கள் என மதிப்பிட்ட சிறீலங்கா இராணுவத் தலைமை தமது அடுத்த நடவடிக்கையை மன்னார் நோக்கி 'எடிபல' என ஆரம்பித்தார்கள். இதன்போதும் அவர்களுக்கு எதிர்பார்த்த எதிர்ப்புக்கள் கிடைக்காததால் விடுதலைப் புலிகள் தாக்குதல் திறனை இழந்து விட்டார்கள். நாம் வெகு விரைவில் அவர்களை முற்றாக தோற்கடித்து யாழ்குடாவுக்கு கிளிநொச்சியூடாக பாதையை திறப்போம் என ஆரம்பித்த 'ஜயசிக்குறுய்' அவர்களது எண்ணத்தையும், கணிப்புக்களையும் தலைகீழாக்கி தமிழீழ போர் வளர்ச்சியில் புதியதொரு பரிமாணத்தையும் தோற்றுவித்துள்ளது. ரிவிரெசவின் மூலம் விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்டிருந்த பின்னடைவுகள் சரிசெய்யப்பட்டன. தென்தமிழீழம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துசேர்ந்தது. ஈழப் போரில் எப்போதுமே கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்காத பல பகுதிகள் இன்று விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இவற்றிற்கெல்லாம் பேருதவி புரிந்தது 'ஜயசிக்குறுய்' என்பதை சிறீலங்கா படைத் தலைவர்கள் நன்றாக உணர்ந்துதான் உள்ளனர். ஆனால் இன்றுள்ள நிலைமையில் ஒன்றுமே செய்யமுடியாது. முன்னெடுக்கப்பட்ட நகர்வினை முடித்துத்தான் ஆகவேண்டும். ஆனால் எப்போது சாத்தியமாகும் என்பதில் அவர்களுக்கே நம்பிக்கையில்லை.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை மூன்றுவாரங்களுக்குள் முடித்துவிட இராணுவம் முயன்று முடியாதகட்டத்தில் யாழ்குடாவின் பல பகுதிகளிலிருந்தும், தென்தமிழீழத்தின் சில பகுதிகளிலிருந்தும் படையினர் அப்புறப்படுத்தப்பட்டனர். இவர்களின் துணைகொண்டாவது மிக விரைவில் கிளிநொச்சியை சென்றடைய இராணுவம் முயற்சித்து தோல்வி கண்டது. இன்று ஜயசிக்குறுவுக்காக 40,000 வரையிலான படையினர் வன்னிப் பகுதியில் நிலைகொண்டுள்ளனர். கடந்த பதினொருமாத காலமாக பெரு முயற்சியெடுத்து நகர முற்படும் 'ஜயசிக்குறுய்' தன்னகத்தே பெரும் (பே)சாதனைப் பட்டியலையும் சுமந்துகொண்டுதான் உள்ளது. சிறீலங்கா இராணுவ வரலாற்றில் மிகப் பெரும் இழப்புக்களை சந்தித்த படை நகர்வு, மிகப் பெரும் தளவாட இழப்பு, அண்மைக்கால வரலாற்றில் மிக நீண்ட காலத்திற்கு நடத்தப்படும் ஒரு இராணுவ நகர்வு என்பனவற்றை இங்கு குறிப்பிடலாம்.

'ரிவிரெச' படைநகர்வை ஆரம்பித்து யாழ். குடாவை இராணுவம் கைப்பற்றிக் கொண்ட போதும், வடமராட்சியின் சில பகுதிகள், தென்மராட்சியின் சில பகுதிகள் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருந்து வந்தன. பின்னர் சத்ஜய இராணுவ நடவடிக்கையின்போது பூநகரிப் படைத்தளமும் மூடப்பட்டு படைகள் கிளிநொச்சிக்கு நகர்த்தப்பட்டன. இங்கு ஏற்பட்ட இடைவெளி விடுதலைப் புலிகளால் நிரப்பட்டது. சத்ஜயவின் மூலம் கைப்பற்றப்பட்ட கிளிநொச்சியையும் இன்று இராணுவம் இழந்துள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் அணிகள் அங்கு நிலைகொண்டுள்ளன.

அன்று ரிவிரெச படை நடவடிக்கை ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் தனியான படைப் பிரிவுகளும் நிர்வாக அமைப்பும் ஏற்பட விடுதலைப் புலிகளுக்கு வழியேற்படுத்திக்கொடுத்தது. இன்று 'ஜயசிக்குறுய்' புதிய பல படையணிகள் உருவாகுவதற்கும் போரியல் வளர்ச்சியில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் விடுதலைப் புலிகளுக்கு உதவிபுரிந்துள்ளது. யாழ். குடாவில் இன்று விடுதலைப் புலிகளின் தனியான இராணுவ, அரசியல் பிரிவுகள் இயக்குகின்றன. வடமராட்சியின் கிழக்கில் பாரிய பல அணிகள் நடமாடிக் கொண்டிருக்கின்றன.

இராணுவப் பிரிவின் யாழ். குடா தலைமையகம் அங்கு அமைக்கப்பட்டுட்ளது. அதே போன்று ஈழப்போர் I, II இன் போது கூட் முற்றான கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்காத புங்குடுதீவில் விடுதலைப் புலிகளின் யாழ். குடா அரசியல் தலைமையகம் இயங்குகின்றது.

கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில வார இதழ் ஒன்றின் கட்டுரையாளர் அண்மையில் நயினாதீவு நாகபூசணி அம்மன் கும்பாபிஷேகம் நடைபெற்றபோது அங்கு சென்ற யாழ். குடா அரச, வர்த்தக பிரமுகர்கள் புங்குடுதீவில் தரித்து நீண்ட நேர பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் நடத்தியதாக கூறுகிறார்.

**ஈழப்போரில் எப்போதுமே கட்டுப்பாட்டுக்குள் இருந்திருக்காத பல பகுதிகள் இன்று விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. இவற்றிற்கெல்லாம் பேருதவி புரிந்தது 'ஜயசிக்குறுய்' என்பதை சிறீலங்கா படைத் தலைவர்கள் நன்றாக உணர்ந்துதான் உள்ளனர்.**

தென் தமிழீழத்தை எடுத்துக் கொண்டால் மட்டக்களப்பு வாவிக்கு மேற்காக உள்ள பெரும் நிலப்பரப்பு விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. அப்பகுதியில் அப்பலாந்துறை, கொக்கட்டிச் சோலை, பட்டிப்பளை, தேனியடி போன்ற பகுதிகளில் விடுதலைப்புலிகளின் தமிழீழ நிர்வாக சேவைகள் நடத்தப்படுகின்றன.

தமிழீழ மக்களது உண்மையான ஆட்சி அன்று யாழ் குடாவில் நடந்ததானாலும் இன்று அதன் பெரும் பகுதி ஆக்கிரமிப்புக்கு உட்பட்டுள்ள நிலையில் தென்தமிழீழம், வன்னிப் பெருநிலப் பகுதி போன்றவை பெருமளவில் விடுவிக்கப்பட்டு தமிழீழ நிர்வாகம் நடைபெற்று வருகின்றது. இந் நிலையில் இவ் வருடம் யாழ் குடாவும் மீட்கப்படும் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். யாழ். குடாவில் பல பகுதிகளிலும் சென்றவார இறுதியில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் எமது மண்ணை ஆக்கிரமித்துள்ள புண்ணிய இராணுவம் மிக விரைவில் விரட்டியடிக்கப்படும் என்றும், எமது மண் மீட்கப்படும் என்றும், பொது மக்கள் சிலர் தொடர்ந்தும் துரோகிகளாக உள்ளனர், அவர்களுக்கு இது இறுதி எச்சரிக்கை எனவும் கூறப்பட்டுள்ளது.

**சத்ஜய இராணுவ நடவடிக்கையின்போது பூநகரிப் படைத்தளமும் மூடப்பட்டு படைகள் கிளிநொச்சிக்கு நகர்த்தப்பட்டன. இங்கு ஏற்பட்ட இடைவெளி விடுதலைப் புலிகளால் நிரப்பட்டது. சத்ஜயவின் மூலம் கைப்பற்றப்பட்ட கிளிநொச்சியையும் இன்று இராணுவம் இழந்துள்ள நிலையில் விடுதலைப் புலிகளின் அணிகள் அங்கு நிலைகொண்டுள்ளன.**

பாரிஸ்-17 இல்

தமிழ்ச்சோலை

கல்வி நிலையம்

சிறுவர்களுக்கான

தமிழ் வகுப்புக்கள்

ஆரம்பமாகின்றன

காலம்: 19.04.1998 ஞாயிற்றுக்கிழமை பி.பகல். 2.00 மணி
இடம்: 12bis, rue Saint Jean, 75017 Paris.
(Mº: La Fourche)
கிறிஸ்தவ தேவாலய மண்டபம்

சனி, ஞாயிறு கிழமைகளில் வகுப்புக்கள் நடைபெறும்

மேலதிக தொடர்புகட்கு: 01 40 38 30 74

பிரெஞ்சு தமிழர் சங்கம் பாரிஸ் -17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அமைச்சர் சேடப்பட்டி முத்தையா நீதிமன்ற விசாரணைக்கு உள்ளாகின்றார்!

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி செய்தபோது சட்டசபையில் சபாநாயகராக பதவி வகித்தவர் சேடப்பட்டி முத்தையா. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி அமைத்த பாரதிய ஜனதா கட்சி மத்தியில் ஆட்சி அமைக்க வாய்ப்பு ஏற்பட்டதால் அதி.மு.க. சார்பில் மூவர் மத்திய அமைச்சரானார்கள். அவர்களில் சேடப்பட்டி முத்தையாவும் ஒருவர். ஆயினும் இவர் மீதும் இவரது குடும்பத்தினர் மீதும் சுமத்தப்பட்ட அ.தி.மு.க. ஆட்சிக்கால ஊழல்களுக்கான வழக்குகள் சிறப்பு நீதிமனறத்தில் விசாரிக்கப்பட்டு வந்தன. வருமானத்திற்கும் மேலாக ரூ 46 இலட்சம் பெறுமதியான சொத்துக்களைச் சேர்த்த ஊழல் குற்றச்சாட்டு வழக்கினை லஞ்ச ஊழல் ஒழிப்புத்துறையினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இருந்தனர். இவ்வழக்கில் இருந்து தங்களை விடுவிக்கும்படி மத்திய அமைச்சரான சேடப்பட்டி முத்தையாவும் குடும்பத்தினரும் எதிர்மனு தாக்கல் செய்து இருந்தனர். ஆனால் சிறப்பு நீதிபதி இதனை தள்ளுபடி செய்துவிட்டார். பேரவைத் தலைவராக இருந்த போது சேடப்பட்டி முத்தையா வாங்கிய சொத்துக்கள் பற்றிய ஆவணங்கள் அரசு தரப்பால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதைப் பார்க்கும்போது இவர்கள் மீதான புகாரில் அடிப்படை ஆதாரம் உள்ளது தெரிகிறது என நீதிபதி தனது தீர்ப்பில் கூறியுள்ளாார்.

ஊழல் தடுப்புச்சட்டம் இந்திய தண்டனைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் மே 4-ம் திகதியிலிருந்து இவர்கள் மீதான விசாரணை தொடரும் என்று நீதிபதி தெரிவித்தார்.

# 'சார்க்' நாடுகளின் மாநாடு இலங்கையில்

தென்கிழக்காசிய நாடுகளுக்கான ஒத்துழைப்பு மாநாடு வருகிற யூலை மாதம் நடைபெறுகின்றது. இது பல விடயங்களில் முக்கியமானதாக விளங்கும் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதில் ஜோர்ச் பெர்ணான்டஸ் அவர்களைப் பாதுகாப்பு அமைச்சராகக் கொண்டுள்ள இந்தியப் பிரதமர் கலந்துகொள்வது முக்கியமானதாக அமையும். அத்துடன் பாகிஸ்தான் கோவ்ரி ஏவுகணையை தயாரித்திருக்கும் நிலையில் இந்தியா பாகிஸ்தான் பிரதமர்கள் சந்தித்துக்கொள்வதும், இந்து சமுத்திரப் பிராந்திய அரசியல் நிலையில் முக்கியத்துவம் வாய்ந்ததான அரசியல் நிகழ்வு என அவதானிகள் கருதுகின்றனர்.




# நீதி மன்றத்தின் கிடுக்குப்பிடி பதவி இழக்கிறார் சேடப்பட்டி!

பாரதிய ஜனதா கட்சியின் தரைவழி போக்குவரத்துச்சபை அமைச்சர் சேடப்பட்டி முத்தையா மீதான குற்றச்சாட்டு



நீதி மன்றத்தால் ஏற்கப்பட்டு வழக்கு விசாரணை உறுதிசெய்யப்பட்டதானது, டெல்லி அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஊழல் குற்றம் சாட்டப்பட்ட மந்திரியை வைத்துக்கொண்டு வாஜ்பாய் எப்படி ஊழலற்ற அரசை வழங்கப்போகிறார் என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் சபையில் கேள்வி எழுப்பினார். இதனால் வாஜ்பாய் தர்ம சங்கட நிலைக்கு உள்ளானார். உடனடியாக அதி.மு.க. தலைவர் செல்வி ஜெயலலிதாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமை பற்றி எடுத்துரைத்தார். சேடப்பட்டி உடனடியாக பதவி விலக வேண்டும். அவருக்குப் பதிலாக வேறொருவரைப் பரிந்துரை செய்யுங்கள் என வாஜ்பாய் கேட்டுக்கொண்டார். ஆனால் ஜெயலலிதா சிலவற்றைப் பேசி சமாளிக்க முனைந்தார். ஆனால் வாஜ்பாய் திட்டவட்டமாகப் பேசியதால் ஜெயலலிதாவுக்கு வேறுவழி இல்லாமல் போனது.


அதனால் மதுரை ரெயிலில் பயணம் செய்துகொண்டிருந்த அமைச்சர் சேடப்பட்டியை தொடர்புகொண்ட ஜெயலலிதா, வாஜ்பாயிடம் பதவி விலகல் கொடுக்குமாறு உத்தர



விட்டார். சேடப்பட்டிக்குப் பதிலாக திண்டுக்கல் சீனிவாசனை மத்திய அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ளுமாறு பரிந்துரை செய்துள்ளார் ஜெயலலிதா.

# தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி டெல்லியில் பிரதமருடனும், குடியரசுத் தலைவருடனும் சந்திப்பு

கருணாநிதியின் டெல்லி வருகை, மரியாதை நிமித்தமாக பிரதமரைச் சந்திப்பதற்காகவே என அவரால் கூறப்பட்ட



போதிலும் இந்தச் சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் தமிழகத்தில் ஆட்சியிலுள்ள தி.மு.க. அரசைப் பதவி நீக்கம் செய்யவேண்டும் என அ.தி.மு.க. கோரி வருகின்ற நிலையிலும் ராஜீவ் காந்தி கொலையில் தி.மு.க. விற்கு தொடர்பில்லை என்று ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகி உள்ள பின்னணியிலும் இச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. அரசியலில் மாறுபட்ட இடங்களில் இருந்தாலும் கருணாநிதியும் வாஜ்பாயும் பல ஆண்டுகளாக நல்ல நண்பர்களாக உள்ளனர். அந்த வகையில் தனது நீண்டகால நண்பரை சந்தித்ததாக கருணாநிதி கூறினார்.



மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை பலம் கொண்ட மாநில அரசுக்கு எதிராக மத்திய அமைச்சர்கள் சிலர் தொடர்ந்து வெளியிட்டு வரும் கருத்துக்கள் ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிராக உள்ளதாகச் சுட்டிக்காட்டிய கருணாநிதி, இதனைப் பிரதமரிடமும் குடியரசுத் தலைவரிடமும் தான் எடுத்துரைத்ததாயும் கூறினார்.

தமிழக அரசை நீக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தங்கள் காரணமாக மத்திய அரச முடிவு செய்தாலும் அதைச் செயற்படுத்துவதைக் குடியரசுத் தலைவர் அனுமதிக்கமாட்டார் என கருணாநிதி நம்புவதாக அவரது நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பாகிஸ்தான் தயாரித்துள்ள அதிநவீன ஏவுகணை இந்தியா - பாகிஸ்தான் ஏவுகணைப் போட்டி

இந்தியாவின் ஏவுகணைகளுக்குப் போட்டியாக பாகிஸ்தான் 'கோவ்ரி' என்ற அதிநவீன ஏவுகணையை தயாரித்துப் பரிசோதனையில் வெற்றியும் பெற்றுள்ளது. ஏறத்தாழ 1500 கிலோ மீற்றர் தூரம் பறந்துசென்று தாக்கும் திறன்படைத்தது இந்த ஏவுகணை.

இந்தியா ஏற்கனவே குறுகிய தூரம் பாய்ந்து தாக்கும் ஏவுகணைகளையும், தொலை தூரம் பறந்து தாக்கும் ஏவுகணைகளையும் தயாரித்துக் கையிருப்பில் வைத்துள்ளது. இந்நிலையில் தான் தயாரித்துள்ள கோவ்ரி ஏவுகணைகளை இந்தியாவின் முக்கிய நகரங்களை குறிவைத்து தனது எல்லைகளில் நிறுவ பாகிஸ்தான் திட்டமிட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இது குறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஹோகர் அயூப் பி.பி.சி. தொலைக்காட்சிக்களித்த பேட்டியில் கூறியதாவது, 'கோவ்ரி ஏவுகணையை நாங்கள் தயாரித்து இருப்பதால் இந்தியாவுடனான பதட்டம் தணியும். எங்களிடம் ஏவுகணை இருப்பதனை இந்தியா உணரும் போது இரு நாடுகளிடையே நடக்கும் பேச்சுவார்த்தையும் சமத்துவம் பெறும். மிரட்டல் விடுவது நிறுத்தப்படும்' என்று தெரிவித்தார்.

பாகிஸ்தானின் இவ் ஏவுகணைத் தயாரிப்புப் பற்றி இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கருத்துத் தெரிவிக்கையில், கோவ்ரி ஏவுகணை சோதனையால் இந்தியாவின் பாதுகாப்புக்கு எவ்வித ஆபத்தும் இல்லை. எந்த விலை கொடுத்தாவது இந்தியாவின் ஒருங்கிணைப்பைப் பாதுகாப்போம் நாம் எனக் கூறினார்.

# ஏப்ரல் 24-இல் தமிழ்நாடு முதல்வரை முற்றுகையிடும் போராட்டம் 52 தமிழியக்கங்கள் கூட்டாக அறிவிப்பு!

அனைத்து நிலைகளிலும் தமிழே ஆட்சி மொழி, பயிற்று மொழியாக இருக்க வேண்டும்



என்ற கோரிக்கையை முன்வைத்து சட்டப்பேரவை வளாகத்தில் முதல்வரை முற்றுகையிடும் போராட்டம் ஒன்றினை ஏப்ரல் 24-இல் நடாத்தப்போவதாக 52 தமிழியக்கங்கள் கூட்டாக அறிவித்துள்ளன. பேராசிரியர் தமிழண்ணல் தலைமையில் நடாத்தப்படவுள்ள இப் போராட்டத்தில் முன்வைக்கப்படவுள்ள மற்றும் கோரிக்கைகளாவன, ஆங்கில மழலையர் பள்ளி உட்பட அனைத்துப் பள்ளிகளிலும் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழே பயிற்று மொழியாகவும், பாட மொழியாகவும் அமைய வேண்டும். வரும் கல்வியாண்டிலிருந்து தமிழ் வழிக்கல்வி நிறுவனங்களைத் தொடங்க வேண்டும்.

தமிழ் வழியில் படித்தவர்களுக்கே வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டு கோவ்ரி என்பவையாகும்.

# இந்தியாவின் அக்னி ஏவுகணை பாதுகாப்புத்துறை அமைச்சர் விளக்கம்!

பாகிஸ்தான் 1450 கி.மீ. தொலைவில் உள்ள இலக்கைச் சென்று தாக்கவல்ல ஏவுகணையைத் தயாரித்துள்ளது. இச் சூழ்நிலையில் இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் அவர்களிடம் நிருபர்கள் அக்னி ஏவுகணை குறித்து கேள்விகள் எழுப்பினர். அப்போது அவர் கூறியதாவது:

அக்னி ஏவுகணை 2500 கி.மீ தொலைவிலுள்ள இலக்கைச் சென்று தாக்கவல்லது. இதனை மேலும் மேம்படுத்துவது குறித்து உரிய நேரத்தில் முடிவு எடுக்கப்படும். அக்னி ஏவுகணை ஏற்கனவே மூன்றுமுறை சோதித்து பார்க்கப்பட்டுள்ளது. மேலும், சோதனை நடாத்த வேண்டிய தில்லை.

பாகிஸ்தான் ஏவுகணை தயாரிப்புக்கு அனைத்து உதவிகளையும் சீனா அளித்துள்ளது. எனினும் இது குறித்து இந்தியா கவலைப்படவில்லை.

ஏனெனில் இந்தியாவிடம் பிருதிவி ஏவுகணை உள்ளது. அது பாகிஸ்தானில் எந்த இலக்கையும் சென்று தாக்கவல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரிகா அரசின் ஒத்துழைப்புடன் கொழும்பில் இருந்து பாகிஸ்தான் உளவு நிறுவனம் செயல்படுகிறது!

## தமிழக குண்டு வெடிப்புகள் பற்றி பரபரப்பு தகவல்கள்!!

பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நாசவேலைகளை நடாத்துவதற்குத் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டில் மட்டும் வடகிழக்கு மாநிலங்கள், காஷ்மீர் நீங்கலாக இந்தியாவின் பிற மாநிலங்களில் 60-ற்கும் மேற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. தலைநகர் டில்லியில் 38 சம்பவங்களும், மும்பையில் 3 சம்பவங்களும், தமிழ் நாட்டில் உள்ள கோவையில் 13 சம்பவங்களும் ஜம்முவில் 6 சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. இந்தியாவில் இச்சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்தியாவிற்குள் பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. உளவாளிகள் எப்படி ஊடுருவி வருகிறார்கள் என்பதைப் பற்றி பல திடுக்கிடும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. ஜம்மு பகுதி, குஜராத்தில் உள்ள கட்சரன் பகுதி, மற்றும் நேபாளம் வழியாக அவர்கள் இந்தியாவிற்குள் ஊடுருவி வருகிறார்கள். கட்டுக்கட்டாக பணத்தை வாரி இறைத்து ஆள் பிடிக்கிறார்கள். குண்டு வைத்தல், குண்டுகள் தயாரித்தல் போன்றவற்றிக்குப் பயிற்சி கொடுக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இதுவரை ஐ.எஸ்.ஐ.யின் நாசக்கரங்கள் நீளாமல் இருந்தன. ஆனால் கோவை குண்டுவெடிப்பு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து எந்த அளவிற்கு ஐ.எஸ்.ஐ. தமிழ்நாட்டில் ஊடுருவி இருக்கிறது என்பது வெட்டவெளிச்சமாகி இருக்கிறது. பாகிஸ்தான் எல்லைகளையொட்டி தமிழகம் இருக்கவில்லை. ஜம்முவில் இருந்தோ நேபாளத்திலிருந்தோ குஜராத்தில் இருந்தோ, தமிழ் நாட்டிற்குள் நேரடியாக ஊடுருவ முடியாது. எனவே, ஐ.எஸ்.ஐ. தமிழ் நாட்டில் தனது நாசவேலை நடாத்துவதற்குரிய களமாக சிறீலங்காவைத் தேர்ந்தெடுத்து இருக்கிறது.

சிறீலங்காவின் தலைநகர் கொழும்பிலிருந்து ஐஎஸ்ஐ. இயங்குவதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. தமிழ்நாட்டில் நாசவேலைகளைச் செய்வதற்கு உரியவர்களை தேர்ந்தெடுத்து கொழும்பிற்கு அழைத்துச்சென்று அவர்களுக்கு பயிற்சி அளிக்கப் படுவதாகத் கூறப்படுகிறது. ஏற்கனவே, சிங்கள அரசு தமிழர்களுக்கு எதிரான அரசு என்பதால் தமிழ்நாட்டில் நாசவேலைகள் நடாத்த ஐ.எஸ்.ஐ. கொழும்பிலிருந்து செயல்பட சிங்கள அரசு அனுமதித்துள்ளது. சிங்கள அரசின் கையாட்களாக பல தமிழ் குழுக்கள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. இந்தக் குழுக்களையும் ஐ.எஸ்.ஐ. தனது நோக்கத்திற்கு பயன்படுத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. சில மாதங்களுக்கு முன்பாக சென்னை விமான நிலையத்தில் லட்சக் கணக்கில் டாலர்களை வைத்திருந்த சங்கர் ராஜி என்றழைக்கப்படும் திரு. நேசன் என்பவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். சிங்கள அரசின் ஆதரவில் செயல்படும் தமிழ்க் குழு ஒன்றின் தலைவரான இவர் லண்டனில் இருந்து வந்தபோது பிடிபட்டார். தான் கொழும்பு செல்வதற்காக வந்ததாக இவர் கூறினார். ஆனால், லண்டனிலிருந்து நேரிடையாக கொழும்பு செல்லாமல் இவர் தமிழகத்திற்கு வந்தது ஏன் என்ற கேள்வி எழுந்தது. இவர் கொண்டு வந்த பணம் தமிழ் நாட்டில் விநியோகம் செய்வதற்காக கொண்டுவந்த பணமா என சந்தேகம் எழுந்தது. யாருக்காக? யாரால்? இந்தப் பெருந்தொகையை அளிக்க அவர் வந்தார் என்பதைப் பற்றிய சகல விபரங்களும் மறைக்கப்பட்டன. அவர் மீது வழக்குப் போடப்பட்டதா? அல்லது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைப் பற்றிய சகல விபரங்களும் தெரியவில்லை. அவரை விடுவிக்க இந்திய உளவுத்துறை 'ரோ' அதிகாரிகள் முயற்சி செய்ததாகவும் கூறப்பட்டது. சிறீலங்காவில் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான பொலிஸ் அதிகாரியாகப் பணியாற்றிய டக்ளஸ் போர்ஸ் என்பவர் போட்டி தமிழ்க் குழுக்கள் அனைத்திடமும் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தவர்.



சந்திரிகா ஜனாதிபதியாக பதவி ஏற்றவுடன் இவர் மீது கொலைக் குற்றங்கள் சுமத்தி கைதுசெய்வதற்கு முயற்சி செய்தார். அதிலிருந்து தப்பிய இவர் தற்போது சென்னையில் மறைந்து வாழ்வதாகக் கூறப்படுகிறது. ஐ.எஸ்.ஐ. கையாளாக இவர் ஆகியிருக்கலாம் எனவும் தமிழக குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கும் இவருக்கும் ஏதேனும் தொடர்பு இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் ஈழத் தமிழர்கள் ஆதரவு உணர்வு வளரக்கூடாது என்று சிங்கள அரசு நினைக்கிறது. அப்படி வருமேயானால், தமிழ் நாட்டின் நிர்ப்பந்தத்திற்கு இந்திய அரசு பணிய வேண்டிய அவசியம் ஏற்படும். அத்தகைய நிலை உருவாவது தனக்குப் பாதகமாக முடியும் என்று சிங்கள அரசு அஞ்சுகிறது. எனவே, தமிழ்நாட்டில் சாதி. மதக் கலவரங்களை ஏற்படுத்தி தமிழர்கள் ஒன்றுபடமுடியாமல் தங்களுக்குள்ளேயே மோதிக்கொள்ளும் நிலை உருவாக வேண்டும் என சிங்கள அரசு நினைக்கிறது. இந்தியாவில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படாமல் இருக்க



வேண்டுமானால் மதக் கலவரங்கள் நடைபெற வேண்டும் என பாகிஸ்தான் விரும்புகிறது. இரண்டு அரசுகளின் நோக்கங்களும் ஏறத்தாழ ஒன்றாக இருப்பதின் காரணமாக பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. கொழும்பிலிருந்து செயல்படுவதற்கு சிங்கள அரசு அனுமதித்துள்ளது. இதற்கு பதிலாக சிங்கள அரசுக்கு இராணுவத் தளவாடங்களை வழங்குவதற்கு பாகிஸ்தான் முன்வந்து இருக்கிறது. அண்மையில் சிங்கள பாதுகாப்புத்துறை அமைச்சர் ரத்வத்தை பாகிஸ்தான் சென்று ஆயுதங்களைப் பெறுவது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்தித் திரும்பியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வரண்ட நிலத்துக்கான குடிநீர்க் கனவு உப்பு நீரை நன்னீராக்கும் திட்டம் தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வருகின்றது!

தமிழ் நாட்டில் இராமநாதபுரம் மாவட்டம் குடிநீர் பற்றாக் குறையான வரண்ட மாவட்டங்களில் முதன்மையானதாகும். இம் மாவட்டத்தில் நிலவிவரும் நீண்ட கால குடிநீர்ப்பிரச்சனைக்கு தீர்வு காண கடல்நீரை குடிநீராக்குதல், நிலத்தடி நீரை குடிநீராக்குதல் ஆகிய திட்டங்களை தமிழ்நாடு அரசு தீட்டியிருந்தது. இத்திட்டத்தை நிறைவேற்றும் பணி பாரத மிகு மின் நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

இத்திட்டத்திற்கு 56 கோடி ரூபா ஒதுக்கப்பட்டு 1996-ம் ஆண்டு செம்டெம்பரில் நிர்மாணப்பணிகள் தொடங்கப்பட்டன. நாளொன்றிற்கு 38 இலட்சம் லீற்றர் குடிநீரை கடல் நீரிலிருந்து உற்பத்தி செய்யும் இத் திட்டத்தின் நிர்மாணப்பணிகள் ஜூன் மாத வாக்கில் முடித்து வைக்கப்படவுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நரிப்பையூர் என்னுமிடத்தில் கடற்கரையிலிருந்து 440 மீற்றர் தூரம்வரை குழாய் அமைக்கும் பணியும், கடலுக்குள் கிணறு வடிவிலான தொட்டி அமைக்கும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளன.

கடல் நீரிலிருந்து மாற்று சவ்வூடு பரவுதல் முறையில் சுத்தமான குடிநீர் பிரித்தெடுக்கப் படுகிறது. குடிநீரைச் சேமிக்க 10 இலட்சம் லீற்றர் கொள்ளளவு கொண்ட 2 பிரமாண்ட தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. குடிநீரைப் பிரித்தெடுத்த பின்னர் எஞ்சும் உப்பு நீரை மீண்டும் கடலில் விட இராட்சத குழாய்கள் பதிக்கப்படுள்ளன. கடல் நீரை குடிநீராக்க 1000 லீற்றருக்கு ரூபா 100 செலவாகு [illegible]

# வாய் மொழிகளும் கொசுறுச் செய்திகளும்

☺ நம் தென்னிந்தியாதான் (சென்னை ஹைதராபாத் பெங்களூர்) உலகிலேயே சாப்ட்வேர் தயாரிப்பில் முன்னணியில் நிற்கின்றது. காரணம் இந்தியர்கள் சாப்ட்வேரில் திறமையானவர்களாய் விளங்குவதுதான்.

*- சில்வர்லைன் நிறுவனத்தின் துணைத்தலைவர் பி.எஸ். கார்த்திகேயன் பெண்மணி மாதர் இதழுக்கு அளித்த பேட்டியில்*

❀ ❀ ❀

☺ நாம் இன்று அறிவியல் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை விட ஆபாசங்கள் மலிந்த அருவெருப்பான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றால் பொருத்தமாக இருக்கும். பெண் என்றால் அன்பு, தாய்மை, தெய்வம், சக்தி என்ற கருத்தோட்டமெல்லாம் கடந்து பெண்களென்றால் 'பிகர்' என்று சொல்லுமளவிற்கு ஒரு காட்சிப் பொருளாக கவர்ச்சியின் களமாக விளம்பர பொம்மைகளாக கருதும் ஒரு மலிவான மதிப்பீடு நிலவுகின்றது.

*- பெண்மணியில், டாக்டர் மு. வளர்மதி ஆராய்ச்சி உதவியாளர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*

❀ ❀ ❀

☺ எயிட்ஸ் நோயை மெலிவு நோய் என்றழைக்கிறார்கள் ஆபிரிக்கர்கள். இந்தநோய் முற்றும் போது உடல் வேகவேகமாக இளைக்கின்றது. இதை அடையாளமாக வைத்து எயிட்ஸை மட்டுமே தேய்வு நோய் என்று அழைக்கிறார்கள் தமிழ் மருத்துவர்கள். இரத்தம், விந்து இவற்றின் மூலமாக மட்டுமே தேய்வு பரவுகிறது.

*- நக்கீரனில் எயிட்ஸிக்கு தமிழ் மருந்து எனும் கட்டுரை*

❀ ❀ ❀

☺ பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் உணர்வாளர்கள் மட்டுமே காவல் துறையில் கண்காணிக்கப்பட்டு வந்தனர். தமிழ் உணர்வாளர்களின் கூட்டத்திற்கு அரசு தடை விதித்துவந்தது. அவர்கள் மீது பொய்வழக்குப் போட்டது. உண்மையான தமிழர்களையே விரட்டி விரட்டி வேவு பார்த்த காவல்துறைக்கு ஜாதி, மத வெறியர்களின் செயல்பாடு குறித்து கவனிக்க நேரம் இல்லாமல் போனது. ஆகவே, கடந்த காலத்தில் எந்த ஜாதி மத வெறியர்கள் மீதும் அரசு வழக்கு போடவில்லை. இதனால்தான் ஜாதி, மத மோதல்கள் தமிழகத்தில் வெடித்துள்ளது. இப்போது குதிரை களவு போனபின் காவல்துறை லாயத்தை பூட்டிக்கொண்டிருக்கிறது.

*- தமிழன் எக்ஸ்பிரஸ் கேள்வி ஒன்றுக்கு பழ.நெடுமாறன் பதில்*

❀ ❀ ❀

☺ எனக்குத் தெரிந்த ஒரே ஒரு தொழில் சினிமாதான். இதைக்கூட நான் இன்னும் முழுமையாக கற்றுக்கொள்ளவில்லை. தொழிலாளர்கள் இல்லாமல் இந்த சினிமாத் தொழில் நடக்காது.... லைட் போடத் தெரிந்திருக்க வேணும், கயிறு இழுத்துக்கட்ட தெரிந்திருக்க வேண்டும். அனுபவம் வேண்டும். என்னை கீழே போட்டு மிதிக்கக்கூடிய அனுபவமில்லாதவர்களுடன் எப்படி வேலை பார்க்க முடியும்? அனுபவம் என்பது ஓவர் நைட்டில் வந்து விடுவதில்லை. புத்தகத்தைப் பார்த்து தெரிந்துகொள்ளும் சங்கதி இல்லை. நாற்பது வருட அனுபவமுள்ளவர்களின் அனுபவத்தை நான் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றேன். அவர்களிடம் நான் பாடம் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

*- நடிகர் கமல்ஹாசன் கூறியதாக தேவி இதழில்.*

❀ ❀ ❀

☺ 'பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த புலவர் பெருமானே' என்று எம்.ஜி.ஆரைப் பார்த்து தேவிகாவினால் அன்று பாட முடிந்தது. இன்று யாராவது ரஜினியை பார்த்து அப்படி பாடமுடியுமா? திரையை கிழித்து விடுவார்கள். இன்று இமேஜுக்குத்தான் மரியாதை.

*- விஜய் தொலைக்காட்சியில் கூறப்பட்டதாக தேவி இதழில்*

❀ ❀ ❀

☺ பா.ஜ.கூட்டணி அரசுக்கு ஆதரவளிப்பதால் 15 ஆண்டுகால உறவை முறித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

*- தெலுங்கு் தேசிய கட்சியுடனான உறவு பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆந்திர பிரதேச மாநில செயலாளர் கூறியதாக தினமணியில்*

❀ ❀ ❀




நன்றி: நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜோர்ஜியா: எதிர்க்கட்சி பிரமுகரின் மரண ஊர்வலத்தில் துப்பாக்கிச்சூடு 5 பேர் பலி 8 பேர் காயம்

(மொஸ்கோ - ஏப்ரல் 7)

முன்னாள் சோவியத் குடியரசில் ஒன்றான ஜோர்ஜியாவில் எதிர்க்கட்சிப் பிரமுகர் ஒருவரின் மரண ஊர்வலம் நடைபெற்ற போது, இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 5 பேர் கொல்லப்பட்டதுடன், 8 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜோர்ஜியாவின் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவான கோஷா எஸபுவா என்ற நபர் தன்னுடைய சகாக்களுடன் சேர்ந்து அண்மையில் ஐ.நா. ஊழியர்களை கடத்திச் சென்று பணயம் வைத்திருந்தார்.

ஜோர்ஜிய பொலிசார் ஒரு வார கால முற்றுகையின் பின் அதிரடித் தாக்குதல் நடாத்தி பணயக் கைதிகளை மீட்ட போது, எஸபுவா கொல்லப்பட்டார்.

நேற்றைய தினம் நடந்த அவரது மரண ஊர்வலத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். அந்த மரண ஊர்வலம் மயானத்தை அண்மித்த வேளையில் இனந்தெரியாத நபர்கள் ஊர்வலத்தில் வந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு கைக்குண்டு வீசியும் தாக்கியுள்ளனர்.



# மெக்கா நெரிசலில் அகப்பட்டு ஹஜ் பயணிகள் 150 பேர் பலி

மெக்கா அருகே நெரிசலில் சிக்கி 150 ஹஜ் பயணிகள் உயிரிழந்துள்ளனர். வியாழக்கிழமை பகல் இந்த சோகச் சம்பவம் நடைபெற்றது. இறந்தவர்களில் 50 பேர் இந்தியர் என ரியாட்டில்தில் இருந்து வெளியான செய்தி தெரிவிக்கிறது. புனித நகரான மெக்காவிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள மினா நகரிலுள்ள இராணுவ முகாமிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அல் சாம்ராட் என்ற பகுதியில் இருக்கும் தூண்கள் மீது கல்லெறிதல் சம்பவம் ஹஜ் பயணத்தின்போது நடைபெறுவது வழக்கம்.

'சாத்தான் மீது கல்லெறியும்' இந்த மத நிகழ்ச்சி வியாழக்கிழமை நடந்துகொண்டிருந்தது. அதைக்காண பாலம் ஒன்றில் ஒருவரை ஒருவர் முந்திச்செல்ல முயன்றனர். இதையடுத்து நெரிசல் ஏற்பட்டது. நெரிசலில் மிதிபட்டு உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் வயதானவர்கள். சம்பவம் நடந்த இடம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. இறந்தவர்கள் எத்தனை பேர்; அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது பற்றிய விபரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

நெரிசலில் சிக்கியவர்களைக் காப்பாற்றவும் அவர்களுக்கு தேவையான உதவிகளை அளிக்கவும் பாதுகாப்பு படையினர் அங்கு பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளனர். ஹஜ் வரலாற்றில் இத்தகைய சம்பவம் நடைபெறுவது இது 3-வது முறையாகும். 1991-ம் ஆண்டு ஜூலை 2-ம் திகதி மெக்காவில் ஏற்பட்ட திடீர் நெரிசலில் ஏறக்குறைய 1426 பேர் உயிரிழந்தனர். இவர்கள் மலேசியா, இந்தோனேசியா, பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

1994-ம்ஆண்டு மே 23-ம் திகதி இதேபோன்று ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 270 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தோனேசியர்கள். கடந்த ஆண்டு மினாவில் ஏற்பட்ட தீவிபத்தில் 343 ஹஜ் பயணிகள் உயிரிழந்தனர். இவர்களில் 100 பேர் இந்தியர்கள். இம்முறை முன்னெச்செரிக்கையாக 40 ஆயிரத்துக்கும் அதிகமான தீப்பிடிக்காத கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த ஆண்டு சுமார் 10 இலட்சம் பேர் ஹஜ் யாத்திரைக்கு வந்துள்ளனர்.

# பொல்பொட்டை கைதுசெய்ய அமெரிக்க உத்தரவு! மூன்றாம் நாடொன்றில் யுத்தக் குற்ற விசாரணை?

(நியூயோர்க் - ஏப்ரல் 9)

கம்போடியாவினதும், கமர் ரூஷ் இயக்கத்தினதும் முன்னாள் தலைவரும், தற்போது தாய்லாந்தில் தலைமறைவாக இருப்பவருமான பொல்போட்டை கைதுசெய்யுமாறு அமெரிக்க அதிபர் பில்கிளின்டன் எழுத்து மூலமாக தாய்லாந்து அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாக இன்று வெளியான 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

10 இலட்சத்துக்கும் அதிகமான கம்போடிய மக்கள் கொலை செய்யப்பட காரணமாக இருந்தவர் என்ற வகையில் பொல்பொட்டை கைது செய்து தாய்லாந்து, கம்போடியாவை தவிர்ந்த மூன்றாவது நாடு ஒன்றுக்கு நாடு கடத்தி அங்கு அவர்மீது யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்று பில்கிளின்டன் விரும்புவதாக தெரிவிக்கும் அந்தப் பத்திரிகை, 'தங்கள் நாட்டில் தலைமறைவாக இருக்கும் பொல்பொட்டை தங்களால் கைதுசெய்ய முடியும் என்றும் ஆனால் அவரை உடனே இன்னொரு நாட்டுக்கு கடத்திச் செல்ல அமெரிக்கா தயாராக இருக்கவேண்டுமென்று தாய்லாந்து அரசாங்கம் நிபந்தனை விதித்துள்ளதென்று பெயர் குறிப்பிட விரும்பாத மேற்குலக ராஜதந்திரிகள் கூறியுள்ளனர் என்று தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளது.

கம்போடியாவில் கம்யூனிச ஆட்சி நடைபெற்ற காலத்தில் நாட்டின் தலைவராகவும் கமர் ரூஷ் புரட்சிப் படைகளின் தலைவராகவும் இருந்த பொல் பொட், மறைந்த சோவியத் தலைவர் ஸ்டாலின் பாணியில் தன்னுடைய கருத்துக்கு முரண்பட்ட மக்களை கம்யூனிசத்தின் எதிரிகள் என்று கூறி கொலை செய்ய உத்தரவிட்டார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பொல் பொட்டின் ஆட்சிக்காலத்தில் ஒரு மில்லியனுக்கு அதிகமான மக்கள் காணாமல் போயிருப்பதாகவும் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

# அமெரிக்காவில் AK 47 உட்பட 58 வகையான ஆயுதங்களுக்கு தடை

ரஷ்யத் தயாரிப்பான AK47 ரக தானியங்கித் துப்பாக்கி உட்பட 58 வகையான தாக்குதல் ஆயுதங்களை இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

வெள்ளை மாளிகையின் ரோஜாத்தோட்டத்தில் சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் மத்தியில் இடம்பெற்ற ஒரு வைபவத்தில் ஜனாதிபதி பில்கிளின்டன் இந்த அறிவிப்பை வெளியிட்டார். அமெரிக்காவின் அரசியல் சட்டப்படி தனி நபர்கள் ஆயுதங்களை வைத்திருப்பதற்கு உரிமையுண்டு. ஆனால் சமீப காலமாக இளைய தலைமுறையினர் மத்தியில் ஆயுத வன்முறைகள் அதிகரித்திருப்பதை அடுத்து இந்த தடை உத்தரவை அமெரிக்கா பிறப்பித்திருக்கிறது.

ஆயினும் இத்தகைய ஆயுதங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்திருக்கும் கிளின்டன் நிர்வாகம், அவற்றை உற்பத்தி செய்வதற்கு தடை விதிக்கவில்லை என்பது மிக முக்கியமானது. இறக்குமதித் தடை விதிக்கப்பட்டுள்ள இந்த 58 வகை ஆயுதங்களில் பெரும்பாலானவை அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுவதும் உலகளாவிய ரீதியில் அவற்றுக்கான மிகப் பெரிய உற்பத்தியாளராக அமெரிக்காவே இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# துருக்கியில் ஹிஸ்புல்லா கெரில்லாக்கள் கைது

(இஸ்தான்புல் - ஏப்ரல் 6)

துருக்கியின் தென்கிழக்கு மாநிலமான தியார் பாகிரில் ஹிஸ்புல்லா கெரில்லா அமைப்பைச் சேர்ந்த 70 பேரை துருக்கிப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

துருக்கியில் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் முதல் கட்டமாக 'ஹிஸ்புல்லா'க்களின் பகுதி சுற்றி வளைக்கப்பட்டு அதன் உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டதாக துருக்கிய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட கெரில்லாக்கள் துருக்கியில் இயங்கும் 'ஹிஸ்புல்லா' அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், லெபனானில் இயங்கும் ஈரானிய ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இவர்களுக்கும் தொடர்பில்லை என்றும் துருக்கியின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து பல்வேறு ரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்த தகவல்களின் படி இன்னும் 1000 பேர் பற்றிய விபரங்களை தாங்கள் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரான்சில் சிலவகை பாலாடைகட்டிகள் விற்பனைக்கு தடை தொற்றுநோய் கிருமிகள் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

(பாரிஸ் - ஏப்ரல் 11)

Leduc என்னும் பெயருடைய சில வகை பாலாடைக் கட்டிக்ளை விற்பனை செய்வதற்கு பிரான்ஸ் அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

ஏப்ரல் 11 முதல் மே 1-ம் திகதிவரை பாவனைக்கால அடையாளமிடப்பட்ட 'Leduc' வகை பாலாடைக் கட்டிகளை பரிசோதனை செய்தபோது அதில் Listeria என்ற தொற்று நோய்க்கிருமிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் கிருமிகள் ஆபத்தான நோய்களை உருவாக்கக்கூடியவை என்றும், பலவீனமானவர்களுக்கு உயிராபத்தைக்கூட ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு தாக்கத்தை கொடுக்கக்கூடியவை என்றும் கருதப்படுவதால் இந்த வகை பாலாடைக்கட்டிகளை விற்பனையில் இருந்து நீக்கி விடுமாறு பிரான்ஸ் விவசாயத் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

ஏற்கனவே இந்தவகை பாலாடைக் கட்டிகளை கொள்வனவு செய்தவர்கள் அவற்றைக் கொள்வனவு செய்த கடைகளில் திருப்பிக்கொடுக்குமாறும் கேட்கப் பட்டுள்ளனர்.

ரவி வாகனசேவை

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ளவேண்டியது

தொலைபேசி: 0148765190 அல்லது 0607622689

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொசாத்துக்கு புதிய தலைவர் நியமனம்

(டெல் அவி - ஏப்ரல் 8)

இஸ்ரேலிய அரசாங்கம் தனது உளவுப் படையான மொசாத்துக்கு புதிய தலைவர் ஒருவரை உத்தியோகபூர்வமாக நியமனம் செய்துள்ளது.

அண்மைக்காலமாக 'மொசத்' அமைப்பு மேற்கொண்ட பல் உறவு நடவடிக்கைகள் தோல்வியில் முடிந்ததை அடுத்து, அதன் தலைவர் பதவி விலகியிருந்தார். தற்போது மொசாத்தின் புதிய தலைவராக Ephrgin Halévy என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று உள்ளூர், மற்றும் சர்வதேச தகவல் தொடர்புச் சாதனங்களின் பார்வையில் இருந்து மறைத்து, மிக இரகசியமாக இஸ்ரேலிய தலைநகர் டெல் அவியில் நடந்த ஒரு விழாவில் அவரது பதவி ஏற்பு வைபவம் நடைபெற்றது. இஸ்ரேலிய தலைமை அமைச்சர் பெஞ்சமின் நத்தன்யாகு இந்தப் பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைத்தார்.

இதற்கிடையில் பாலஸ்தீன 'ஹமாஸ்' இயக்கத்தின் இரகசிய இராணுவ அமைப்பான 'எசடின் எல் கசாம்' (Ezzedine El Kassam) என்ற அமைப்பு இன்று சர்வதேச பத்திரிகை நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்துள்ள 'ஒளி நாடாவில்' தங்கள் தலைவர் மோஹியடீன் எல். ஷரிப்பை கொலை செய்ததற்காக இஸ்ரேலிலுள்ள யூதக் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

# துப்பாக்கியுடன் வகுப்புக்குச் சென்ற எட்டு வயது மாணவன்

(நியூயோர்க் - ஏப்ரல் 8)

நியூயோர்க் நகரத்திலுள்ள ஆரம்பப் பாடசாலையில் 8 வயது மாணவன் ஒருவன் துப்பாக்கியுடன் சென்றதை அடுத்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

முதலில் அவன் வைத்திருப்பது விளையாட்டுத் துப்பாக்கி என்று நினைத்திருந்த அவனது ஆசிரியர், தற்செயலாக அதனை வாங்கிப் பார்த்தபோது, அது உண்மையான துப்பாக்கி என்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளார்.

0.32 ரகத்தைச் சேர்ந்த அந்தத் துப்பாக்கியில் குண்டுகள் வேறு நிரப்பப்பட்டிருந்தன. உடனடியாக அதை அந்த மாணவனிடமிருந்து பறிமுதல் செய்த ஆசிரியர் - பொலிசாருக்கு தகவல் கொடுத்தார்.

பொலிசார் அந்த மாணவனிடம் நடத்திய விசாரணையில், அவன், தான் அந்தத் துப்பாக்கியை புற்கள் நிறைந்த தோட்டம் ஒன்றில் கண்டெடுத்ததாகவும், தனது குடும்பத்தினர் எவருக்கும் அது சொந்தமானதல்ல என்றும், இரண்டு நாட்களாக தான் அதை பாடசாலைக்கு எடுத்து வந்ததாகவும் தெரிவித்துள்ளான்.

தற்போது தடுத்துவைக்கப் பட்டுள்ள அந்த மாணவன் மீது குடும்ப நீதிமன்றத்தில் துப்பாக்கியை வைத்திருந்த குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

# கொலம்பிய தேசிய விடுதலை இராணுவத் தலைவர் கொலை

(பொகொடா - ஏப்ரல் 7)

கொலம்பியாவின் இரண்டாவது பெரிய விடுதலை இயக்கத்தின் தலைவரான மனுவல் பெரஸ் கொலைசெய்யப்பட்டுள்ளார். கொலம்பிய தேசிய விடுதலை இராணுவம் என்ற அமைப்பின் தலைவரான இவர் முன்னாள் ரோமன் கத்தோலிக்க மதகுருவாவார்.

ஸ்பெயின் நாட்டில் பிறந்த பெரஸ் 1970ம் ஆண்டில் தனது மதகுரு பட்டத்தை துறந்து கொலம்பிய தேசிய விடுதலை இராணுவத்தின் தலைவராகப் பதவியேற்றார்.

கொலம்பியாவின் வடகிழக்குப் பகுதியிலுள்ள சான்டான்டர் மாகாணத்தில் அவர் இன்று கொலைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும், அவர் யாரால், எப்படி, ஏன் கொலை செய்யப்பட்டார் என்கின்ற விபரங்கள் வெளியிடப்படவில்லை.

# வரலாற்றுப் புகழ்மிக்க அயர்லாந்து சமாதான ஒப்பந்தம்

(ஏப்ரல் - 10)

வடஅயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கும் கத்தோலிக்கர்களுக்கும் கடந்த 30 ஆண்டுகளாக நடந்து வந்த 30000



பேரை பலிகொண்ட உள்நாட்டு யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நேற்று இரவு முழுவதும் வட அயர்லாந்து தலைநகரான பெல்பாஸ்ட்டிலுள்ள Stormon மாளிகையில் அமெரிக்க நடுநிலையாளரான ஜோர்ச் மிட்செய்ல் (George Mitcheil) முன்னிலையில் பிரித்தானிய பிரதமர் ரொனி பிளேயர், அயர்லாந்து பிரதமர் பேர்டி அஹான் மற்றும் இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட IRA யின் அரசியல் பிரிவான 'கின்பெயன்' உட்பட பல அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஒரே மேசையில் அமர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

60 பக்கங்கள் கொண்ட உடன்பாட்டில் அனைவரும் இன்று காலை கையெழுத்திட்டனர். இந்தக் கையெழுத்திடும் வைபவம் நடந்து முடிந்ததும் நடுவரான ஜோர்ச் மிட்செய்ல் சந்தோசத்தில் கண்ணீர்விட்டு அழுதார். இவர் அமெரிக்காவின் பிரசையாக இருந்தபோதிலும் இவரது பூர்வீகம் அயர்லாந்து என்பது குறிப்பிடத்தக்கது.

லண்டனும், டப்ளினும் வட அயர்லாந்தை வரையறைக்குட்பட்ட சுயநிர்ணய உரிமை (Semi Autonome) உள்ள மாநிலமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

மே மாதம் 22-ம் திகதி வடக்கு மற்றும் தெற்கு அயர்லாந்து மக்கள் மத்தியில் நடத்தப்படும் சர்வசன வாக்கெடுப்பு மூலம் இந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயர்லாந்து இணைப்புக்காக போராடிவரும் IRA இது ஒரு நல்ல, நீண்டகாலத்துக்கு நீடிக்கக்கூடிய ஒப்பந்தம் என்று கருத்துத்தெரிவித்துள்ளது.


நித்தி
வாகன சேவை

வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், ஐரோப்பிய நாடுகளுக்குமான சகல போக்குவரத்துக்கான வாகன வசதிகளுக்கும் இன்றே நாடுங்கள்



உங்கள் தொடர்புகட்கு-
நித்தி
Tel: 01 48 05 02 14 / 01 43 03 07 08,
(Répondeur) 01 49 23 97 32
அவசரத்தொடர்புகளுக்கு.
06 07 34 80 51


# வாரக் குறிப்பு

**05.04.1998 ஞாயிற்றுக்கிழமை**

- உகண்டாவில் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்பில் 60 பேர் காயமடைந்துள்ளனர்.
- டிட்டானிக் படத்துக்கான சுவரொட்டி ஒன்று அமெரிக்காவில் 3105 டொலருக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.
- பிலிப்பைன்சில் அரசியல் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, ரொக்கட் ஒன்று திசைமாறி விழுந்து வெடித்ததில் 40 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

**06.04.1998 திங்கட்கிழமை**

- பாக்கிஸ்தான் சக்தி மிக்க ஏவுகணை ஒன்றை வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளது. 'கோரி' என்ற இந்த ஏவுகணையின் வெற்றிக்கு இஸ்லாமிய நாடுகள் வாழ்த்துத் தெரிவித்துள்ளன.
- மலேசிய அரசாங்கம் கள்ளக்குடியேற்றத்தையும், குடிவரவு முறைகேடுகளையும் தடுக்கும் விதத்தில் புதிய கடவுச்சீட்டு ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. இந்தக் கடவுச்சீட்டில் அதன் சொந்தக்காரருடைய கைப் பெருவிரல் அடையாளம் உட்பட பல நுண்ணிய முறைகள் அடங்கி இருக்குமென அறிவிப்பு.
- உக்கிரேனில் கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 63 தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இத் தொகை இன்னும் அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

**07.04.1998 செவ்வாய்க்கிழமை**

- பங்களாதேசின் தென்கிழக்குப் பகுதியிலுள்ள சிட்டகால் மலைப் பிரதேசத்தில் வசித்துவந்த பழங்குடி மக்களின் தலைவர் பிறியோ சக்மா இனம்தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இவர் அண்மையில் நடந்த சமாதான ஒப்பந்தத்தை ஆதரித்தவர்.
- தென் சீனாவில் நடந்த படகு விபத்தில் 14 பேர் பலியாகியுள்ளனர். படகு நீரில் மூழ்கியபோது அதில் 29 பேர் இருந்தனர் என்றும், 15 பேர் காப்பாற்றப்பட்டதாகவும் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
- நேபாளத்தில் அரச எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மாவோயிச அமைப்பினரை பேச்சுவார்த்தைக்கு வருமாறு அரசு அழைப்பு விடுத்துள்ளது.

**08.04.1998 புதன்கிழமை**

- அமெரிக்கத் தடையை மீறி ஈரானிலும், லிபியாவிலும் எண்ணைக் கம்பனிகளில் முதலீடு செய்யப்போவதாக மலேசியா அறிவிப்பு.
- அமெரிக்காவினது ஐ.நா.சபைக்கான நிரந்தரப் பிரதிநிதி பில் றிச்சட்சன் திடீர் விஜயமொன்றை மேற்கொண்டு ஆப்கானிஸ்தானுக்குச் சென்றுள்ளார்.
- பாங்கொக்கில் இருக்கும், கம்போடிய இளவரசர் ரணரித், கம்போடியாவிலுள்ள தமது தகப்பனார் நொரோடொம் சிகானூக்கைச் சந்திப்பதற்கு உடனடியாகச் செல்லமாட்டார் என அறிவிப்பு. இவ் வாரம் அவர் அங்கு செல்லத் திட்டமிட்டிருந்தார்.

**09.04.1998 வியாழக்கிழமை**

- இந்தோனேசியப் பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுவரும் மாணவர் ஆர்ப்பாட்டங்களை அடக்க இராணுவத்தை அனுப்ப இந்தோனேசிய அரசு முடிவு.
- ஈரானில் கடந்த ஒரு வாரகாலமாக இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் 84 பேர் உயிரிழந்துள்ளனர்.
- பிலிப்பைன்சிலிருந்து ஒரு நூற்றாண்டுக்கு முன்பு – அமெரிக்க இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்ட 2 தேவாலய மணிகளைத் தம்மிடம் மீள ஒப்படைக்குமாறு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி வேண்டுகோள்.

**10.04.1998 வெள்ளிக்கிழமை**

- வியட்னாம் தலைநகர் ஹனோயில் இனந்தெரியாத நபர் ஒருவர் 2 சிறுவர்களை சவரக் கத்தியால் வெட்டிக் கொன்றுள்ளார். இந்த நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.
- அல்பேனியாவில் கம்யூனிஸ்ட் கட்சி மீண்டும் செயற்படுவதற்கு அந்த நாட்டு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. 1992–ல் ஆட்சியைக் கைப்பற்றிய வலதுசாரி அரசாங்கம் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தடை விதித்திருந்தது.

**11.04.1998 சனிக்கிழமை**

- 1984–க்கும் 1998–க்கும் இடைப்பட்ட 14 வருட காலப்பகுதியில் துருக்கியில் இருபதாயிரம் குர்திஷ் போராளிகளும் 4600 அரச படையினரும், 4500 பொதுமக்களும் கொல்லப்பட்டதாக அறிவிப்பு.
- ஈரானில் மீண்டும் ஒரு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஈரானின் மேற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கத்தின் சேத விபரம் உடனடியாக அறியப்படவில்லை.
- விண்வெளியில் இருக்கும் ரஷ்ய ஆய்வுகூடமான MIR இல் இருக்கும் 2 விண்வெளி வீரர்கள் தங்களது ஆய்வுகூடத்தில் ஏற்பட்ட சீர்கேடுகளைச் சரிசெய்ய விண்கலத்தைவிட்டு வான்வெளிக்கு வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானலைகளில் உலகளாவிய ரீதியில் தமிழ்**

## I.B.C.

**Astra Satellite - Movie Channel**

**Transponder - 18 / Audio 7.56Kz / Video 11.479Kz**

தொடர்புகட்ளுக்கு: P.O.Box -1505, London SW 82 ZH.
Tel: 0171 787 8000 / Fax: 0171 787 8010

## Radio Asia Canada

தொடர்புகளுக்கு: 680, Progress Avenue Unit 01,
Scarborough, Ontario, M1 H3 A5, Canada.
Tel: 00 1 416 289 1522 / Fax: 00 1 416 289 1840

## Tamil Radio & Television (T.R.T)

**(Tamil Ozhi Oli)**

**தினமும் உங்கள் சின்னத் திரையில்**

12.00 செய்தி நேரம், 16.45 பி.பி.சி.யின் தமிழோசை,
21.00 செய்தி நேரம், எமது பிரதான செய்தித் தொகுப்பு

**தினமும் உங்கள் வானொலியில்**

8.00 செய்தித் தலைப்புகள், 8.30 ஐரோப்பிய வலம்,
13.30 பிரதான செய்திகள், 16.45 பி.பி.சி.யின் தமிழோசை,
17.16 கனடாவிற்கான ஒலிபரப்பு, 21.00 பிரதான செய்திகள்
**நள்ளிரவு முதல் காலை 6.00 வரை கனேடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகள்.**

தொடர்புகளுக்கு: 79, Rue Rateau, 93120 La Courneuve.
Tel: 01 43 11 27 77 / Fax: 01 43 11 27 72

## Radio veritas Asia (Tamil Section)

தொடர்புகளுக்கு: P.O. box 2642
Quezon City 1166, Philippines.
Tel: (632) 93900 11-4 / Fax: (632) 9381940







RAMIY RECORDS

# ரமி யின்

# வெளிவரவுள்ளது







## வெளிவந்துவிட்டன








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழமுரசு

Eelamurasu Weekly

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# சமாதானத்திற்கான முன்மாதிரி

கடந்த 30 வருடங்களாக நடந்து வந்த அயர்லாந்து போராட்டத்திற்கு ஒரு தற்காலிக முடிவு ஏற்பட்டிருக்கின்றது.

கடந்த வாரம் இடம்பெற்ற சமாதான ஒப்பந்தம் ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று இப்போது உடனடியாகச் சொல்ல முடியாவிட்டாலும் நிரந்தரத் தீர்வை நோக்கி அடுத்த அடியை எடுத்து வைப்பதற்கு இது ஒரு படிக்கட்டாக அமையும் என்பதை எவரும் மறுக்க முடியாது.

மதரீதியாக பிரிந்துள்ள அதாவது புரட்டஸ்தாந்து மதத்தினர் என்றும் கத்தோலிக்க மதத்தினர் என்றும் பிளவு பட்டுப்போயிருக்கும் அயர்லாந்து மக்களை ஒன்றிணைத்து ஒன்றுபட்ட அயர்லாந்துக் குடியரசை நிறுவுவதற்கு போராடிவரும் IRA இந்த ஒப்பந்தத்தை ஆதரித்திருப்பது முக்கியமான ஒரு அம்சமாகும்.

இந்த ஒப்பந்தத்தை உருவாக்குவதில் பிரித்தானியப் பிரதமர் ரொணி பிளேயரினதும், அயர்லாந்து பிரதமர் பேர்டி அஹானினது பங்களிப்பு மிக முக்கியமானது. அவர்கள் இருவரும் சமாதானம், சமாதானத்துக்கான பேச்சுவார்த்தை என்று வாய்ச் சவடால் விட்டுக்கொண்டு தங்கள் பதவிக்காலத்தை கடத்திவிட விரும்பவில்லை.

அயர்லாந்து மண்ணில் இரத்தம் சிந்தப் படுவதை உண்மையிலேயே தடுக்க அவர்கள் விரும்பினார்கள். உண்மையான சமாதானம் என்பது மெய்ப்பாதுகாவலர்கள் புடைசூழ பிரதமரின் அலுவலக அறைக்குள் இருந்துகொண்டு தகவல் தொடர்பு ஊடகங்களுக்கு பேட்டி கொடுப்பதால் வராது தங்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகப் போராடும் அமைப்புக்களுடன் இறங்கி வந்து மனம்விட்டுப் பேசுவதினால் மட்டும்தான் வரும் என்பதை, அவர்கள் இருவரும் உணர்ந்து கொண்டு பழமைவாத சம்பிரதாயங்களை உடைத்துக்கொண்டு மூன்றாந்தரப்பு மத்தியத்துவத்தின் மூலம் பேச ஒத்துக்கொண்டதின் மூலம்தான் இந்த உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

குளிரூட்டிய பாதுகாப்பு அறைகளுக்குள் இருந்து சமாதானம் – சமாதானப் பொதி என்று சொல்லிக்கொண்டும், சமாதானத்துக்கான யுத்தம் என்று சொல்லிக்கொண்டும் காலத்தை கடத்தும் சிறீலங்கா ஆட்சியாளர்கள் ரொணி பிளேயரையும் பேர்டி அஹானையும் பார்த்து பாடம் படிக்கவேண்டும்.

# சிறீலங்காவின் மீது கண்டனம் தெரிவிக்க வேண்டும்

## - சமாதானத்திற்கும் விடுதலைக்குமான சர்வதேசப் பெண்கள் லீக் -

*(ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு ஐம்பத்திநான்காவது கூட்டத்தொடர்.)*

.....இவ் ஆணைக்குழுவானது சிறீலங்காவில் இடம்பெறும் மோசமான சூழ்நிலையான காணாமல் போதல் பற்றி தெளிவாக அறிந்ததன் பலனாக இரு விசேட குழுக்களை 91, 92 -ம் ஆண்டுகளில் அங்கு அனுப்பியது. அன்றிலிருந்து இவ் விசேட குழுவின் அறிக்கைகளில் சிறீலங்கா தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. இவ்வருடம் ஆணைக்குழுவின் முன்னுள்ள இத்தகையதொரு அறிக்கையில் சிறீலங்காவானது உலகத்திலேயே 1997இல் அதிக எண்ணிக்கையில் காணாமற் போனவர்களை பதிவு செய்த நாடாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1992, 1993-ம் ஆண்டுகளில் இவ் விசேட குழுக்களின் 'காணாமல் போதல்' தொடர்பான விசேட பரிந்துரையில் இக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்குப் பதிலாக தொடர்ச்சியான சிறீலங்கா அரசாங்கங்கள் காணாமல் போதல் தொடர்பாக விசேட ஜனாதிபதி ஆணைக் குழுக்களை நியமித்தன. 1994-ம் ஆண்டு இவை உருவாக்கப்பட்டதன் பின்னர் இவ் ஆணைக்குழுக்களானது பல்வேறு இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தது. ஆயினும் இவ் ஆணைக்குழுமுன் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக எந்தவிதமான வழக்குகளும் தாக்கல் செய்யப்படவில்லை.



மாறாக கடந்தவருடம் காணாமல்போதல், படுகொலைகள், ஆட்கடத்தல் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட சில முக்கிய சிறீலங்காப் படையினர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் திருப்தி இல்லாத நடவடிக்கைகளினால் விடுவிக்கப்பட்டு விட்டனர். வவுக்கெலிய வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 6 அதிகாரிகளும் பொல்கொட வாவியில் மிதந்த சடலங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த 22 விசேட அதிரடிப்படையினரும் கொக்கந்தர கொலை மற்றும் ஆட்கடத்தல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட 2 பொலிஸ் அதிகாரிகளும் இவற்றுள் அடங்குவர்.

......சித்திரவதைகளுக்கான விசேட அறிக்கையாளரின் அறிக்கையில் மோதல்கள் இடம்பெறும் இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பெண்கள் மீது பாலியல் வன்முறைகள் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் வட மாநிலத்தில் சாவகச்சேரியில் இருந்து கிழக்கு மாகாணத்தில் வாழைச்சேனை வரை ஏராளமான இத்தகைய சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. எல்லா வழக்குகளிலும் அரச படையைச் சேர்ந்தவர்களே குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இரண்டு இத்தகைய வழக்குகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆனால் 'மற்றையவற்றில் பாதிக்கப்பட்டவர்களின் மீதும் சாட்சியங்கள் மீதும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதனால் முறைப்பாடுகள் கூட இன்னமும் பதிவு செய்யப்படவில்லை. பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நடவடிக்கைகள் மெதுவாகவும் திருப்திகரமற்ற முறையிலும் இடம்பெற்று வருகின்றன. உதாரணமாக மார்ச் மாதம் பிரதானமான வழக்கு ஒன்றின் இரண்டு முக்கிய குற்றவாளிகள் கொழும்பு நீதி மன்ற வளாகத்திலிருந்து தப்பித்துவிட்டார்கள்.

சமாதானத்திற்கும் விடுதலைக்குமான சர்வதேச பெண்கள் லீக்கானது அரச படைகளினாலும் பாதுகாப்பு பிரிவினராலும் பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பாலியல் வன்முறைகளைக் கண்டிக்கும் கடுமையான அறிக்கைகளை விடுக்குமாறு இவ் ஆணைக் குழுவிடம் வேண்டுகோள் விடுக்கின்றது. சிறீலங்காவிலும் சூடானிலும் படைகளினால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களுக்கு வழங்கப்படும் 'பாதுகாப்புத் தொடர்பான விடயத்தை இவ் ஆணைக்குழுவானது சம்பந்தப்பட்ட அரசுகளின் கவனத்திற்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

# பிரான்சில் வெளிநாட்டவர்களுக்கான சிறந்த புதுச் சட்டங்கள் உள்நாட்டமைச்சருக்கு பிரதமர் ஆதரவு

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து, பலராலும் எதிர்பார்க்கப்பட்ட தீர்வுகளில் வெளிநாட்டவர்களுக்கு உரிமை வழங்குவது என்பதும் முக்கியமானது. இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பினால் அரசாங்கம் அமைக்கப்பட முன்பு, வெளிநாட்டவர்களுக்கு உரிமைகள், சலுகைகள் வழங்குவதில் 'நான் முந்தி நீ முந்தி' என தேர்தல் கோஷங்களை இக் கட்சிகள் முன்வைத்திருந்தன. இவற்றில் பிறநாட்டவர்களுக்கு எதிரான பஸ்குவா—தெப்ரேயின் சட்டங்களை இரத்துச் செய்தல் என்பது முதன்மையானது. அரசாங்கம் அமைத்து, பதவி ஏற்றவ்டன் 'தாள்' இல்லாத வெளிநாட்டவர்களுக்கு 'தாள்' வழங்குவது தொடர்பான சுற்றறிக்கையை உள்நாட்டமைச்சர் ஜோன்பியர் செவென்னமொ தயாரித்திருந்தார். அதன்படி 'தாள்' கேட்டவர்களில் 55,625 பேருக்கு வதிவிட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மிகுதிப்பேருக்கு நிராகரிப்பு. இவர்களும் தங்களுக்கு பத்திரம் வழங்கி வாழவிடுமாறு சில மனித உரிமைகள் சங்கங்களின் ஆதரவில் ஊர்வலங்கள் செய்கிறார்கள். தேவாலயங்களிலும், நகரசபைகளிலும் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். இவர்களில் அரைவாசிப்பேருக்குத் 'தாள்' கொடுக்கப்படலாம் என நம்பப்படுகிறது. சிலர் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை (ஏப்ரல் 8) சட்டசபையில் உள்ளூராட்சி மந்திரி செவென்னமொ கொண்டுவந்த புதிய சட்டங்களும், முன்னிருந்த சட்டங்களின் திருத்த வடிவங்களும் எதிர்ப்பின் மத்தியில் நிறைவேறி உள்ளன. இவற்றிற்கு சூழல் பாதுகாப்புக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவு கொடுக்காததினால் இச்சட்டங்கள் மனிதாபிமான முறையானவை என இச் சட்ட மூலத்தை ஆதரித்து பிரதமர் ஜொஸ்பன் சட்ட சபையில் உரையாற்றியிருக்கிறார். இவை முன்னர் இருந்த சட்டங்களிலும் பார்க்க நல்ல சட்டங்களே.

## புதிய சட்டங்களும் சட்டத் திருத்தங்களும்

**விசா (Visa):**

விசா கேட்டு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு தகுந்த காரணங்கள் காட்டப்பட்டு மீள்மனு செய்கிறபோது விசா வழங்கப்படலாம்.

**வதிவிடப் பத்திரம் (Titres de Séjour)**

நிலையான வதிவிடப்பத்திரங்கள் இல்லாமல் செய்யப்படமாட்டாது. விஞ்ஞான ஆராய்ச்சி, கைத்தொழில் நுட்பம், உயர்கல்வி கற்பித்தல், பண்பாட்டு வளர்ச்சி நோக்கம் ஆகியவற்றிற்காக வருவோருக்கு ஒரு வருட காலத்திற்கான தற்காலிக வதிவிட அட்டை (Catre de Séjour Temporaire) யும், பிரான்சில் வாழும் வேலை செய்யும், சமூகப்பாதுகாப்பு மையத்தில் (Sécurité Sociale) பதிவு உள்ள வெளிநாட்டுக்காரர்களுக்கு நிரந்தர வதிவிட அட்டை (Carte de retraite )யும் வழங்கப்படும். இது பத்து வருடங்கள் காலவரையறையுள்ளது.

**கலப்புத் திருமணம் (Mariages Mixtes)**

பிரெஞ்சு தேசிய உரிமை உள்ள ஒருவரை திருமணம் செய்யும் வெளிநாட்டுக்காரர் ஒருவருக்கு வதிவிடப்பத்திரம் உடனே கொடுக்கப்படும். முன்னர் மணம் செய்தவர் ஒழுங்கான முறையில் நாட்டுக்குள் வந்த ஒருவருடத்தின் பின்னரே பத்திரம் கொடுக்கப்பட்டுவந்தது.

குடும்பத்தினரை வரவழைத்தல் (Regroupement Familial) பிரான்சில் ஒரு வருட காலமாக ஒழுங்கான முறையில்வாழும் பிறநாட்டவர் ஒருவர் தனது மனைவி அல்லது கணவனையும், பிள்ளை(களை)யையும் இங்கு வரவழைக்க உரிமை இருக்கிறது. இதற்கான சட்டங்கள் இலகுவாக்கப்பட்டுள்ளன. இங்கு வாழ்பவருக்கு போதுமான வருமானம் இருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வீட்டுவசதி இருக்கவேண்டும் என்ற சட்டமும் தளர்த்தப்பட்டுள்ளது.

**புகலிட உரிமை (Droit 'd'asile)**

சுதந்திர உரிமை தொடர்பாக உயிர்ப்பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளவர்களுக்கு ஒரு வதிவிடப் பத்திரத்தை உள்ளூராட்சி அமைச்சர் வழங்குவார். புகலிட உரிமை, தஞ்சம் கேட்பது அகதிகளுக்கான ஜெனீவா சட்டவிதிகளுக்கேற்பவே கொடுக்கப்படும்.

**நிர்வாகம் தடுப்புக்காவல் (Retention administrsative)**

கள்ளத்தனமாக குடியேறிய, 'தாள்' இல்லாத வெளிநாட்டவர் சந்தேகிக்கப்பட்டு, பிடிபட்டால் அவர் பன்னிரண்டு தினங்கள் நிர்வாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின்னர் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவார். இது முன்னர் பத்துநாட்கள். இக்காலப்பகுதியில் தடுத்து வைக்கப்பட்டவர் தனது மறுபரிசீலனை, மீள் மனுவை 48 மணிநேரத்திற்குள் செய்யவேண்டும். இது முன்னர் ஒருநாள் என இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விடியலைத் தேடி!

குடத்தனையூர் உதயன்

**அத்தியாயம் 3**

**முன்கதைச் சுருக்கம்:-**

அந்தக் கரையோர கிராமத்தில், கரை ஒதுங்கிய சூடுபட்ட இளைஞனின் சடலத்தை கண்டும், வறுமையின் கொடுமையால் அன்ரனியும், தகப்பனும் இரவு கடலுக்கு சென்றனர். கடலில் இவர்களை நோக்கி நேவி வருகின்றது.....

இருண்டு கிடந்த கடல், நேவியின் வெளிச்சக் குண்டுகளால் ஒளிபெற்றது. 'சட, சட' என துப்பாக்கிச் சத்தங்களும், தொடர்ந்து 'டும்..டும்' என்ற பீரங்கிச் சத்தங்களாலும் கடலே அதிர்ந்துகொண்டிருந்தது. அன்ரனியும் யோசப்பும் கட்டுமரத்தில் குப்புறப் படுத்தபடி, ஒருவரை ஒருவர் நோக்கினர். அவர்களின் கண்களில் மரணபயம் தெரிந்தது, 'அந்தோனியாரே எங்களைக் காப்பாற்றமாட்டாயா...???' என்று யோசப், வாய்விட்டு கெஞ்சி மன்றாடினான். இதேபோன்ற உருக்கமான அழுகுரல்கள் கடலெங்கும் ஒலித்துக்கொண்டிருந்தன. அன்ரனியின் இதயம் கட்டுப்பாட்டை இழந்து, துடித்துக் கொண்டிருந்தது.

'இப்படி அனாதையாக சாகப் போகின்றோமே' என்று அவன் உள்ளம் ஓலமிட்டு அழுதது. யோசப் 'தம்பி.. டேய் தம்பி... பயப்பிடாதை..'என்று தனது பயத்தை மறைத்து, ஆறுதல் கூறிக்கொண்டிருந்தான். திடீரென்று அவர்களுக்கு அருகில் பெரியகுண்டு ஒன்று வெடிக்கும் சத்தமும், அதன் ஒளியும் உள்ளத்தை உலுக்கின. இருவரும் மரத்தை விட்டு கடலுக்குள் இறங்கி, மரத்தை பிடித்தவாறு, கரையைத் திரம்பிப் பார்த்தனர். கண்ணுக்கெட்டிய தூரம்வரை கரை தென்படாமல், நாலாபுறமும் கடலே காட்சியளித்தது.

'தம்பி நீ இவ்வளவு தூரம் நீந்துவியோ...' என்று ஆற்றாமையுடன் யோசப் கேட்க, 'ஓமப்பா நீந்துவன்... நீங்கள் என்னைப் பற்றி யோசிக்காமல் நீந்துங்கோ...' என்று தனது பயத்தை மறைத்தவனாக அன்ரனியும் கூறினான். இருவருமே மெல்ல, மெல்ல, நீந்தத் தொடங்கினர். இருவர் மனங்களிலும் வெவ்வேறு நினைவுகள் வந்து போயின. 'ஆண்டவா என்ரை பிள்ளையையும் சாகக்குடுக்கவோ நான் கூட்டிக்கொண்டு வந்தனான்...' என்று யோசப்பின் மனம் அழ, அன்று கண்ட இளைஞனின் சடலம் அன்ரனியின் மனதிலும் அடிக்கடி தோன்றி மறைந்து போனது. இருவரும் கண்களில் இருந்து வழியும் கண்ணீரை, கடல் நீர் தெரியாதவாறு கழுவிக் கொண்டிருந்தது. இவர்களுடன் அருகாக இன்னும் பலர் நீந்திக்கொண்டிருந்தார்கள். நீந்தத் தெரியாதவர்கள் மரங்களை கட்டிப் பிடித்தபடி அழுது கொண்டிருந்தனர்.

கடல் எங்குமே 'ஐயோ..அம்மா... அந்தோனியாரே.. யேசுவே' என்ற அழுகுரல்கள் காற்றுடன் எதிரொலித்துக் கொண்டிருந்தன. ஆனால் இந்தக் குரல்கள் ஆண்டவனின் காதில் கேட்குமா? என்ற நம்பிக்கை இழந்த கேள்வியை மனதில் கேட்டபடி, அன்ரனியும் யோசப்பும் தொடர்ந்தும் நீந்திக்கொண்டிருந்தார்கள். வெடி குண்டுகளின் அதிர்வில் மீன்களே திண்டாடியது.

'நான் செத்தாலும்... பரவாயில்லை.. என்ரை பிள்ளையை ஆவது உயிருடன் .கரைசேர் ஆண்டவா' என்று மனதில் யோசப் மன்றாடிக் கொண்டிருக்கும் போது, இவர்களுக்கு முன்பாக நீந்திக்கொண்டு இருந்தவர்களில் ஒருவன், நீரினுள் அமிழ்ந்து தண்ணீர் குடித்து 'அப்பா... அப்பா' என்று கதறியபடி மீண்டும் அமிழப் போனான் பெற்ற மனம் கேட்குமா?? அமிழ்ந்தவனின் தலையைப் பிடித்து நிமிர்த்தி 'என்ரை தோளைப் பிடிச்சுக் கொண்டுவா... கொஞ்ச தூரந்தான்..' என்று ஏக்கத்துடன் கூறி, அந்த இருவரும் தொடர்ந்து நீந்தினர். இதைக் கவனித்த அன்ரனி இன்னும் மன உறுதியுடன் நீந்திக்கொண்டிருந்தான்.

இந்த நேரத்தில், ஹெலியின் ஆக்கிரமிப்பும் கடலில் தொடரத் தொடங்கியது. நேவியும் கண்மண்தெரியாமல் எல்லா திசைகளிலும் வெடி வைத்தபடி இருந்தான். அன்ரனி தகப்பனை 'கெதியா வாங்கோ...' என்று அவசரப்படுத்தினான். தூரத்தில் படகு ஒன்று குண்டுபட்டு எரிந்துகொண்டிருந்தது.. யோசப் 'தம்பி ஆறுதலா நீந்து... களைத்துப் போவாய்...கண்டபடி கதைக்காமல்..என்னை யோசிக்காமல் நீந்து...'என்று அனுபவ வாயிலாக உணர்ந்து கூறினார்.

அன்ரனி தளராமல் நீந்தினாலும், மனம் முழுக்க பயம் சூழ்ந்திருந்தது. சில வருடங்களுக்கு முன், பாடசாலையில் நடைபெற்ற நீச்சல் போட்டியில், அன்ரனி நீந்தும்போது இடையில் அவனது கை, கால்கள் விறைத்தபோது, அருகில் உதவிக்கு வந்த படகுக்காரர்கள் அவனை காப்பாற்றினார்கள். இன்று அப்படி ஏதும் நடந்தால்... யார் காப்பாற்றுவார்கள்? என்று அச்சத்துடன் அடிக்கடி நினைத்துக்கொண்டான். சிறிது தூரம் போனதும் அவன் திரும்பிப் பார்த்தான். அருகில் வந்த தகப்பனைக் காணவில்லை.

அவன் 'அப்பா...அப்பா' என கடல் அதிர பயத்துடன் கத்தினான். தகப்பனுக்கு வெடி ஏதும் பட்டுதோ என்று எண்ணி மனம் தத்தளிக்க, உடலும் தண்ணீரில் தத்தளித்தது. நாலாபுறமும் கண்களை அலையவிட்டு தேடினான். தொலைவில் ஒரு உருவம் நீந்தி வருவது தெரிந்தது. அது தனது தகப்பனாக இருக்கவேண்டும் என்று மனம் கடவுளிடம் கெஞ்சியது. அவன் இன்னும் மெதுவாக நீந்தியபடி அந்த உருவத்தை உற்றுநோக்கினான். அருகில் வந்ததும், அது தகப்பன்தான் என உறுதிப்படுத்தியபின், நிம்மதியடைந்தவனாக உற்சாகமாக நீந்தத் தொடங்கினான்.


அருகில்வந்த யோசப் 'தம்பி நீ முன்னுக்குப் போ... நான் ஆறுதலாக வாறன்...' என்று கூறினான்.

அவனது உடலும் வறுமை, முதுமை போன்ற காரணங்களால் முன்னையப்போல் நீந்த மறுத்தது.' அந்தோனியாரே நாங்கள் ரெண்டுபேரும் கரைக்கு போய்ச் சேர உனக்கு கஞ்சி காச்சிறன். எங்களுக்கு நீந்த பலத்தைக் கொடு..' என்று மீண்டும் மன்றாடினான். அந்த வேளையில் அன்ரனியின் வாய்க்குள் கடல்நீர் சிறிது புகுந்து அவன் இருமியபடி திக்குமுக்காடினான். 'என்ன தம்பி... பாத்து நீந்து. கவனம்..' என்று யோசப் எச்சரித்தான்.

அவர்களுக்கு எதிரே தென்பட்ட கட்டுமரத்திலிருந்து 'அம்மா.. அம்மா' என்ற பரிதாப கரமான முனகல் சத்தம் கேட்டது. யாரோ நீந்தத் தெரியாத ஒருவனுக்கு சூடு பட்டிருக்க வேண்டும் என்று ஊகித்தபடி, இருவரும் கட்டுமரத்தை நெருங்கினார்கள். அதற்கிடையில் நேவியின் வெளிச்சக்குண்டுகள் அந்தப் பிரதேசத்தை வெளிச்சம் ஆக்கியது. உடனே இருவரும் தலையை நீருள் புதைத்தபடி சிறிதுதூரம் நீந்தினார்கள். அதனாலோ என்னவோ அன்ரனி நன்றாக களைத்துப்போனான். தகப்பனை நோக்கி அன்ரனி 'அப்பா என்னால் இனி ஏலாது' என்று கூறினான். யோசப் களைத்தாலும் மன உறுதியை கைவிடாமல் இன்னும் கொஞ்சத்தூரம் அப்பு.. மனதை கைவிடாத.. ஏலாட்டால் என்ரை தோளைப் பிடிச்சுக்கொண்டு வா..' என்று ஊக்கப்படுத்தினான்.

அன்ரனி முடிந்தளவு தகப்பனுக்கு அருகாமையிலேயே நீந்தி வந்துகொண்டிருந்தான். தொலைவில் 'என்ரை அண்ணா... என்ரை அண்ணா' என்ற ஏக்கக் குரல் காற்றுடன் கலந்து, மறைந்துகொண்டிருந்தது. ஹெலிச் சத்தமும் வர, வர அருகில் கேட்டது. எல்லோரது மனங்களிலும் மரணபயம் அதிகரிக்கத் தொடங்கியது. 'குண்டு பட்டு செத்தாலும் பரவாயில்லை. இவங்களிடம்... கடைசிவரைக்கும் பிடிபடக்கூடாது' என்ற வைராக்கியமும் அவர்களின் நீச்சலில் தெரிந்தது.

வானிலே, இருந்த நட்சத்திரங்களும் இவர்களின் அவலத்தை காணப் பொறுக்கமாட்டாமல் மறையத் தொடங்கின. அன்ரனியின் மனத்தில் தாய், தமக்கை தம்பி ஆகியோரின் நினைவுகளும், தான் வாழ்ந்த மண், இறுதியாக அந்தோனியாரை வேண்டியது. எல்லாமே வட்டம் அடித்தது. அவனது உடலை மனம் வெல்லமுடியாமலும், மனதை உடல் வெல்ல முடியாமலும் தத்தளித்துக் கொண்டிருந்தது.



யோசப்பின் மனதில் 'இன்னும் கரையைக் காணேல்லை...! இனி நாங்கள் எப்பிடி உயிர்தப்புவது' அத்துடன் மனைவியின் இண்டைக்கு கடலுக்கு போக வேண்டுமா?...' என்ற தவிப்பான கேள்வியும் வந்து, வந்து போயின. நேவியின் சத்தம், கிழக்குப் பக்கமாகக் கேட்டது. அன்ரனியும், யோசப்பும் உடல்சோரச் சோர களைப்புடன் நீந்திக்கொண்டிருந்தார்கள்.

கடலிலே இப்படி மரணப்போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்க, கரையிலுள்ள மீனவக் குடும்பங்கள் எல்லாம் விழித்துக்கொண்டன. ஒவ்வொருவர் மனதிலும் கடலுக்கு சென்ற தமது உறவுகள் பற்றிய அச்சமே சூழ்ந்து இருந்தது. வீடுகளிலிருந்து அழுகுரல்களும், ஏக்கம் கலந்த பேச்சுகளும் வெளிப்பட்டுக்கொண்டிருந்தன. மரியா, மேரி, அருள் மூவரும் வெளிவாசலில் குந்தியிருந்து, கடலைப் பார்த்து அழுது கொண்டிருந்தார்கள்.

அந்தப்பக்கமாக வந்த சம்மாட்டியார் மனுவில்பிள்ளை மரியாவைக் கண்டதும் 'என்ன பிள்ளை இதில இருக்கிறாய்? உவன் யோசப்பு தொழிலுக்கு போனவனோ...' என்று கேட்க 'ஓமண்ணை இவரும், அன்ரனியும் சேந்து

(தொடர்ச்சி 26-ம் பக்கம்)

# சேர் ஐசாக் நியூட்டன்

## (அப்பிள் பழ விஞ்ஞானி)

அப்பிள்பழம் என்றதும் எமக்கு நினைவில் வரும் விஞ்ஞானி நியூட்டன் ஆவார். நியூட்டன் 04.01.1643 (யூலியான் நாட்காட்டிப்படி 25.12.1642) இங்கிலாந்தில் உள்ள வூல்ஸ்தோர்ப் (Woolsthorpe) என்னும் இடத்தில் பிறந்தார்.

நியூட்டன் பிறப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பே தந்தை இறந்துவிட்டார். இதனால் தந்தையின் பெயராகிய 'நியூட்டன்' என்னும் பெயர் இவருக்குச் சூட்டப்பட்டது. நியூட்னின் 'மூன்றாவது வயதில் நியூட்டனின் தாய் மறுமணம் செய்து வேறு இடம் மாறிப்போக, நியூட்டன் பேத்தியாரின் அரவணைப்பில் வாழ்ந்துவந்தார்.

ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று முடித்த நியூட்டன் இடைத்தரப் பள்ளியில் சேர்ந்து கல்வி பயிலத் தொடங்கினார். இவ்வாறு படித்துவரும் காலத்தில் விடுமுறையில் நியூட்டன் வீட்டுக்கு வந்தார். பண்ணையில் இருந்து போதிய வருவாய் கிடைக்காததாலும், பண்ணை சீரற்றுப் போனதாலும் பண்ணையைக் கவனிக்கும் பொருட்டு நியூட்டன் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் நியூட்டன் பண்ணையைக் கவனியாது தன் குறும்புத்தனங்களைச் செய்வதிலும், புத்தகம் வாசிப்பதிலும் கண்ணாயிருந்தார்.

ஒருநாள் களைப்படைந்த நியூட்டன் ஒரு அப்பிள் மரத்தின் கீழ் படுத்தார். திடீரென ஒரு அப்பிள் பழம் நியூட்டனின் மண்டையில் விழுந்தது. நியூட்டன் எழுந்து அப்பிள் பழத்தை எடுத்துவைத்துக்கொண்டு சிந்திக்கத் தொடங்கினார். ஏன் இந்த அப்பிள்பழம் மேலேபோகாமல் கீழே விழுந்தது என்று. இதற்குரிய விடை அப்போது கிடைக்கவில்லை. இந்த கேள்விதான் பின்நாளில் நியூட்டனால் உருவாக்கப்பட்ட 'புவியீர்ப்புக்கொள்கை'க்கு அத்திவாரமிட்டது. நியூட்டனின் கல்வி மீதான ஆர்வத்தால் நியூட்டன் தொடர்ந்து படிப்பதற்கு அனுமதி கிடைத்தது. தனது தாயின் சிநேகிதியின் வீட்டில் இக்காலத்தில் வசித்தார். இதன்போது பல கவிதைகளையும், ஓவியங்களையும் வரைந்தார். இரசாயனவியலில் முதல் ஆராய்ச்சியை இங்கே ஆரம்பித்தார். தான் பெற்ற பெறுபேறுகளை பாடசாலையில் முன் வைத்தார். நியூட்டனின் புகழ் பரவியது. ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமும், உதவிகளும் கிடைத்தன. கலைமாமணி, முதுமானி என படிப்படியாக நியூட்டன் பெற்ற பட்டங்கள் ஒன்று இரண்டல்ல. இதே போன்று இவரது ஆராய்ச்சிகளும் சாதனைகளும் ஒன்று இரண்டல்ல.



அப்பிள்பழம் மண்டையில் விழுந்ததால் ஏற்பட்ட சிந்தனையால் உருவான புவியீர்ப்புக்கொள்கையும் (புவியானது தன்னைச்சூழவுள்ள பொருட்களை ஈர்க்கிறது. இந்த ஈர்ப்பினாலேயே சகல பொருட்களும் பூமியில் தங்குகின்றன. இதனாலேயே அப்பிள்பழம் மேலே போகாது கீழே விழுந்தது. இந்தப் புவியீர்ப்பை மீறுகிற பொழுதுதான் ஒரு துணிக்கையானது புவியை விட்டு நீங்க முடியும் என பல முடிவுகளை கொண்டதே இக்கொள்கை.) நியூட்டனால் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்களால் முடிக்கப்பட்டாலும் நியூட்டனின் பெயரையே தாங்கி நிற்கும் நியூட்டனின் மூன்று விதிகளும் முதலாவது விதியானது 'புறவிசை ஒன்று தாக்கப்படாதவிடத்து ஓய்வில் உள்ள பொருள் ஓய்விலேயும் இயக்கத்தில் உள்ள பொருள் இயக்கத்திலேயும் இருக்கும். ஓய்வில் உள்ள பொருளை இயக்கத்திற்கு கொண்டு வரவேண்டுமாயின் ஒரு புறவிசை தாக்க வேண்டும்' என அமைகிறது.

இரண்டாவது விதியானது 'ஒரு பொருள் மீது பிரயோகிக்கப்படும் விசையானது பொருளின் திணிவினதும் ஆர்முடுகலினதும் பெருக்கத்திற்கு சமனாகும். (F=ma அல்லது P=MF) என அமைகிறது.

மூன்றாவது விதியானது 'ஒரு தாக்கத்திற்கு எதிரானதும் சமனானதுமான மறுதாக்கம் உண்டு. (R1=R2) என அமைகிறது. எல்லாவகையான சுடுதலின்போதும் (துப்பாக்கி, பீரங்கி, எறிகணை) எறிகலங்கள் பின்னோக்கி நகர்வது இதனாலேயே. குண்டானது எறிகலத்தைவிட்டு முன்னேறும்போது அதற்குச் சமனான தாக்கத்தை எறிகலமானது பெறுகிறது. இதனால் எறிகலமானது பின்னோக்கி நகர்கிறது. இயங்கிக்கொண்டிருக்கும் வாகனங்களில் உள்ளவர்கள் வாகனம் தடையை பிடிக்கும்போது முன்னோக்கி விழுவதும் இதனடிப்படையிலேயே இவ்வாறு எண்ணற்ற நிகழ்வுகளின் தோற்றப்பாடாக இவ்விதி அமைகிறது.

நிறப்பிரிகையும் (ஒளியானது ஏழு நிறங்களை கொண்டது. அவற்றின் ஒழுங்கு) ஒளியியலில் உருவாக்கிய வெளிப்படை உண்மைகளும் பாரிய தொலைநோக்கியும் இதேபோன்ற எண்ணற்ற சாதனங்களும் ' இவராலேயே உருவாக்கப்பட்டன. இன்று பௌதிகத்தில் பயன்படுத்தப்படும் 'நியூட்டன்' (N) என்னும் அளவுமுறை இவரையே சார்ந்திருக்கிறது. (1s=100T) எண்ணற்ற ஆக்கங்களை உலகுக்கு வழங்கிய இந்த மேதையிடம் இருந்து நாம் கற்க வேண்டிய வாழ்வியல் விடயம் ஒன்றும் உண்டு.

நியூட்டனின் புகழ் ஐரோப்பா எங்கும் பிரபல்யம் அடைந்த காலத்தில் நியூட்டன் ஒரு சிறிய பூனையும் ஒரு பெரிய பூனையும் வளர்த்து வந்தார். நியூட்டன் வெளியே போய் வீடு திரும்பும்வரை இரு பூனைகளும் வீட்டினுள்ளேயே அடைபட்டுக்கிடக்க வேண்டிய நிலைமையில் இருந்தன. அவை தாம் விரும்பிய நேரம் உள்ளே போகவும் வெளியே வரவும் என்ன செய்யலாம் என யோசித்தார். நியூட்டனுக்கு ஒரு யோசனை தோன்றிது. சிறிய பூனை போவதற்காக ஒரு சிறிய ஓட்டையும் பெரிய பூனை போவதற்காக ஒரு பெரிய ஓட்டையும் கதவிலே வைத்தால் பூனைகள் தாம் விரும்பிய நேரம் வெளியே போய்வரும் என்று. இதன்படியே நியூட்டன் ஒரு மரவேலையாளனைக் கூப்பிட்டுச் சொன்னார், பெரிய பூனை போவதற்காக ஒரு பெரிய ஓட்டையும் சின்னப்பூனை போவதற்காக ஒரு சின்ன ஓட்டையும் வெளிக்கதவிலே போட்டுவிடும்படி. இதைக் கூறிவிட்டு நியூட்டன் அவ்விடத்தைவிட்டு நீங்கிவிட்டார். நியூட்டன் திரும்பி வந்து பார்க்கும்போது கதவில் ஒரு பெரிய ஓட்டை மட்டும் இருந்தது. மரவேலையாள

(தொடர்ச்சி 26-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[சென்ற வாரத் தொடர்ச்சி]

# ஜீவனின் எச்சில் போர்வை

ஜீவனின் குறும்படங்கள் எச்சில் போர்வையும் கவிக்குயிலும் எடுத்துக்கொள்ளும் பிரச்சினைகள்தான் என்ன?

கவிக்குயில் ஐரோப்பாவில் ஜேர்மனியில் வாழ நேர்ந்த மூன்று மூன்றாமுலக இளம் பெண்களை கதாபாத்திரங்களாக எடுத்துக்கொள்கிறது. ஐரோப்பிய துருக்கிய பெற்றோர்களுக்குப் பிறந்த பெண்கள் இருவர். மற்றவர் ஜேர்மனிய மலையாளி இனக்கலப்பினப் பெண். பாப் கலாச்சாரத்தால் 'பொப்' பாடல்களால் பாதிப்புப்பெற்று பாடித்திரியும் பெண்கள் யதேச்சையாக இளையராஜாவின் சி.டி ஒன்றை பாதையில் கண்டெடுக்கிறார்கள்.

தமது அறையில் வந்து போட்டுப் பார்க்கிறார்கள். ஒரு பாடல்: ஊருசனம் தூங்கிருச்சு, ஊதக் காற்றும் அடிச்சிருச்சு கேட்கிறது. ஒரு பெண் அந்தப் பாட்டில் ஆழ்ந்துவிடுகிறாள். திரும்பத் திரும்பக் கேட்கிறாள். ஊருசனம், ஊருசனம் என திரும்பத் திரும்ப போட்டுக் கேட்கிறாள்.

அவளது அறைத் தோழியொருத்தியின் மூலம் அவள் பாட ஏற்பாடாகிறது. தமிழர்களுக்கு மத்தியில் ஊருசனம் தூங்கிருச்சு பாடலை மேடையில் பாடுகிறாள். அந்தச் சந்திப்பும் மேடையேற்றமும் அந்தப் பெண் உட்பட சகலருக்கும் சந்தோஷமாக இருக்கிறது. ஒரு சின்ன விஷயம். எமது கலாச்சாரம் வேர்கள் கலாச்சாரம் தொடர்பானது. எமது இசை அவர்களது இசை தொடர்பானது. ஜீன்ஸ் பான்டும், இறுகிய சட்டையும் சேலையும் நெற்றிப்பொட்டும் தொடர்பானது.

## சினிமா

நமது கலாச்சாரத்தின் மேன்மை, அல்லது அடையாளம் ஜீவனுக்கு எவ்வாறு உருவகமாகிறது?

காதலுக்காக உருகும் காதலியின் குளிர்கால இரவின் பாட்டு ஊதக்காற்று அடிச்ச பின்பான பாட்டு. மூக்குத்தி, நெற்றிப்பொட்டு, பட்டுச்சேலை போர்த்திய பெண்ணின் பாட்டு.

தமிழ் ஆண்மகளைச் சந்தோஷப்படுத்தும் ஐரோப்பிய தமிழ் பெண்ணின், தமிழ் கலாச்சாரம் உணர்ந்த பாட்டு. இங்கும் செயல்படுவது பெண் கலாச்சாரத்தைக் காப்பவள் எனும் கருத்துருவம்தான். எமது கலாச்சாரம் மேன்மையானது எனும் பெருமிதம்தான்.

ஆனால் ஜீவன் 'பொப்'பாடல்களை எதிர்மறையாக விமர்சிக்கவில்லை என்பது ஆறுதல். இதே கரு, அவர்களின் பாடல்கள் எமது பாடல்களுக்கு இடையிலான இணைவைப் புரிந்துகொள்ளக் கோருவதாகவும் இருந்திருக்க முடியும். ஜீன்ஸ் போட்டுக்கொண்டு காதலனுக்காக உருகாத பாட்டொன்றையும் பாடுவதாகவும் இருந்திருக்கக்கூடும். ஏடறியேன் எழுத்தறியேன் எட்டுவகை நானறியேன் என்கிற பாடலாகவும் இருந்திருக்க முடியும். படத்தில் வனசா பெஹான் ஷனம் போன்ற பெண்கள் இயல்பாக வந்திருக்கிறார்கள்.

ஜீவனின் சிந்தனை விரிந்து செல்லும்போது இடறிவிடக் கூடிய இடங்களைப் பற்றிய ஆய்வு அவருக்குத் தேவையென்பதையே கலாச்சாரம் தொடர்பான இப்படம் சுட்டி நிற்கிறது. ஜீவனும் ஒரு வகையில் பெண்கள் தொடர்பான சனாதனக் கருத்தியலைத் தாண்டிவர முடியவில்லை. (பின் குறிப்பில் இப்படம் பற்றிய ஜீவனின் அனுபவங்களையும் பார்க்கவும்)

இனி பரிவுபெற்ற படமான எச்சில் போர்வையின் கனதி என்ன?

சின்னக் கனதி. உருக்கமான கதை. புலம்பெயர்ந்துவந்த ஈழத் தமிழ் இளைஞன். அறைக்குத் திரும்ப வருகிறான். தங்கையின் கடிதம் துயரமும் பொறுப்பும் கொண்டுவந்த கடிதம். பின்புறத்தில் வாசிக்கிறது குரல். காமெரா முகத்தில் கதை சொல்கிறது. நண்பரைத் தேடிப் போகிறான். குடியேற்றப் பிரச்சினை. வேறு நாட்டுக்குப் போ எனும் அறிவுறுத்தல். காசை விரைந்து தரச்சொல்லி கருணையற்றும் பேசும் ஏஜன்ட், லிப்டில் போகும் போது முகம் தெரியாத இருவரின் உரையாடல். இங்கும் பெண் பண்பாடு தொடர்பான உரையாடல்தான். (ஜீவனின் சனாதனக் கருத்தியல் இங்கும் செயல்படுகிறது அவதானிக்கத் தக்கது) நடக்கிறான். மரங்களடர்ந்த வெளி. குழந்தைகளின் சத்தம் இரைச்சலாகிறது. வெடிச் சத்தம் நாரசமாகி ஊரின் நினைவு வருகிறது.

பின்னணியில் தங்கையின் கடிதம், நண்பரின் உபதேசம், ஏஜென்டின் குரல், லிப்ட் உரையாடல் சிந்தனைகளைத் தேக்கியபடி கனத்த உறைந்த முகத்துடன் நடக்கும் நாயகன். லூலிஸ் அற்புதமாகச் செய்திருக்கிறான்.

இப்படம் அழகான ஆழமான கரு. காமெரா கதை சொல்கிறது. சரியான சுருக்கமான படத் தொகுப்பு. தேவையான இடங்களில் மௌன இடைவெளி. இசை பிரச்சினையைத் தொடர்ந்து செல்லும் காமெரா. இயக்குநரின் தலையீடு இல்லை. அலட்டல் இல்லை. கரு எனும் அளவிலும் தொழில்நுட்ப நேர்த்தியிலும் இசை, படத் தொகுப்பு எனும் அளவிலும் இணைவைச் சாதித்த படம் என்று இதைச் சொல்ல முடியும். ஆனால் பெண்கள் தொடர்பான ஜீவனின் சனாதனக் கருத்தியல் இப்படத்தில் நுணுக்கமாக முகம் தெரியாத வார்த்தைகளின் வெளியாகிறது. இதனைப் போலவே அருந்ததியின் 'முகத்திலும்' Pornography பத்திரிகைகள் தொடர்பான விசயத்திலும், காட்சியிலும் இதே மனம் செயல் படுகிறது. (இது குறித்த லஷ்மியின் விமர்சனம் எனது முன்னைய ஈழமுரசு கட்டுரையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது)

இவ் வகையில் தலைமுறை படத்தின் சனாதனக் கருத்தியல் விமர்சனமயமாகப் பார்ப்பதன் மூலம் முகம் படத்தின் அசல் கதை வடிவத் தேடுதலை அங்கீகரிப்பதன் மூலம் ஜீவனின் கதை, தொழில்நுட்ப ஒருமையைக் கற்றுக் கொள்வதன் மூலம் புதிய புலம்பெயர் சினிமாவைக் காத்திரமாக உருவாக்க முடியும்.

கதை, கருத்தியல், சனாதன சிந்தனை போன்றவற்றைப் பற்றிய விமர்சனக் கருத்துக்களை

## நடைமுறையும் கோட்பாட்டறிவின் அவசியமும்

எங்கிருந்து பெறுவது?

பொதுவாக நல்ல சினிமாக்கள் எப்படி உருவாகின்றன?. நல்ல சினிமா என்பதை நான் இலாபகரமான சினிமா என்கிற அர்த்தத்தில் சொல்லவில்லை. எல்லா சினிமாவும் எல்லோரையும் எட்டாது.

எவருக்கு நாம் சினிமா தயாரிக்கிறோம் என்பது பற்றிய சிந்தனை நமக்கு அடிப்படையாக வேண்டும். அவர்கள் வாழ்வைச் சொல்லவேண்டும். புதைந்திருக்கும் உண்மைகளைச் சொல்ல வேண்டும்.

உலகின் பிரபலமான படங்களும் சரி, உக்கிரமான படங்களும் சரி சில அடிப்படைகளை பலமாகக் கொண்டிருக்கின்றன.

1. படைப்பிலக்கியங்களை அடித்தளமாகக் கொண்டிருக்கின்றன.

(நாவல் + நாடகம் + கவிதை + துப்பறியும் கதை + வரலாறு)

அந்தந்த மொழி இலக்கியங்களை நிறையப் படிக்க வேண்டும். இலக்கியம் என்பது வாழ்வுதான்.

2. தொழில் நுட்பம், சினிமா கோட்பாடு, படத்தொகுப்பு, ஒலிநுட்பம் சம்பந்தமான கோட்பாட்டு நூல்களைப் படிக்க வேண்டும்.

தமிழில் அம்ஷன்குமார், சிவகுமார், வெ.சக்கரவர்த்தி ஸ்ரீராம் போன்றோரின் நூல்கள், என்னுடைய ஐந்து நூல்கள்.

ஆங்கிலத்தில் ஆயிரக் கணக்கான நூல்கள். உதாரணத்திற்கு Guerilla Film makers hand work இவ்வாறு ஒரு சமூகத்தின் அறிவுச் சூழலையும் தொழில்நுட்பச் சூழலையும் ஒரு சினிமா இயக்குநர் தெரிந்துகொள்ள வேண்டும். இதை நீங்கள் கல்லூரிகளுக்குச் சென்றுதான் தெரிந்து கொள்ள வேண்டும் எனநான் சொல்லவில்லை.

சுயபடிப்புத்தான் இதைச் சாதிக்கும். குறுகிய கால வகுப்புகளுக்குச் செல்லலாம். நிறைய இலக்கியத்தை தேடிப் படிக்கலாம். இலக்கியம் படிக்கும் போதும் சில காட்சிரூபப் படுத்த சுலபமாக இருக்கும். சில கடினமாக இருக்கும். காத்திரமான சிந்தனையாளர்கள் அதையும் படைப்பாக்க முடியும்.

உதாரணமாக நிறையச் சம்பவங்கள் உள்ள நாவல்களை சுலபமாக காட்சிரூபமாக்க முடியும். அப்படிப்பட்டதுதான் மகேந்திரன் படங்கள், முள்ளும் மலரும் உமாச்சந்திரனின் நாவல். பூட்டாத பூட்டுக்கள் பொன்னீலனின் நாவல்.

ஆனால் சுந்தரராமசாமியின் ஜே.ஜே. சில குறிப்புக்கள் தத்துவதன விசாரணை செய்யும் நாவல். இதைப் படமாக்குவது கடினம். ஆயினும் சிறந்த படைப்பாளிகளால் அது முடியும்.

உதாரணமாக The Last Temptation of Jesus Christ நாவல்: நிகோஸ் கோஸன்டாகிஸின் தத்



துவ விசாரணை நாவல். அது மார்ட்டின் ஸ்கோர்ஸின் எனும் இயக்குநரால் அற்புதமான படமாக்கப்பட்டிருக்கிறது.

புலம் பெயர்ந்த நாடுகளிலும் அப்படியான தமிழ் படைப்பாளிகள், சிறுகதையாசிரியர்கள், நாவலாசிரியர்கள் இருக்கிறார்கள். ஷோபாசக்தி, பார்த்திபன், கலாமோகன், கருணாகரமூர்த்தி என நிறைய படைப்பாளிகள் புவனனின் 'தழும்புகள்' கதையை காட்சிரூபப்படுத்துவது எளிது.

திரைப்பட இயக்குநர்களுக்கும் தயாரிப்பாளர்களுக்கும் இலக்கியப் படைப்பாளர்க்குமான ஆரோக்கியமான உறவென்பது நல்ல திரைப் படங்களைத் தரும்.

கட்டுரையை இவ்வாறு முடிக்கலாமென நினைக்கிறேன். திரைப் படக்கலை பொழுதுபோக்குக் கலை அல்ல. அதை மேற்போக்காகச் செய்ய முடியாது. அது அறிவார்ந்த கலை.

கோட்பாட்டு அறிவு, இலக்கிய அறிவு, அரசியல் அறிவு, ஆய்வறிவு, தொழில்நுட்ப அறிவு போன்றவற்றை அது கோரி நிற்கிறது.

முகம் படத்திற்கு அடுத்து தொழில்நுட்பத் தேர்ச்சியோடு இத்தகைய அறிவுடன், இத்தகைய அறிவு குறித்த தேடலுடன் வந்திருக்கும் படம் என 'எச்சில் போர்வைகள்' படத்தை என்னால் சொல்ல முடியும்.

இனிவரும் புதிய புலம் பெயர் சினிமா இவ்விரண்டு படங்களையும் கவனத்தில் கொண்டு இதனின்று விமர்சன பூர்வமாகி, இதனிலும் மேன்மையாகத்தான் உருவாக முடியும்.

மற்றவை எதிர்காலத்தின் முன் நிற்கமுடியாது. அதுவே இன்றைய புலம் பெயர் சினிமாவுக்கு இவ்விரண்டு படங்களும் தரும் செய்தி.

5. பின் இணைப்பு: ஜீவனுடன் உரையாடல்

எச்சில்போர்வை, கவிக்குயில் இரண்டிற்கும் ஸ்கிரிப்டே இல்லை என்கிறார். ஜீவன். அதிலும் கவிக்குயில் பாத்திரங்கள் லொகேஷன் படப்பிடிப்பு பாடல் காட்சியமைப்பு அனைத்துமே திட்டமிடாதபடி படத்தில் பங்கு கொண்டவர்களின் மனநிலைக்கேற்றபடி படம் பிடிக்கப்பட்டது என்கிறார். படத்தில் இடம்பெறும் பெண்களின் நிஜ அடையாளமும் எதிர்வினைகளும் தேர்வும்தான் படத்தின் பாத்திரங்களின் குணச்சித்திரம் என்கிறார். பேசும் மொழிகள் துருக்கி, பிரெஞ்சு ஜேர்மன் என்கிறார். வனசா எனும் மலையாளி - ஜேர்மன் பெண்ணுக்கு தமிழ் பாட்டு பிடித்துத்தான் இருந்தது என்கிறார். படம் அவ்வப்போது பிடிக்கப்பட்டு எடிட்டிங்கில் படமாக உருப்பெற்றிருக்கிறது.

எடிட்டிங் படத் தொகுப்புத்தான் சினிமா என்கிறார். எஸர்ஜி ஐஸன்ஸ்டீன் எவ்வகையில் படத் தொகுப்பில் ஜீவனின் கருத்தியல் செயல்பட்டிருக்கிறது. யதேச்சை அல்லது திட்டமிடாத செயல்போக்குகூட திட்டமிடலுக்குள்ளும், சட்டமிடலுக்குள்ளும்தான் வருகிறது. இதைத்தான் தொகுப்பின் கருத்தியல் (Seeing Film as Politics or Editing as Politics) என்று சொல்கிறோம். நனவில் மனநிலையின் தர்க்கபூர்வமான பிரக்ஞை வெளிப்பாடு என்று இதைத்தான் சொல்கிறோம்.

கவிக்குயிலோடு ஒப்பிடும் போது எச்சில் போர்வைக்கு ஒரு பக்க ஸ்கிரிப்ட் இருந்தது என்கிறார். காட்சிரூபம் பற்றி, காட்சி அடுக்கு சிந்தனைத் தொடர்ச்சி பற்றி அவருக்கு திட்டங்கள் இருந்திருக்கிறது. அந்த திட்டமிடலும் ஸ்கிரிப்டும் கருத்தியலுக்கு ஒருங்கிணைந்து எச்சில் போர்வை படம் உருவாகி இருக்கிறது.

கவிக்குயிலில் நடித்த, வாழ்ந்த பெண்கள்' உண்மையில் பாராட்டுக்குரியவர்கள். மரியாதைக்குரியவர்கள். வாழ்வுக்கும் கலைப் படைப்புக்குமான உறவை இயல்பாக மேற்கொண்டவர்கள் இவர்கள். தமிழ்ப் பெண்களும், நமது ஐரோப்பிய தமிழ்ப் பெற்றோர்களும் ஐரோப்பியத் தமிழ் தயாரிப்பாளர்களும் இப் பெண்களின் இயல்பிலிருந்து கற்றுக் கொள்ள நிறைய உண்டு.

ஜீவனுடனான உரையாடலில் கிடைத்த இச்செய்திகள் எனக்கு மிகமிக ஆச்சரியமூட்டுவதாகவே இருந்தது.

பின்குறிப்பு:
எச்சில்போர்வை
கவிக்குயில்
யாத்திரை:
மூன்று குறும்படங்களும் கிடைக்குமிடம்:

JEEVAN VIDIO MOVIES
Po. Box N°: 950
4601 - Olten
Switzerland
Phone: 062 212 96 23
Fax: 079 209 12 49

யமுனா ராஜேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புலம்பெயர் பெண்களும் பெண்விடுதலை நிலைப்பாடும்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிரான்ஸ் தமிழ்ப் பெண்கள் அமைப்பினரால் 08.03.98 அன்று நடாத்தப்பட்ட எழுச்சிமாலை நிகழ்ச்சியில் ஈழமுரசுப் பெண்கள் பகுதியினரிடம் அங்கு வருகை தந்த பெண்கள் 'பெண் விடுதலை ஏன் அவசியம்' என்பது பற்றி தெரிவித்த அவர்களது அபிப்பிராயங்களினது தொடர்ச்சி......

**கேள்வி:** *பெண் விடுதலையும் அதற்காகப் போராடும் பெண் உரிமை அமைப்புக்களைப் பற்றியும் நீங்களும் ஒரு பெண் என்ற ரீதியில் உங்கள் அபிப்பிராயம் என்ன?*

**பதில்:** (இதில் ஐந்து பெண்கள் ஒத்தபடி ஒரே விதமாகப் பதில் சொல்லியிருந்தனர்) நாங்களும் இப் பெண் விடுதலையை நேசிக்கிறோம். எங்களால் தற்சமயம் முழுமையாக இப் போராட்டத்தில் ஈடுபட முடியாது. ஆனால் இதற்காக உங்களிற்குத் தேவையான ஒத்துழைப்பைத் தருவோம். ஆனால் இவ்வளவு நாட்களாகப் பல பேர் போரர்டியும் இன்றும் எம் எல்லாப் பெண்களுக்கும் ஒரேயளவு சமவுரிமை எம் சமுதாயத்தில் கிடைக்கவில்லை. அநேகமாக பொருளாதார அடிப்படையிலும் கல்வித்தரங்களிலும் ஏதோ ஒரு பாகுபாடு தோன்றிய வண்ணமே இருக்கிறதே. எம் தமிழ் பெண்களின் இன்றைய சூழ்நிலையில் கூட பெண்ணுரிமை என்பது ஏதோ சற்று வசதி படைத்த கல்வியறிவுடைய பெண்களால் மட்டுமே வெளிக்காட்ட முடிகிறது. மற்ற ஏழ்மை நிலையில் உள்ள சராசரிப் பெண்கள் தனித்து விடப்பட்டவர்களாக சற்று உங்களிலும் பார்க்க விலகிக் காணப்படுகிறார்கள். அவர்களை முதலில் உங்களுடன் இணையுங்கள். ஏனெனில் பெண் விடுதலை என்பது பொதுவாக எம் எல்லாப் பெண்களிற்கும் ஒரேயளவு கிடைக்க வேண்டும். ஏற்றத்தாழ்வுகள் இடம்பெறக்கூடாது.

இதுவரை கூறப்பட்டிருந்த அபிப்பிராயங்கள் பற்றியும், அது தொடர்பான விமர்சனமும் அடுத்த வாரம் இடம்பெறும்.

# பெண் விடுதலையும் அதில் பொருளாதாரத்தின் முக்கியத்துவமும்

இன்று உலகெங்கிலுமே பெண்களுக்கு சமுதாயத்தில் ஆண்களிற்குச் சமமான உரிமைகள் கிடைக்கவேண்டி போராடுகிறோம். ஆனால் இப்போராட்டம் நடத்தப்படுவதும், இப் பெண்விடுதலை உரிமைகளை வேண்டி நிற்பதும் இவர்களில் ஒரு சில தொகைப் பெண்களே. இதற்குக் காரணம் என்ன? ஏன் முழுப்பெண்கள் சமுதாயத்திலும் இது இன்று தேவைக்குரிய ஓர் விடயமாக ஏற்கப்படவில்லை?

இக்கேள்விகளை எம் மனங்களில் எழுப்பினால் முதலில் தெரிவது காலங்காலமாக தொடர்ந்துவரும் பாரம்பரிய பண்பாடுகளைக் கட்டிக்காக்க வேண்டுமென்ற அவசியமும், அடுத்தவரில் தங்கி வாழும் - குறிப்பாக (எம் தமிழ்ச் சமுதாயத்தில்) ஆண்களின் பொருளாதாரத்தில் தங்கிவாழ வேண்டிய அவசியமும்தான் என்பதே முதற் காரணங்களாகத் தெரிகின்றன.

பண்பாட்டைக் கட்டிக்காத்தல் என்பது மரபு ரீதியான பிரச்சினையாக இருப்பதால், படிப்படியாக மாற்றங்கள் தோன்றி வந்தாலும் பொருளாதாரத்தில் ஆண்களைச் சார்ந்து நிற்பது பெரிதளவில் இன்னும் களையப்படவில்லை. இது மேற்குலக நாடுகளை விட எம் தமிழ்ப் பெண் சமுதாயத்தில் அதிகளவு காணப்படுகிறது. ஆகவே இப் பொருளாதாரத்தில் தங்கி நிற்கும் நிலை என்பது எம்மிலிருந்து முழுமையாக தடுக்கப்பட வேண்டும். இந்த 'தடுக்கப்பட வேண்டும்' அல்லது 'தவிர்க்கப்பட வேண்டும்' என்ற கருத்தை நாம் முன்வைக்கும்போதுதான் பெண்கள் பொருளாதாரத் தேடலில் தாமும் முழுமையாக ஈடுபட வேண்டும் என்பதையும் வலியுறுத்த வேண்டியுள்ளது.

ஆம்! ஒரு சாதாரண மனிதர் என்ற நிலையில் ஆணோ அல்லது பெண்ணோ தமக்குரிய தேவையை தாமே நிவர்த்தி செய்யவேண்டும். அதற்கான பொருளாதாரத் தேடலை கட்டாயமாகத் தன் சொந்த முயற்சியால் அமைத்தல் வேண்டும். குறிப்பாக எம் பெண்கள் பெரிதும் குடும்பத்தைக் கவனிப்பதும், கணவன் வெளியே சென்று தொழில் புரிபவனாகவும், அதில் இவர்கள் தங்கி வாழும் நிலைமையுமே காணப்படுகிறது. உண்மையில் இந்நிலை கட்டாயம் மாற வேண்டும். குடும்பம் என்பதும் அதன் பராமரிப்பும் மிக அவசியமானதே. ஆனால் அதன் விளைவாக இதில் அதிக அக்கறை காட்டவேண்டிய நிலைமை பெண்களிற்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோல் 'ஆண்களிற்கும்' உள்ளது. இக் குடும்பப் பராமரிப்பில் ஒரு பெண் எவ்வளவு தன் சக்தியைப் பிரயோகிக்கின்றாள் என்பதை பலரும் பொதுவில் ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் அதற்கான ஊதியத்தை யாரும் எதிர்பார்ப்பதும் இல்லை. ஆனால் வெளியில் இப் பெண்ணுக்குச் சமமான சக்தியைப் பிரயோகித்து உழைக்கும் கணவனுக்கோ ஊதியம் வழங்கப்படுகின்றது. இங்குதான் அதிக உரிமைகளைத் தன்னகத்தே கொள்ள ஆண் சமூகத்திற்கு சந்தர்ப்பம் அமைகின்றது.

இந்த நிலைமை மாறவேண்டுமெனில் வீட்டின் குடும்பப் பராமரிப்பு, ஆண் பெண் இருவருக்கும் சமமாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட அளவு நேரமாவது பெண்கள் தாம் தனித்து பொருளாதாரத் தேடலுக்காக வீட்டைத் தாண்டி வெளியே செல்ல வேண்டும். தன் சொந்தக் காலில் நின்று தனக்குரிய வருமானத்தைத் தானே ஈட்டிக்கொள்ளும்போது தம்மை அறியாமலேயே தம்மைச் சுற்றியுள்ள தமக்குரிய உரிமைகளைப் பற்றியும் தேட ஆரம்பிப்பார்கள். இவ்வாறான தேடல்களின் அடிப்படையிலேயே, சில மூட நம்பிக்கைகளையும் அடுத்தவர்களின் தேவையற்ற சில கட்டுப்பாடுகளையும் தம்மகத்திலே இருந்து விடுவிக்க வேண்டும் என்பதிலும் அக்கறை காட்டுவார்கள். இப்படியான ஒரு சாதாரண மனிதனுக்குரிய தன் சொந்தத் தேவையை தானே நிவர்த்தி செய்வதால், அடுத்தவரில் தங்கிவாழும் நிலைமையும் அதனால் அவர்கள் மேல் திணிக்கப்படும் அடிமைத்தனங்களும் விடுவிக்கப்படும்.

எனவே பெண்களாகிய நாம் எமக்குரிய பெண்விடுதலை முழுமையாகச் சாத்தியமாக்க வேண்டுமென்றால் அதற்குத் தடையாக அமையும் பொருளாதாரத் தேவையை நிவர்த்தி செய்வதும், அதன் மூலம் எமக்குள்ள சொத்துரிமைகளைப் பலப்படுத்துவதும் ஒரு அவசியமான விடயமாகும்.

# வணங்குகிறேன் தாயே!

இருள் சூழ்ந்த தேசத்தில்
விடிவுக்காய் காத்திருந்தோம்
இன்றுவரை
இன்னும் இல்லை?
இன்றுடன் நீ மறைந்து
பத்தாண்டு காலம் பறந்தோடிவிட்டது!
நம்பமுடியவில்லை.
நம்பித்தான் ஆகவேண்டும்!
நிழலாக எம் நெஞ்சில்
நிலைத்து நின்றுவிட்டாய்.
நண்பன்போல் நடித்தவன்
மண்ணை இரத்தத்தில்
நனைத்திட்டான்!

பொய் முகம் கிழிந்து
உண்மையை உணர்ந்திட நாம்
பெரியவிலை கொடுத்துவிட்டோம்.
உண்ணா நோன்பிருந்து
உன்னை உருக்கினாய்
மண்மானம் காத்து
எம் மனத்தில் பதிந்தபின்
எங்கோ சென்றுவிட்டாய்!

நீ நடந்த பாதையில்
நாள்தோறும்
உன் வரவுக்காய் நாம்
காத்துக்கிடக்கிறோம்.
அதர்மம் வாழ்ந்ததாய்
வரலாறு இல்லை.

தர்மம் அழிந்ததாய்
சரித்திரம் இல்லையே?
வந்தவர் வல்லரசென்றால்
வாய்மூடி நிற்பதா?
ஆயுதம் கொண்டெமை
ஆடக்க நினைத்தால்
பூவையரும் பூகம்பமாவார் என
பாருக்கு முரசறைந்தாய்!
உறுதிக்கு இரும்பாய் இருப்பினும்
அன்புக்கு அடிமையானவள்
என் அன்னை பூபதி தாய்.

தாய் உள்ளம் கொண்டே
தமிழ் சேய்களை காத்தாய்.
உன் புகழ்பாட
வார்த்தையற்ற வறுமையை
உணர்கிறேன்!

என்னை ஆசீர்வதி தாயே...
உன்பணி தொடர்ந்திட
உன் பாதத்தில் இன்று
உறுதி எடுக்கிறேன்!
மண்ணை மீட்கிறேன்
இன்றேல்
மடிந்து வீழ்கிறேன்.

*மட்டுவில் ஞானக்குமாரன்*
*ஒஸ்னாபுறாக்,*
*ஜேர்மனி.*

# அமெரிக்காவுடன் போருக்குத் தயாராகும் ஈராக்கியப் பெண்கள்




இன்று பலரது எதிர்பார்ப்பாக இருப்பது ஈராக்கும் அமெரிக்காவும் யுத்தத்தில் ஈடுபடுமா அல்லது, கோபி அனானின் பெரும் முயற்சியின் பேரில் தற்போது உருவாகியுள்ள அமைதியான நிலைமை 'தொடர்ந்தும் காக்கப்படுமா' என்பதுதான். ஆனால் இப் போரை 'பலமாக' எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர் ஈராக்கிய மக்கள். அமெரிக்காவை நம்ப அவர்கள் தயாரில்லை. எங்கும் போருக்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. இதில் என்ன விசேடம் என்றால், இன்று ஈராக்கின் எல்லா இடங்களிலும் பயங்கரமான இறுகிய இஸ்லாமியச் சமய விதிகளுக்கிணங்க பர்தாக்களுடன் உலாவிவரும் ஈராக்கியப் பெண்கள், போரில் ஈடுபட பயிற்சி பெறுவதுதான். அநேகமாக உலகில் பெண் அடக்குமுறை கூடுதலாக இடம்பெறுவது இஸ்லாமியச் சமயத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண்களுக்கும்தான். இவர்கள் எவ்வளவு படித்தாலும் ஒரு குறிப்பிட்ட வரையறையைத் தாண்டி அவர்களுக்காக இடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைத் தாண்ட முடியாது. ஏன் தம் முகங்களைக்கூட மற்றவர்களிற்குக் காட்டும் உரிமை கூட மறுக்கப்பட்டிருந்தது.

எப்போதுமே பர்தாக்களை அணிந்தபடி கூடியளவு குழந்தை வளர்ப்பும், குடும்பத்தைக் கவனிப்பதுமே அவர்களது தொழிலாகக் கருதப்பட்டது. ஆனால் இப்போது என்றுமில்லாதவாறு கடுமையான இராணுவப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருக்கும் இந்த ஈராக்கியப் பெண்களின் திடீர்ப் புரட்சி, ஏனைய இஸ்லாமியப் பெண்களுக்குப் பெரும் வியப்பையும் மகிழ்ச்சியையும் கொடுத்துள்ளது. இதன் அடிப்படையில் தமக்கு புதுவழிகளில் ஏதும் புரட்சி அமையலாம். அல்லது இஸ்லாமிய சமய விதிகளுக்கமைய திணிக்கப்படும் கட்டுப்பாடுகளில் சில மாற்றமடையலாம் என்பதுதான். இவர்களது ஆவலுக்கான காரணம்..

உண்மையில் பலத்த ஒடுக்குமுறையில் கட்டுண்டு போயுள்ள ஏனைய நாடுகளிலுள்ள இஸ்லாமியப் பெண்களிற்கும், இதன் மூலம் பெரும் விழிப்புணர்வும், போராடும் துணிச்சலும் பிறக்க வேண்டும். அதன் வழியாக அவர்களிற்கும் சமுதாயத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமை கிடைக்க வேண்டும் என்பதே ஏனைய பிற பெண்களின் விருப்பமும் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் **செல்வி தீபா தியாகலிங்கத்தை** பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




## சித்திர முற்றம்

### வர்ணம் தீட்டிப் பாருங்கள்



## உங்கள் கைவண்ணம்



செல்வன்
குணசீலன் சாம்நாத்

**வயது:** 10 (09.03.1988)
**இடம்:**
Basel, Swiss.

இறைவா எனக்கொரு வரந்தருவாய்
நமது தாய் நாடாம் தமிழீழம்
சென்று நண்பர்களோடு
ஓடி ஆட ஒருநேரம்
பாடம் படிக்க ஒருநேரம்
பெற்றோர்களுடன் ஒருநேரம்
சந்தோசமாய் வாழ
சாமி அருளை வேண்டிடுவோம்



## கவிதை முற்றம்

### மதியைக் கண்டு குரைத்த நாய்



மாலை நேரம்
மதியும் வந்தது
நாய் அதைக் கண்டு
நன்றாய்க் குரைத்தது.

வெள்ளி நிலாவினை
வெள்ளை அப்பம் என
நினைத்ததால் அதுதான்
நீளக் குரைத்தது
கிடைக்குமா அந்நிலா?

அடுத்தநாள் மாலையும்
அந்நிலாக் கண்டு
அயராது குரைத்தது
அந்த நாய் தான்.



அடைய முடியா
அரும் பொருள் குறித்து
எத்தனை பேர் தாம்
எண்ணி ஏங்கி
முயன்று கொண்டுள்ளனர்!

*பிரெஞ்சு எழுத்தாளர்*
*ஃப்ரெதெரிக் பத்தாய்*

## பழமொழிகள்

1. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
2. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.
3. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
4. இளமையில் கல்வி சிலையில் எழுத்து.
5. இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை.
6. உப்பிட்டவரை உயிர் உள்ளவரை மறவாதே.
7. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
8. சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்.
9. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
10. நிழலின் அருமை வெய்யிலில் தெரியும்.

## அறிந்து கொள்ளுங்கள்

### உலகில் பெரியவை


| | |
|---|---|
| பெரிய கண்டம் - **ஆசியா** | - 42,700.00 ச.கி.மீ. |
| உயரமான மலை - **எவரெஸ்ட்** | - 8848 மீற்றர். |
| பெரிய கடல் - **அமைதிப் பெருங்கடல்** (பசுபிக்) | - 181,000,000 ச.கி.மீற்றர். |
| ஆழக் கடல் - **மரியானாட் ரெஞ்ச்** | - 11,033 மீற்றர். |
| பெரிய ஏரி - **கஸ்பியன் சாகரம்** | - 440,000 ச.கி.மீற்றர். (ரஷ்ய - ஈரான்) |
| ஆழமான ஏரி - **பேகால்** (சைபீரியா) | - 1519 மீற்றர். |
| நீளமான நதி - **நைல்** (ஆபிரிக்கா) | - 6679 கி.மீற்றர். |
| உயரமான நீர்வீழ்ச்சி - **ஏஞ்சல்** (வெனிசுலா) | - 979 மீற்றர். |

## குட்டிக்கதை படிப்போம்

### தாயின் அன்பு

ஒரு காட்டுப் பூனை, தன் குட்டிகளுடன் ஆற்றங்கரையில் உலவுவதாக எனக்குச் செய்தி கிடைத்தது. தாய்ப் பூனை, குட்டிகளை விட்டுப் பிரிந்திருக்கும் நேரம் பார்த்து அவற்றைப் பிடித்துச்கொண்டு வர எண்ணினேன்.

அங்கே சென்று ஒரு மறைவிடத்தில் தங்கினேன். மூன்று குட்டிகள் தாயைச் சுற்றி விளையாடிக்கொண்டு இருந்தன. நான் மறைந்திருப்பதை எப்படியோ அறிந்து கொண்டது தாய்ப் பூனை. அது தன் குட்டிகளைப் பிரிந்து போகாமல் அங்கேயே இருந்தது. நான் இருக்கும் வரை அது தண்ணீர் குடிக்கக் கூடப் போகாது என்பதை உணர்ந்துகொண்டேன். உடனே ஒரு தந்திரம் செய்தேன். முற்றிலும், என்னை மறைத்துக்கொண்டு பூனைக் குட்டிகளைப் பார்க்காமலிருந்தேன்.



ஆற்றங்கரையில் நான் என் ஆட்களில் இருவரை நிறுத்தியிருந்தேன். பூனை தண்ணீர் அருகில் வந்தவுடன் கொம்பை ஊதச் சொல்லியிருந்தேன். பொறுமையோடு நான் சில மணி நேரம் காத்திருந்தேன்.

கொம்புச் சத்தம் கேட்டது.

நான் ஒரே தாண்டில் சென்று, அங்கிருந்த இரண்டு பூனைக் குட்டிகளையும் இரண்டு கைகளில் எடுத்துக்கொண்டேன்.

மூன்றாவது குட்டியை அங்கும் காணவில்லை.

நான் ஓடுவதற்குத் திரும்பினேன்; எதிரே பூனை வாயில் ஒரு குட்டியைக் கவ்விக் கொண்டு வந்தது. தாங்க முடியாத தாகத்தினால் தண்ணீர் குடிக்கப் போனபோது, தன்னால் முடிந்த ஒரு குட்டியை மட்டும் கவ்விச் சென்றிருந்தது என்பது எனக்குப் புரிந்தது.

மனிதனின் வலிமை பற்றி அது நன்கு உணர்ந்து இருந்தது போலும். அது என்னைத் தாக்க முயலவில்லை. நடக்கும் என்னைப் பின் தொடர்ந்து வந்தது. வாயில் கல்விய குட்டியையும் அது விடவில்லை. எனக்கும் அதற்கும் ஒரு குறிப்பிட்ட இடைவெளி இருந்தது. நான் நின்றால் அதுவும் நின்றது; நான் நடந்தால் அதுவும் தொடர்ந்தது. திரும்பிப் போகும் எண்ணம் அதற்கு இல்லை என்பது தெளிவாகப் புரிந்தது. தன் குட்டிகளை மீண்டும் அடையும் வாய்ப்புக் கிடைக்கும் என்று அது நம்பியது என்று எனக்குத் தோன்றியது. நான் என் ஆட்களுடன் லாரியில் ஏறினேன். லாரி சென்று கொண்டிருந்தது. நாள் முழுவதும் அது லாரியைத் தொடர்ந்து வந்தது. வாயில் கவ்விய குட்டியுடன் மனம் சோராமல் வந்தது.

இரவில் ஓரிடத்தில் தங்கினோம். அப்போது அந்தப் பூனையைக் காணவில்லை; ஆனால் காலையில் லாரி கிளம்பியபோது அது தொடர்ந்து வந்தது.

நீண்ட தொலைவு, இடையில் வந்த சிற்றூர்கள் இவற்றால் அது தன் முயற்சியை விடவில்லை.

மூன்றாம் நாள் தொடங்கியது.

அதன் மன உறுதி என் உள்ளத்தைத் தொட்டது. எனக்கு இரக்க உணர்ச்சி தோன்றியது. லாரியை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கினேன். பூனைக் குட்டிகளை வாங்கிச் சாலையோரத்தில் விட்டேன்.

சற்றுத் தொலைவில் நின்றேன்.

இரக்கத்துக்குரிய அந்தக் காட்டுப் பூனை குட்டிகளை நெருங்கியது. அவற்றை மோந்தது, நக்கியது மீண்டும் மோந்தது...

குட்டிகளை ஒவ்வொன்றாகக் கவ்விக்கொண்டு பக்கத்திலிருந்த தோப்பினுள் சென்றது.

தாயன்பு என் கொடிய செயலை வென்று விட்டது.

*- பெர்த்தோலே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோறு விற்றல்

> **'பெருஞ்சோறு' என்னும் சொல்லும் இலக்கியங்களில் காணப்படுகிறது. இது அரசன் போருக்குச் செல்லு முன் வீரர் அனைவரோடும் கூடி உண்டதைக் குறிக்கிறது. எனவே இது ஒரு போர்ச் சடங்கு நிகழ்ச்சியாக செய்யப்பட்டது எனத் தோன்றுகிறது.**

சோறு – அவிழ்பதம் ஆகிய இரண்டு சொற்களும் பழைய தமிழ் இலக்கியங்களில் வழங்குகின்றன. இன்று நெல்லரிசிச் சோறு மட்டுமே சோறு என்ற பொருளில் வழங்கப்படுகிறது. ஆனால் புஞ்சை நிலத்தில் வாழும் மக்கள் கம்பு, சோளம், குதிரைவாலி ஆகிய தானியங்களைச் சமைத்து உண்ணும்போது கம்பஞ்சோறு, சோளச்சோறு, குதிரைவாலிச் சோறு என்றே கூறுகின்றனர். அதுவும் அன்றிக் கற்றாழையின் சதைப்பற்றினையும், பனை, தென்னை ஆகிய மரங்களில் திரட்சியில்லாத சதைப் பற்றினையும் 'சோறு' என்றே வழங்குவர்.

'அரிசி' என்னும் சொல்லும் நெல் அரிசியை மட்டும் குறிக்காது. அவித்து உண்ணும் சிறிய தானியங்கள் அனைத்தையும் குறிக்கும். 'அரி' என்னும் வேர்ச்சொல்லுக்குச் 'சிறிய' என்பதே பொருளாகும். (அரிமணல், அரிநெல்லிக்காய்) வெள்ளைப் பூண்டின் சிறிய கீற்றுக்களையும் வெள்ளைப் பூண்டு அரிசி என்று பெண்கள் கூறும் வழக்கமுண்டு.

இன்று எல்லா ஊர்களிலும் உணவு விற்கும் கடைகள் உள்ளன. சில ஊர்களில் குடிநீரும் விற்பனைப் பொருளாகிவிட்டது. தமிழர் பண்பாட்டில், 'சோறும் நீரும் விற்பனைக்கு உரிய பொருளல்ல' என்பது இலக்கியங்களைக் கூர்ந்து நோக்கும்போது தெரிகிறது. வறியார்க்குச் சோறிடுதல் அறம் என்கிற கோட்பாடு மட்டுமே திரும்பத் திரும்ப வலியுறுத்தப்படுகிறது. கிராமப்புறங்களில் ஊர் மடத்தில் (சாவடி) வழிச் செல்வோர் யாரும் உண்ணாமல் இரவில் படுத்திருந்தால் ஊர்க்காரர்கள் 'இரவுச்சோறு' கொடுக்கும் வழக்கம் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்புவரை நடைமுறையில் இருந்திருக்கிறது. தங்கள் இடத்தில் இரவில் பசியோடு



யாரும் உறங்கிச் செல்வது தங்களுக்கு மானக்கேடு என்று கருதியுள்ளனர். சிறுகுடிக்கிழான் பண்ணன் வறியார்க்குச் சோறளித்த செய்தி சங்க இலக்கியத்தில் பேசப்படுகிறது. 'உயிர் மருந்து' எனச் சோற்றினை வருணிக்கும் மணிமேகலை வறியவர்க்கும் ஊனமுற்றோர்க்கும் கைவிடப்பட்டவர்க்கும் நோயாளிக்கும் உணவளிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. தமிழ் நாட்டில் புகுந்த சமண சமயமும் நால்வகைக் கொடைகளில் (சோறு, மருந்து, கல்வி, அடைக்கலம்) உணவுக் கொடையையே முதலாவதாகப் பேசுகிறது. 'அன்ன தானம்' செய்யும் வழக்கம் சமணர்களால் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். பக்தி இயக்கத்தின் எழுச்சியோடு கோயில்களில் அடியார்க்கு உணவு வழங்கப்பட்டிருக்கிறது என்பதனை 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என வரும் அப்பர் தேவாரத்தால் அறியலாம்.

ஒன்பதாம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டின் நெடு வழிகளில் அமைந்த தாவளங்களையும் (சத்திரங்களையும்) மடங்களையும் காணுகின்றோம். விசய நகர மன்னர் வருகைக்குப் பின்னர் கி.பி 15 ஆம் நூற்றாண்டு அளவில்தான் சத்திரங்களில் சோறு விற்கப்பட்ட குறிப்புக்களைக் காணமுடிகிறது. பிற்காலச் சோழர் கல்வெட்டுக்களில் கோயில்களிலும் மடங்களிலும் 'சட்டிச் சோறு' வழங்கிய செய்தி குறிக்கப்படுகிறது. இவ்வழக்கம் 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நடைமுறையில் இருந்துள்ளது. அக்காலம் வரை சோறும் நீரும் மட்டுமே இந்த விற்பனை விதிவிலக்கைப் பெற்றிருக்கின்றன. சாலையோரக் கடைகளில் பிற உண்பண்டங்கள் (தின்பண்டங்கள்) விற்கப்பட்ட செய்தி சிலப்பதிகாரத்திலேயே பதிவாகி இருக்கிறது.

இதுவன்றி, 'பெருஞ்சோறு' என்னும் சொல்லும் இலக்கியங்களில் காணப்படுகிறது. இது அரசன் போருக்குச் செல்லு முன் வீரர் அனைவரோடும் கூடி உண்டதைக் குறிக்கிறது. எனவே இது ஒரு போர்ச் சடங்கு நிகழ்ச்சியாக செய்யப்பட்டது எனத் தோன்றுகிறது. இந்த உணவு ஊனும் சோறும் கலந்தது . என்பதனை 'ஊன் துவை அடிசில்' என்று குறிக்கிறது பதிற்றுப்பத்து.

விசயநகரப் பேரரசு காலம் தொடங்கி தமிழ் நாட்டுச் சத்திரங்களில் சோறு விற்கப்பட்டு, பின்னர் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 'ஹோட்டல்' எனப்படும் உணவு விடுதிகள் தொடங்கப்பட்டன.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் தமிழ் நாட்டு நகரங்களிலும், சிறு நகரங்களிலும் காசுக்குச் சோறு விற்கும் கடைகள் உண்டாயின. அப்பொழுதும்கூட, பிராமணரும் பிராமணரை அடுத்த மேல் சாதியினரும், முசுலிம்களும் தங்கள் தங்கள் சாதியினருக்கு மட்டுமே உரிய உணவகங்களை நடத்தி வந்திருக்கின்றனர். நாட்டு விடுதலைக்குப் பின்னரே பிற சாதியார் உணவகம் நடத்தும் தொழிலை மேற்கொள்ளத் தொடங்கினர் நாட்டு விடுதலைக்குப் பின்னரும் பிராமணர் மட்டும் உண்ணும் உணவகங்கள் இருந்தன. அவற்றை எதிர்த்துப் பெரியார் ஈ.வெ.ரா. வின் தொண்டர்கள் மறியல் செய்தபின் அவ்வழக்கம் கைவிடப்பட்டது நாமறிந்த செய்தியே.

*- தொ.பரமசிவன்*


**அன்னை பூபதியம்மாவின் 10வது ஆண்டு நிறைவையொட்டி**

**செஞ்சோலைச் சிறார்களுக்காக**

தமிழ்ப் பெண்கள் அமைப்பு சார்சல் நடாத்தும்

**செஞ்சோலை மாலை**



காலம்: 19.04.1998 ஞாயிறு
நேரம்: மாலை 4 மணி
இடம்: SALLE PABLO NERUDA
Av. Paul Vellery, 95200 Sarcelles.
RER-D : Garges Sarcelles
(புகையிரத நிலையம் முன்பாக)

(இந்நிகழ்ச்சி மூலம் பெறப்படும் நிதியனைத்தும் செஞ்சோலைக்கு வழங்கப்படும்)

தமிழ்ப் பெண்கள் அமைப்பு – 01 43 58 11 42


# நாற்று

இளம் ஆக்கங்கள்

## கூடி எழுந்திட்டால்...

வீசும் காற்றும் - புது
வேகம் கொள்ளட்டும் - நாம்
பேசும் மூச்சுக்குள் - ஒரு
யாகம் செய்யட்டும்
காலக் கடப்பிற்குள் - கலி
தீரச் செய்யட்டும் - நவ
நீளக் கனவுகள் - இங்கு தொடர்
நிகழ்வுகள் ஆகட்டும்
போதும் புலம்பல்கள் - புலி
ஆளும் திருநாட்டின்
ஆசைக் குழந்தைகள் நாம்
கூடி எழுந்திட்டால்
குரல் வானைப் பிளந்திடும்
சோகம் தவிர்த்தாடு!
நாளை அல்ல - இன்றும்
சொர்க்கம் நம் நாடே!!

– அன்புடன்
ஈழமைந்தன்.

## வன்னி மண்ணே வாழி நீ

ஊரிழந்து உறவிழந்து
உணவு உடை தானிழந்து
வேரிழந்து வந்த எம்மை
வாழ வைத்த வன்னி மண்ணே
சரித்திரம் ஆனாய் நீ
சாவிலும் உனை மறவோம் - எம்
கண்ணீர் கடலாக
கிளாலியின்அலை தாண்டி
துயர் சுமந்து வந்த போது
தாங்கியவள் நீ தானே
நாளைய ஈழமதின் - தாய்
நகரமும் நீ தானே
சூரியக் கதிர் எம்மை
சுட்டெரித்த வேளையிலே
நீமட்டும் என்ன
செல்வச் செழிப்புடன்
சிறப்புடனா விற்றிருந்தாய்
மருதம் எல்லாம் பாலையாகி
மாண்டிருந்த நன்னழகு
இருந்தாலும்...
அகதியாய் வந்தவரை
ஆதரித்த தமிழ்த் தாய் நீ
இன்று...
வெற்றி நிச்சயம் உன்னை
வாட்டுவதை நானறிவேன் - உன்
வண்ண எழில் மேனி கண்ட
வடுக்களையும் நானறிவேன்
என்ன செய்வது...
உன் துயரம் பகிர்ந்து கொள்ள -
இன்று
உன்னருகில் நானில்லை
என்றாலும்...
உனக்காகப் புலம் பெயர்ந்தும்
உழைத்திட நான் விரும்புகின்றேன்
எல்லோரும் இங்கே
உறங்குவதாய் எண்ணாதே
தேச விடியலுக்காய்
பூப்பறிப்போர் நிறைய உண்டு
தங்கள் நிலை துறந்து - தமிழன்
நலம் காக்கும் மனிதருண்டு
ஆதலால் தாயே
மனம் துவண்டு போகாதே
உன் தலையன் உள்ள வரை
உன்னை எவன் தொட முடியும்
அவன் சேனைவீரர்கள்
அழிப்பார்கள்உன் பகையை
அது வரை...
உன் உத்தம புதல்வர்களை
காத்திரு தாயே
அது போதும்.

– நாக. தயாகரன்
சுவிஸ்

## உன் இனம் அங்கே...

அந்திய நாட்டில் வாழும் தமிழினமே...... நில்!
உன் இனத்தவன் ஈழத்தில்
படும் நிலையைக் கொஞ்சம்
திரும்பிப் பார்...

பிறந்த குழந்தை பாலுக்கழும் அவல நிலை கண்டும்
தன் பிள்ளையை பட்டினி போட்டு
வேங்கைக்கு உணவளிக்கும் தமிழ்
அன்னை எங்கே...?
உண்ட உணவு செமிப்பதற்கு
பிறந்த நாள் கேக் வெட்டி, வந்தவர்கள்
உண்ட மீதியை ஐயோ மிஞ்சிப் போச்சு
என்று அலறும்நீ எங்கே

பருவமடையும் வயதில் தலைவனின்
அரவணைப்பில் களம் புகுந்து
பகைவனின் துப்பாக்கியால் உயிர்
துறந்து குருதியில் நனையும்
அவர்கள் எங்கே..?
பெண் பருவமடைந்தவுடன் ஊரெங்கும்
முரசறைந்து தங்கத்தால் அலங்கரித்து
மஞ்சள் தண்ணீரில் நீராட்டும் நீ எங்கே!

செல்வி ஈழநிலா (தமிழாலயமாணவி)
யேர்மனி, ஸ்ருட்காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை

# சதுப்பு நிலம்

- எம்.ஏ.நுஃமான் -

அவளை இதற்குமுன் வேறு எங்கேயும் கண்டதாக அவனுக்கு நினைவு இல்லை. நிச்சயமாக நான் கண்டிருக்க முடியாது என்றுதான் அவன் நினைத்தான். ஏனென்றால் அவன் அடிக்கடி மட்டக்களப்புக்கு வருவதில்லை. எப்போதோ இரண்டொரு முறைதான் அவன் இங்கு வந்திருக்கிறான். அவள், அவனுக்கு இடதுபுறமாகச் சிறிது தள்ளி அமர்ந்திருந்தாள்.

அவனுக்கு அவளை மீண்டும் ஒருமுறை பார்க்க வேண்டும்போல் இருந்தது. ஆயினும் புத்தகத்தையே வாசிப்பதுபோல் அவன் பாவனை பண்ணினான். என்றாலும் மனம் அலைபாய்ந்தது. புத்தகத்தில் ஒன்றுமே அவனுக்குப் பிடிபடவில்லை. வெறும் எழுத்துக்களை கண்கள் மேய்ந்துகொண்டு சென்றன. இன்னும் அவள் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதுபோல் அவன் உணர்ந்தான். புத்தகத்தில் குனிந்திருந்த தன் நெற்றியில், அவ்ள் விழிப்பார்வை பட்டுச் சுடுவதுபோல் அவனுக்கு உணர்வு தட்டியது.

அவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான். ஆனால் அவள் அவனைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. தன் பாட்டில் புத்தகத்தைப் பார்த்து கொப்பியில் ஏதோ குறிப்பு எழுதிக்கொண்டிருந்தாள்.

அதே மேசையில் அவளைச் சுற்றி அவளுடைய தோழிகள் மூவர் அதேபோல் ஏதோ குறிப்பு எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவரும் அவனைக் கவனிக்கவே இல்லை.

அவனுக்கு அது சிறிது ஏமாற்றமாக இருந்தது. வெட்கமாகவும் இருந்தது. அவள் தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதாக நினைத்ததை எண்ணியபோது அவனுக்குச் சிறிது அவமானமாகவும் இருந்தது. அவன் மீண்டும் அந்த மாதப் பத்திரிகையில் தலை குனிந்தான்.

தான் அவளைப் பார்த்ததை மற்றவர்கள் பார்த்திருக்கக்கூடும் என்று திடீரென அவன் நினைத்தான். மற்றவர்கள் தன்னைப் பிழையாக நினைப்பதை அவன் விரும்பவில்லை. யாரும் தன்னைக் கவனிக்கிறார்களா என்று அவன் தலை நிமிர்ந்து சுற்றவும் பார்த்தான். யாருமே அவனைக் கவனிக்கவில்லை. எல்லோரும் தம் பாட்டில் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் புரட்டிக்கொண்டும் வாசித்துக்கொண்டும் இருந்தனர். எங்கும் அமைதியாக இருந்தது. தாள்புரளும் ஓசையை விட மற்றப்படி அறை மௌனமாகவே இருந்தது. சற்றுத் தள்ளி மேசைத் தொங்கலில் இருந்த அந்தக் கண்ணாடி போட்ட மனிதன் இடைக்கிடை காலை இழுத்து நீட்டுவதால் செருப்புத் தரையில் உராயும் ஓசை மெதுவாகக் கேட்டது. தூரத்தே கல்லடிப்பாலத்தினூடாக பஸ் ஒன்று போவது ஜன்னலூடே தெரிந்தது. கீழே பரந்து கிடக்கும் வாவியில் இருந்து வரும் காற்று மேல் மாடியில் மிகவும் இதமாக வீசியது. அவன் மேல்மாடிக்கு ஏறி வந்தபோதுதான் அவளைக் கண்டான். எழுதுவதை விட்டுவிட்டு அவள்தான் அவனைத் திரும்பிப் பார்த்தாள். அவள் மட்டுமில்லை மேல் மாடியில் இருந்த எல்லோரும்தான் அவனை ஒரு கணம் பார்த்தார்கள். பார்த்துவிட்டு மீண்டும் தங்கள் வாசிப்பில் கவனத்தைப் பதித்துக் கொண்டார்கள். எல்லோரும் அவனைப் பார்த்ததும் அவனுக்குக் கூச்சமாக இருந்தது. அவன் வாசிகசாலைக்கு பொருத்தமில்லாத சப்பாத்தை அணிந்திருந்தான். சப்பாத்தின் அடிப்பகுதியில் அடித்திருந்த இரும்பு லாடன்கள் சிமெந்துத் தரையில் டொக் டொக் என்று சத்தமெழுப்பின. வாசிகசாலையின் அமைதியில் அந்தச் சத்தம் மிகவும் பெரிதாக கேட்பதுபோல் இருந்தது.

அவன் மிக மெதுவாக நடந்துவந்தான். மேசையில் கிடந்த ஒரு பத்திரிகையை கையில் எடுத்துக்கொண்டு தூணோரத்தில் கிடந்த கதிரையில் உட்கார்ந்தான். அதுவரை அவள் அவனைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தாள். அவன் நடந்துவந்த மெதுமை அவளுக்கு வேடிக்கையாக இருந்திருக்கவேண்டும். பேனையின் மூடிப்பகுதி அவள் கன்னத்தில் பதிந்திருப்பதை அவன் கண்டான். அவள் இதழ்களில் ஒரு சிறிய நகை நெளிந்ததையும் அவன் கண்டான். பிறகு அவன் அந்தப் பத்திரிகையில் பார்வையைப் புதைத்துக்கொண்டான்.

அவளுடைய விழிகள் அவனைக் கவர்ந்தன. அவை மிகவும் அழகாக இருப்பதாக அவன் நினைத்தான். மீண்டும் ஒரு முறை அவளைப் பார்க்கவேண்டும் என்று அந்த நினைப்பு அவனைத் தூண்டியது. கையைத் தூக்கி தலையின் முன் மயிரைத் தடவிவிட்டவாறு அவள் புறம் திரும்பிப் பாார்த்தான். அவள் இன்னும் எழுதிக்கொண்டுதான் இருந்தாள். அந்த நாலுபேரிலும் அவள் மட்டும்தான் அழகாக இருப்பதாக அவன் நினைத்தான். பாடசாலை உடையில் அவள் அழகாகத்தான் இருந்தாள். பழுப்பு நிறமான வட்டமான முகத்திற்கு அவளுடைய சிறிது தடித்த சிறிய உதடுகள் கவர்ச்சியாக இருந்தன. அவள் அடிக்கடி கீழுதட்டைக் கடித்துக்கொண்டு எழுதினாள். அதனால் அவள் இதழ்கள் ஈரமாக இருந்தன. அந்த இதழ்களின் ஈரப்பொழுபொழுப்பு அவனைக் கவர்ந்தது. அவளுடைய இரு காதுகளின் மேற்பகுதிகளும் கூந்தலுள் மறைந்திருந்தன. அவள் பின்னல்களில் ஒன்று தோள்களில் இருந்து வழுவி முன்புறம் விழுந்து கொப்பியின் மீது பட்டும் படாமலும் ஆடியது. அவள் அதை இடது புறங்கையால் ஒதுக்கிவிட நிமிர்ந்தபோது அவளுடைய கண்கள் அவனைச் சந்தித்தன. அவனுக்கு 'சுரீர்' என்றது. தான் அவளைப் பார்த்துக் கொண்டிருந்ததை அவள் பார்த்துவிட்டதைக் கண்டதும் அவன் கண்கள் உயர்த்தி மேலே சுவர் கடிகாரத்தைப் பார்த்தான். பிறகு தனது மணிக்கூட்டையும் அதனோடு ஒப்பிட்டுப் பார்த்தான். தன்னைப் பற்றி அவள் பிழையாக நினைக்கக்கூடும் என்று அவன் நினைத்தான். அந்த நினைப்பு அவனைச் சுட்டது. அவள் அவ்வாறு நினையாமலும் இருக்கலாம். அவளுக்கு என்னைப் பார்ப்பதில் ஒரு கவர்ச்சி உண்டாகி இருக்கலாம். நான் அவளைப் பார்த்ததனால் கவர்ச்சி கொண்டு அவள் மீண்டும் என்னைப் பார்க்கக்கூடும் என்றெல்லாம் அவன் நினைத்தான்.

எனினும் இனி அவளைப் பார்க்கக்கூடாது என்று அவன் உறுதிகொண்டான். தான் பார்க்காவிட்டாலும் அவள் தன்னைப் பார்ப்பாள் என்ற எண்ணத்தில் அவன் நிமிர்ந்து உட்கார்ந்தான். கையில் இருந்த தமிழீழப் பத்திரிகையை போட்டுவிட்டு ஓர் ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துக்கொண்டான். அவனுக்கு ஆங்கிலம் தெரியாது, ஆனால்



சாதாரணமாக வாசிக்க முடியும். வாசிப்பது அரைகுறையாக விளங்கும். ஆயினும் அவன் அதை வாசிக்கத் தொடங்கினான். அடிக்கடி வாசித்ததை நிறுத்தி வாசித்ததை ஆழ்ந்து சிந்திப்பதுபோல் நெற்றியைச் சுருக்கிக் கொண்டான். எதையோ கண்டு மகிழ்ச்சி உற்றவன்போல் முகத்தை மலர்ச்சியடையச் செய்துகொண்டான்.

என்றாலும், சே! இது பெரிய கேவலம் என்று தனக்குள் முணுமுணுத்துக்கொண்டான். சாதாரணமாக இருக்க முனைந்தான். காற்சட்டைப் பையில் இருந்த கைலேஞ்சியை எடுத்து முகத்தையும் கழுத்தையும் பிடரியையும் துடைத்துக் கொண்டான். பிறகு பத்திரிகையை வேகமாகப் புரட்டி அதிலுள்ள படங்களை பார்க்க முனைந்தான்.

ஆயினும் மனம் அலைபாய்ந்தது. அவள் இதற்கிடையில் தன்னைப் பார்த்திருக்கலாமென்று அவன் கற்பனை பண்ணினான். இப்பொழுது அவள் என்ன செய்கிறாள். உதட்டைக் கடித்துக்கொண்டிருக்கிறாளா, இல்லையா? என்று பார்க்கவேண்டும் போல் இருந்தது. என்றாலும் அவன் பார்க்கவில்லை. தான் பார்த்ததை அவள் பார்த்துவிட்டால் தன்னைப் பற்றிக் குறைவாக நினைப்பாள் என்று அவன் எண்ணினான். அது தனது ஆண்மைக்கு பெரிய அவமானம் என்றும் அவன் கருதினான்.

அவள் யாராக இருக்கக் கூடுமென்று அவனுக்குத் தெரியாது. பள்ளி மாணவி என்பது மட்டும் நன்றாகத் தெரிந்தது. பள்ளி விட்டதும் புத்தகக் கட்டோடு வந்து ஏதோ குறிப்பு எடுக்கிறாள் என்பதும் தெரிந்தது. ஒருவேளை அவள் அட்வான்ஸ்லெவல் படிக்கக்கூடும் எங்கே படிக்கிறாளோ வின்சன் தானே பக்கத்தில் இருக்கிறது. அங்கேதான் படிக்கக்கூடும். என்றெல்லாம் யோசித்தவாறே ஜன்னலூடே பார்வையைச் செலுத்தினான். பாலத்தினூடாக ஒரு வைக்கோல் லொறி மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. ஜன்னல் நிலைப்படியில் ஒரு அடைக்கலக் குருவி வந்துநின்று கீச்சென்று இருமுறை கத்தியது. எங்கோ வெளியே பறந்து சென்றது. பக்கவாட்டில் கதிரைகள் இழுபடும் சத்தம் கேட்டது. அவர்கள் போவதற்காக எழுந்துவிட்டார்கள் என்று அவன் நினைத்தான். அவளைப் பார்க்கக்கூடாது என்ற உறுதியுடன் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டினான். செருப்புச் சத்தங்கள் மெதுவாக ஒவ்வொரு அடியாகக் கேட்டன. தான் பார்ப்பதனாலோ பார்க்காமல் விடுவதனாலோ தனக்கோ அவளுக்கோ என்ன வந்துவிடப் போகின்றது என்று அவன் நினைத்தான். இது தனது பலவீனம்தான் என்று யோசித்தபோது அவளைப் பார்க்கவேண்டும்போல் இருந்தது.

அவள் கீழே குனிந்துகொண்டு ஒவ்வொரு அடியாகக் இறங்கிச் சென்றாள். கீழே செருப்புக்களின் ஓசை கேட்டு மறைந்தது. அவனுக்கு நெஞ்சில் சிறிது உறுத்தலாகவும் பாரமாகவும் இருந்தது. இது வெறும் அர்த்தமில்லாத உணர்ச்சி என்று அவன் நினைத்தாலும், அது அப்படித்தான் இருந்தது. அவள் பின்னலைத் தள்ளி விடுவதற்காக நிமிர்ந்த அந்தச் சந்தர்ப்பத்தில் தான் பின்வாங்காது அவளுடைய கண்களை உற்றுப் பார்த்திருக்கலாம் என்று அவன் எண்ணினான். தான் பார்த்திருந்தால் அவளும் கண் கொடுத்திருக்கக்கூடும் என்று அவன் நினைத்தான். அவளுடைய மொழுமொழுப்பான கன்னங்களும், ஈரமான உதடும், எண்ணை பூசாத கூந்தலும் அவன் கண்ணுக்குள் நின்றன.

அவள் இருந்த கதிரையை வெறித்துப் பார்த்தான். இப்போது யாரைப்பற்றியும் அவன் கவலைப்படவில்லை. ஏன் என்றால் அவன் பார்க்கும் இடத்தில் அந்தப் பெண்கள் இல்லை. கதிரைகள் காலியாகத்தான் இருந்தன. எழுந்து அவள் பின்னாலேயே சென்று பார்ப்போமா என்று யோசித்தான். கூடவே உடனே சென்றான். நான் அந்த பெட்டைகளை பார்ப்பதற்காகத்தான் அவர்கள் பின்னால் எழுந்து செல்கிறேன் என்று மற்றவர்கள் நினைக்கக்கூடும் என்ற எண்ணம் எழுந்தது.

அவன் கடிகாரத்தைப் பார்த்தான். நாலரைமணி ஐந்து மணிக்கெல்லாம் ஆஸ்பத்திரியில் நிற்கவேண்டும். அவனுடைய சகோதரிக்கு நேற்று ஒப்பரேசன் நடந்தது, அவளைப் பார்ப்பதற்காகத்தான் கல்முனையில் இருந்து காலையில் வந்தான். ஆறேகால் கல்லோயா எக்ஸ்பிரசில் திரும்பிப் போகவேண்டும். அவன் எழுந்து கீழே சென்றான். அவளும் தோழிகளும் பள்ளிவாசல் வாகையின் கீழ் நின்று கதைத்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் நிற்கும்போது அவன் அவர்களைக் கடந்துபோக விரும்பவில்லை. இப்போது போனால் தங்களைப் பார்ப்பதற்காகத்தான் இவன் வருகிறான் என்று ஒருவேளை அந்தப் பெட்டைகள் நினைக்கக்கூடும் என்று அவன் எண்ணினான்.

வாசிகசாலைக்கு வெளியே நாட்டியிருந்த விளம்பரப் பலகையை வாசிக்கத் தொடங்கினான்.

பொது நூல்நிலையம்
மட்டக்களப்பு.
திறந்திருக்கும் நேரம்...
மூடும் நேரம்...

என்று ஒவ்வொன்றாக வாசித்தான். அது அலுத்தபின் வெறுமையாகக் கிடந்த கோட்டடியையும், தூரத்தே தெரிந்த கச்சேரி மதிலையும், நகரசபைக் கட்டடத்தையும் பார்த்துக்கொாண்டு நின்றான். விளையாட்டு மைதானத்தில் ஏழெட்டுப் பெண் பிள்ளைகள் பந்து விளையாடிக்கொண்டு இருந்தார்கள். அப்போது அவளும் தோழிகளும் தபால் கந்தோரடியால் நடந்துகொண்டிருப்பதை அவன் கண்டான். அவன் சிறிது தூரம் நடந்து பள்ளிவாசலடிக்கு வந்தான். அவர்கள் நெடுக நடந்துகொண்டிருந்தார்கள்.

'நெடுகப் போனால் அவளுகளைப் பின் தொடர்ந்து போவதுபோல இருக்கும். நாம் சென்றால் கொலிச்சால போவம்' என்று அவன் குறுக்கு வீதியால் திரும்ப நடக்கத்தொடங்கினான். நெடுகவும் போயிருக்கலாம் என்று ஒரு மனம் சொல்லியது. அவளுடைய இடை அசைந்து செல்வது மிகவும் அழகாக இருப்பதாக அப்போது அவன் நினைத்தான். ஆயினும் அவன் குறுக்கு வீதியால் நடந்து கொண்டிருந்தான். 'இவளுகளைப் பார்த்தால்தான் என்ன, பார்க்காட்டால்தான் எனக்கென்ன' என்று நினைத்தவாறே அவன் தன்பாட்டில் நடந்தான்.

'சே! எப்பவும் இப்படித்தான் நான் ஒரு மடையன்' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

*'அன்று' என மாலன் தேர்ந்து தொகுத்த தமிழ் சிறு கதைகள் 1917 தொடக்கம் - 1981 வரை வெளியீடு ஓரியன்ட் லாங்மன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது ஒரு மனிதத்தின் குரல்

ஒலிவாங்கியார் தனது இவ்வார இலக்கினைத் தேடி அலைந்தபோது [வேர்த்து விறுவிறுக்க] 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல', வெரித்தாஸ் தமிழ்ப்பணி வானொலியின் இயக்குநரான அருட்திரு ஜெகத் கஸ்பார் அவர்களின் பாரிஸ் விஜயம் அமைந்து விட்டது.

வணபிதா என்றவுடன் தேவாலய அங்கி, தொங்கும் சிலுவை என்பவற்றுடனான ஓர் உருவத்தை எதிர்பார்த்த ஒலிவாங்கியாருக்கு, வணபிதா ஜெகத் கஸ்பாரின் தோற்றமும், அவரது இளைய வயதும் சற்று அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தனது வானொலிச் சேவையைப் போலவே ஜெகத் கஸ்பார் அவர்களும் யதார்த்தத்துடன் மனம்திறந்தபோது...

**ஒலிவாங்கியார்: நீங்கள் வெரித்தாஸ் வானொலியின் சேவையில் இணைந்தது எப்போது?**

*1996-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் நான் வெரித்தாஸ் தமிழ்ப் பணியின் பொறுப்பாளராக இணைந்துகொண்டேன். இன்று வரை எனது பணி தொடர்கிறது. குறைந்தபட்சம் நான்கு ஆண்டுகளிற்கு இப் பணியில் நான் தொடரலாம். அதன்பின் விரும்பினால் எனது சேவையை நீடித்துக் கொள்ளலாம்.*

**ஒலிவாங்கியார்: தமிழீழத்தின் நிகழ்வுகளைப் பொறுத்தவரை ஆரம்பத்திலிருந்து வெரித்தாஸ் தமிழ் மக்களது போராட்டத்திற்கு ஒரு நியாய பலமாக இருப்பதற்குக் காரணம் என்ன?**

அடிப்படையில் பார்க்கப் போனால் ஈழத் தமிழ்மக்கள் தொடர்பான வெரித்தாஸின் நிலைப்பாடு அதன் இலட்சியத்துடன் சம்பந்தப்பட்டது. 'வெரித்தாஸ்' என்ற லத்தீன் மொழிச் சொல்லின் தமிழாக்கம் 'உண்மை' என்பதாகும். இதனால்தான் எமது வானொலிச் சேவையைத் தொடங்கும் பொழுது 'உண்மை ஓங்குக' என்ற தாரக மந்திரத்துடன் ஆரம்பிக்கின்றோம். ஆசியப் பிராந்தியத்திலே வெரித்தாஸ் உண்மையின் குரலாக, நீதியின் குரலாக விளங்க வேண்டும் என்பதே எமது பிரதான குறிக்கோளாகும். அத்துடன் ஆசியப் பிராந்திய மொழி, கலாச்சாரம், பண்பாட்டு வளர்ச்சிக்கும், மனித மேம்பாட்டு வளர்ச்சிக்கும் ஆதரவு வழங்குவது எமது இதர நோக்கங்கள்.

இந்த வகையில் தமிழ் ஒலிபரப்பின் நேரடித்தளம் தமிழ் சமுதாயம் ஆகும். அதிலும் குறிப்பாக ஈழத் தமிழ் சமூகத்தை எடுத்துக் கொண்டால், அவர்கள் பெரும் 'அவலம்' ஒன்றிற்குள் சிக்கிவிட்டதைக் காணக் கூடியதாக உள்ளது. எனவேதான் அம் மக்களின் குரலாக வெரித்தாஸ் ஒலிக்கவேண்டியது கடமைப்பாடாகின்றது. கடந்த இருபது ஆண்டுகளாக இந்தக் கடமைப்பாட்டை நாங்கள் செய்து வருகின்றோம்.

**ஒலிவாங்கியார்: தமிழீழத்தின் 'உண்மை' நிலையினை சர்வதேசத்திற்கு எடுத்துரைப்பதனால் வெரித்தாஸ் ஏதாவது அழுத்தங்களை எதிர்நோக்குகிறதா?**

எப்பொழுதுமே ஒரு 'நிலைப்பாடு' எடுக்கும்பொழுது மாற்றுப்பக்கக் கருத்துக்கள், அழுத்தங்கள் வருவது உண்டு. இதை ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்வதற்கில்லை. இவ்வாறான எதிர்க்கருத்துக்கள் அரசியலுக்கு மட்டும் பொதுவானதல்ல சமுதாயப் பிரச்சினைகளுக்கும் பொதுவானதுதான். ஆகவே இவற்றிற்கு அஞ்சி நாம் வாளாதிருக்க முடியாது.

**ஒலிவாங்கியார்: மதரீதியில், ரத்தம் சிந்தும் வழிமுறை வெறுக்கப்படுவதாக கருத்து நிலவும் போது, போராட்டங்களுக்கு வெரித்தாஸ் ஆதரவு தருவது பற்றி...?**

## அருட்திரு ஜெகத் கஸ்பார்

எப்பொழுதுமே மனித இலக்கு என்பது அமைதியும், சமாதானமும், சகோதரத்துவமும் நிறைந்த ஒரு உலக சமுதாயம்தான். ஆனால் நமது கனவுகளிற்கு ஏற்றபடி இந்த உலகம் இல்லை. யதார்த்தம் என்று வருகின்றபொழுது இந்த யதார்த்தத்தினை விஞ்ஞானபூர்வமாக அணுக வேண்டிய கடமை எமக்கு உண்டு. இந்த விஞ்ஞான பூர்வம் என்ற அடிப்படையில் நாம் கள நிலைமைகளையும், போராட்டத்தையும் மனித நேயம் என்ற தளத்தில் வைத்துப் பார்க்க வேண்டும்.

இந்த வகையில் சிங்கள மக்களினுடைய நிலத்தை ஆக்கிரமிக்க விடுதலைப் புலிகள் போகவில்லை. அப்படிப் போனால் அவர்களை நாம் குறை சொல்வோம். தமிழ்மக்கள் மீது பாரிய அரச வன்முறைகள் கட்டவிழ்க்கப்பட்ட இந்த நிலையில் இவ்வாறான வன்முறைகள் ஒரு காலமும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை.

இவ்வாறான வன்முறைகளை முறியடிப்பவையாகவே விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் அமைகின்றன. ஒரு சமுதாயச் சூழ்நிலையில் அரச பயங்கரவாதம் மிகக் கொடூரமாக அமையும்போது அதைத் தடுக்க தற்காப்பு உரிமை உண்டு என அமெரிக்கா உட்பட பல நாடுகளின் அரசியலமைப்பு விதிகளிலும் உண்டு. பொதுவாக உலகளாவிய ரீதியில் இது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயம்.

**ஒலிவாங்கியார்: விடுதலைப் புலிகள் பற்றி உங்கள் கருத்து?**

அவர்களின் அர்ப்பண உணர்வு என்னைப் பிரமிக்க வைக்கும் ஒரு விடயம். தனக்கென எதனையும் பார்க்காமல் தன் உயிரையே குறிக்கோள் ஒன்றிற்காகத் தியாகம் செய்கின்ற இந்த அர்ப்பணத்தைக் கேள்வி கேட்கின்ற அருகதை எனக்குக் கிடையாது. அத்துடன் விடுதலைப் புலிகளிடம் காணப்படும் ஒரு திடமான கட்டுக்கோப்பு, ஒழுக்கம் மெச்சத்தகுந்த ஒரு விடயம். தமிழ் மக்களை பிரதிநிதிப் படுத்துபவர்களாக இன்று விடுதலைப் புலிகள் மாறியுள்ள நிலை யதார்த்தமானது.

விடுதலைப் புலிகளின் போராட்ட குறைநிறைகளை இன்று விமர்சிக்கும் நிலை இல்லை. இது ஒரு போராட்ட காலம் என்ற யதார்த்தத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

**ஒலிவாங்கியார்: தங்களது ஐரோப்பிய விஜயத்தின் நோக்கம் என்ன?**

எனது சுற்றுப்பயணத்தின் நோக்கம் - விடுமுறை (சிரிக்கிறார்). எனக்கு ஆண்டுக்கு மூன்று வாரகால விடுமுறை உண்டு. இவ்வாறான விடுமுறையைக் கழிக்க கனடாவிற்குச் சென்று, தமிழீழத்தின் ஒரு தலைசிறந்த அறிவுஜீவியும் எனது நெருங்கிய நண்பருமான அருட்திரு ஜோசேப் சந்திரகாந்தன் அவர்களுடன் ஒருசில நாட்கள் தங்கியிருந்தபோது, வெரித்தாஸ் தமிழ்ப்பணியின் பல நேயர்கள் என்னைச் சந்தித்துக் கலந்துரையாட விரும்பினார்கள். தமிழால் வாழ்ந்தேன், தமிழால் அறிவு பெற்றேன். இத் தமிழை எம் மக்களோடு பகிர்ந்துகொள்வதில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

**ஒலிவாங்கியார்: இப்போது கத்தோலிக்க மதத்தில் விவாதத்திற்குரியதாகவுள்ள கருச்சிதைவு மற்றும் பாலியல் உறவுகள் தொடர்பான கட்டுப்பாடுகள் பற்றி இளம் மதகுரு என்ற ரீதியில் என்ன எண்ணுகின்றீர்கள்?**

பாலியல் தொடர்பான கட்டுப்பாடுகளில் திருச்சபை தனது நிலையில் மிகவும் தெளிவாக உள்ளது. பாலுறவு என்பது ஒரு குடும்ப அமைப்பில் மிகவும் கனப்படுத்த வேண்டிய ஒரு காரியம். அதில் எனக்கு எந்த கருத்து வேறுபாடும் இல்லை.

மனிதனுக்கு அடிப்படையான உணர்வுகள் இரண்டு. அவை பசி, காமம் என்பனவாகும். பசி உணர்வு- மனிதனின் உயிர் வாழ்தலுக்கும், காம உணர்வு அவனது வம்ச விருத்திக்கும் அத்தியாவசியமானவை. ஆனால், பாலியல் தொடர்பான ஒழுக்க ரீதியான கட்டுப்பாடுகளில் தான் திருச்சபை தலையிடுகிறதே தவிர, படுக்கையறைக்குள் நுழைவது திருச்சபையின் வேலை இல்லை.

கருச்சிதைவைப் பொறுத்தவரை, நான் அதனைக் கடுமையாக எதிர்க்கிறேன். கருச்சிதைவு என்பது நிராயுதபாணியான ஒரு சிசு மீது நடாத்தும் ஒரு அராஜகம். இதை நான் வலுவாக எதிர்க்கிறேன்.

**ஒலிவாங்கியார்: வெரித்தாஸின் சிங்கள மொழி ஒலிபரப்புப் பற்றி?**

பொதுவாக எங்கள் நிகழ்ச்சிகளில் அவர்கள் தலையிடுவதில்லை. அவர்கள் நிகழ்ச்சிகளில் நாம் தலையிடுவதும் இல்லை. இது ஒரு யதார்த்த வாதம். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். சாதாரண சிங்கள மக்கள் நல்லவர்களாகத்தான் இருக்கின்றார்கள். ஆனால் ஆதிக்க சக்திகள் இடையிலே புகுந்து குழப்பத்தினை விளைவிக்க முயல்கின்றன. இவற்றை நாம் வெளிக்காட்டத்தான் வேண்டும்.

**ஒலிவாங்கியார்: தற்போது புகலிட நாடுகளில் முளைத்து வரும் கிறிஸ்தவ மதப் பிரிவுகள் போராட்டத்திற்கு உதவுதல் பாவம் என்பது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

நிறுவன ரீதியான மதங்கள் பலவீனப்பட்டு வருவதும், உணர்ச்சிகளை மிகைப்படுத்தும் அடிப்படை வாதப்போக்குக் கொண்ட மதப்பிரிவுகள் வளர்ந்து வருவது உலகம் தழுவிய ஒரு போக்கு. இதற்குள் புலம்பெயர்ந்த மக்களும் அகப்பட்டுக்கொண்டதற்குப் பல காரணங்களைக் கூற முடியும்.

இந்த அடிப்படைவாதக் குழுக்கள் தம்மிடம் வந்தால் தான் 'மீட்பு' என்ற கருத்தினைப் பரப்புகின்றார்கள். இந்த கருத்தில் சிலர் விழுந்துவிடுகிறார்கள். நான் சொல்கிறேன், எவன் ஒருவன் தான் 'மீட்கப்பட்டவன்' என அறிக்கை பண்ணுகிறானோ அவன் உண்மையிலேயே 'மீட்கப்படாதவன்'. இக் குழுக்கள் மக்களை அச்சுறுத்தும் தன்மையுடன் பண அறுவடை செய்வதையும் குறியாகக் கொண்டிருக்கின்றன. இது ஒரு ஆபத்தான அணுகுமுறை. அடிப்படைவாத மதக் குழுக்களுக்கு சமுதாய அக்கறை கூடக் கிடையாது. நாம், நமது சமுதாயம் என இவர்கள் ஒரு போதும் சிந்தித்ததும் கிடையாது. உண்மையில் இது கிறிஸ்தவத்திற்கு எதிரான ஒரு போக்கு. ஏனெனில் மனித விடுதலையைத் தான் கிறிஸ்தவம் எப்போதும் வலியுறுத்தி வருகின்றது.

சுருக்கமாகச் சொல்லப்போனால் சுயநலம், அடிப்படைவாதம், அபாயகரம் எல்லாம் இக் குழுக்களிடையே பொதிந்து கிடக்கின்றன. இவர்களை ஒரு விழிப்புணர்வுக்குக் கொண்டு வரும் கடப்பாடும் எமக்கு உண்டு என்பதையும் மறுக்க முடியாதுதான்.

இவ்வாறு அருட்திரு. ஜெகத் கஸ்பர் அவர்கள் கூறி முடிக்க ஒரு 'பொறுப்பு' முடிந்த நிறைவோடு ஒலிவாங்கியார் நகர்ந்தார்.

### வெரித்தாஸ் பற்றி...

*வெரித்தாஸ் வானொலி நிலையம் ஆசிய கத்தோலிக்க கிறிஸ்தவ ஆயர் பேரவையினுடைய ஒரு சர்வதேச ஒலிபரப்பு நிறுவனம். ஆசியாவிலே இருக்கும் ஒரேயொரு கத்தோலிக்க வானொலியும் இதுதான். 1969—ம் ஆண்டு பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இவ் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.*

*வெரித்தாஸ் தமிழ்ப் பணியினைப் பொறுத்தவரை, தமிழக கத்தோலிக்க ஆயர் பேரவையின் பங்களிப்பில் நிகழ்ச்சி உள்ளடக்கங்கள் அமைகின்றன. ஆனாலும் மதம் சார்ந்த வானொலியாக இல்லாமல் "மனிதம்" சார்ந்த வானொலியாக வெரித்தாஸ் இயங்குகின்றது. இதில் வணிகத் தன்மை கிடையாது. இச் சேவைக்கு நிதியுதவி செய்பவர்கள் ஜேர்மனி நாட்டின் சாமானிய மக்கள். குறிப்பாக 2—ம் உலகப் போருக்குப் பின் உருவான கைம்பெண்கள் தமது மாதாந்தப் பங்களிப்பில் இவ் வானொலிக்கு நிதியுதவி புரிகின்றார்கள்.*

> விடுதலைப் புலிகளிடம் காணப்படும் ஒரு திடமான கட்டுக்கோப்பு, ஒழுக்கம் மெச்சத்தகுந்த ஒரு விடயம். தமிழ் மக்களை பிரதிநிதிப் படுத்துபவர்களாக இன்று விடுதலைப் புலிகள் மாறியுள்ள நிலை யதார்த்தமானது.

> அடிப்படைவாத மதக் குழுக்களுக்கு சமுதாய அக்கறை கூடக் கிடையாது. நாம், நமது சமுதாயம் என இவர்கள் ஒரு போதும் சிந்தித்ததும் கிடையாது. உண்மையில் இது கிறிஸ்தவத்திற்கு எதிரான ஒரு போக்கு. ஏனெனில் மனித விடுதலையைத்தான் கிறிஸ்தவம் எப்போதும் வலியுறுத்தி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
**Tamils Rehabilitation Organisation**
79, Hoe Street, Walthamstow, London E 17 4 SA
(U.K. Registered Charity No. 1010029) Tel: 0181-520 5876

# ANNUAL FOOTBALL TOURNAMENT

**வருடாந்த உதைபந்தாட்டப் போட்டி - 1998**

**7 A Side Knockout**

SUNDAY 3 MAY 1998
DOUGLAS EYRE SPORTS CENTRE,
COPPERMILL LANE
WALTHAMSTOW. LONDON E 17 7HE
Nearest Underground: Blackhorse Road
9 A.M TO 9 P.M

பிரான்ஸ், ஜேர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகளில் இருந்து சிறந்த உதைபந்தாட்டக் கழகங்கள் உள்நாட்டுக் கழகங்களுடன் விளையாட உள்ளன.

* Football (Under 16) * Foot Ball (Under 12) * Netball

விநோத விளையாட்டுப் போட்டிகள்: → வயது பேதமின்றி எல்லோரும் பங்குபற்றக்கூடிய பல்வகை விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும். ஒரே இடத்தில் சகல பொருட்களையும் வாங்கக்கூடிய முறையில் பல்வேறு வியாபார நிறுவனங்கள் தமது வியாபாரத்தை நடத்த உள்ளன.

**UNDER 12 CHILDREN SPORTS**
ENTRIES ACCEPT AT 11.30 A.M
SPORTS MEET AT 1.30 P.M
FOLLOWING EVENTS WILL BE HELD.
25 METRES, 50 METRES, 100 METRES
SACK RACE, BUN RACE, SPOON RACE & CYCLE RACE
**AGE GROUPS:** UNDER 6, UNDER8, UNDER 10, UNDER 12.

**தமிழீழ உணவகம்**
சுடச்சுட ஒடியல் கூழ், கொத்து ரொட்டி, இவற்றுடன் தமிழீழ உணவு வகைகள் குறைந்த விலையில் நிறைந்த சுவையில் உண்டு மகிழுங்கள்.

Pub

# புலர்வின் பூபாளம்

## சர்வதேசக் கலைமாலை

**காலம்: 02.05.98 சனி மாலை 6.30 மணி**
Samfunns Huset - Oslo

**நிகழ்ச்சிகள்**

**. புஸ்பாஞ்சலி .**
நடனம்

'Nogunta' குழுவினரின்
**. ஆபிரிக்க இசை நடனம் .**

நாட்டியக் கலையில் பல புதுமைகளைச் செய்து உலகின் பலநாடுகளில் மேடையேற்றி அனைவரையும் பிரமிக்க வைத்துப் பாராட்டுக்களைப் பெற்ற தென்னிந்திய நாட்டியக் கலைஞர் வல்லபன் சபாபதி அவர்கள் முதல் தடவையாக நோர்வே மண்ணில்
**. வல்லபநாட்டியம் .**

வெரித்தாஸ் வானொலி தமிழ்ப் பணித் தலைவர் வணபிதா கஸ்பா ராஜ் (பிலிப்பைன்ஸ்) அவர்களின்
**. சிறப்புச் சொற்பொழிவு .**

'The Root'S' குழுவினரின்
**. துருவகானங்கள் .**

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்–நோர்வே

Pub

αααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααα



# ALPHA TELECOM

தனது பாவனையாளர்களுக்கு
**இனிய தமிழ் புத்தாண்டு**
வாழ்த்துக்களை தெரிவிக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| Sri Lanka | 52P, | 48P |
| India | 44P, | 40P |
| Malaysia | 33P, | 29P |
| Canada | 12P, | 8P |
| Australia | 14P, | 10P |

**UK 5P**

புத்தாண்டில் உங்கள்
உறவினர்கள், நண்பர்களுடன்
உரையாட குறைந்த கட்டண
தொலைதூர தொலைபேசி
சேவையை வழங்குவதில் மகிழ்ச்சி
அடைகிறார்கள்.



| | | |
|---|---|---|
| France | 14p, | 10p |
| Germany | 14p, | 10p |
| Switzerland | 16p, | 12p |
| Norway | 16p, | 12p |
| Singapore | 23p, | 19p |
| USA | 9p, | 5p |

## ALPHA TELECOM

இணைப்புகளுக்கும், தொடர்புகளுக்கும்:
**வேந்தன்: 0181 682 1141/ 0956 262684**

αααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααααα

Pub

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலந்த சொற்கள் எண்: 4.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ய | ல | வ | ன் | மை | று | ற் | வே | ல் | த | ம் | க |
| ர | சி | நு | ன் | வ | ம | ம் | ந | த | த | மு | ச | டி |
| க் | னே | ழை | மு | ய | லி | லி | து | சா | க | ம் | பா | வா |
| கு | கி | வு | க் | ளி | வு | த் | ரை | ஸ் | ர | பு | பா | ள |
| த | த | கு | உ | எ | டு | க | தி | தி | ம் | தா | ச | ம் |
| ல் | ர் | டு | கை | ப | ற் | ந் | த் | ர | ள | த் | ள் | க |
| க | சொ | ங் | ப் | ட | சா | மு | சி | ம் | தி | ட | யா | ந |
| ம் | ல | ன | க | பு | ச | ர | ச | ர | ப் | பு | மை | க் |
| ச | க | ச | வா | ல் | த | பு | ம் | று | ந | ப் | உ | தி |
| ர | ல | டி | ம் | ணி | க | கா | நா | ர | பு | ச | நி | ள |
| ச | க் | ள | ப் | லி | ப | ந | க | த | கா | க | கை | மூ |
| கை | க | பு | ட | ல | கை | ம் | ரீ | ம் | ங் | ங் | லி | பு |
| க் | ல் | ம் | வி | த் | பீ | பி | க | ச | று | கை | ல | பா |
| டி | த | த | த | ர | ரி | க் | ம் | வெ | ரீ | வ | ல | அ |
| வா | ம் | ல் | ம் | வு | தா | கை | மீ | கா | ன் | ழி | ன் | அ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அலங்காரம் | அலகை | அயலவன் | உமையாள் | உபசாரம் | |
| கனப்படுத்துதல் | கம்பீரம் | கங்கைவழி | கசப்பு | கசம் | கடிவாளம் |
| கலக்கல் | கடற்கரை | காரீகை | பாதாளம் | பாசம் | வழுவுதல் |
| பணிவானசொல் | எளியவன் | நறும்புதல் | நரகம் | நம்மவன் | நாகரீகம் |
| வேதசாஸ்திரம் | சமுத்திரம் | சினேகிதர் | வாடிக்கை | தகரம் | சித்திரை |
| தணிப்பு | புகலிடம் | சரசரப்பு | சாந்தி | புலவன் | அரக்குதல் |
| தடுப்பு | தழும்பு | நம்பிக்கை | தாக்கம் | வெறுங்கை | சங்கநிதி |
| நமைப்பு | சத்திரம் | பலவிதம் | நகைத்தல் | மூலிகை | பிரிவு |
| சலங்கை | நுழைவு | மயக்கு | வேற்றுமை | கலசம் | சரசம் |
| நலிவு | வேதம் | மலிவு | காகம் | வாதம் | நகம் |
| களம் | தங்கை | | | | |

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

..............................

பிறந்த திகதி: ..............................

சந்தா இல: ..............................

கலைந்த சொற்கள் எண்–4-இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்: 25.04.98


*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)*

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

கலந்த சொற்கள்
ஈழமுரசு - 22, Rue Perdonnet,
75010 Paris, France.

இங்கு சொற்கள் கலைந்திருக்கின்றன. சொற்கள் நேர் கோட்டிலும், இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேல், மூலைப்பக்கம் இருக்கும். இச்சொற்களைக் கண்டுபிடித்து கோடிடவும். சொற்களில் சேராத சில எழுத்துக்கள் மேலதிகமாக உள்ளன.

## கலந்த சொற்கள் எண் - 3 விடைகள்



ஈழமுரசுவின் கலைந்த சொற்கள் பகுதிக்கு நூற்றுக்கணக்கான வாசகர்கள் விடையெழுதி அனுப்பியிருந்தார்கள்.

அவர்களில் சரியான விடையெழுதிய வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வாசகர் விபரங்கள் வருமாறு.

1) S. ரஞ்சனி
2384 Badoldesloe,
Germany.
2) G. செந்தில்வேல்
4852 Rothrist,
Swiss.
3) S. குகசீலன்
6314 Unterageri,
Zug, Swiss.
4) சுதன் சண்முகம்
73525 Schwabischgmund,
Germany.
5) தம்பிராஜா கிருஷ்ணவேணி
77680 Roissy en Brie,
France.

இவர்களுக்கு
**Lune International Paris**
நிறுவனத்தினரால் பெறுமதி மிக்க நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த கலைந்த சொற்கள் எண்-4 இற்கான சரியான விடையும், கலைந்த சொற்கள் எண்–5 உம், 30 ஏப்ரல் - 06 மே 98 ஈழமுரசில் வெளிவரும்.

**தயாரிப்பு: சவேயூ சவுந்தரராஜா**

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்
கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் சத்துணவு நிதிக்காக

ஞானம் - சக்தி - குமார்ஸ் - வூட்லன்ஸ் ஆதரவில்
ஈழமுரசு நடாத்தும்

இசைமுரசு 98
இசை நிகழ்ச்சி

ஈழநிலா இசையில் சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி
30 இற்கும் மேற்பட்ட புதிய பாடகர்களின் அறிமுகம்
காலம்: 24.05.1998 ஞாயிறு மாலை 5.00 மணி

இசைமுரசு 98


AMORC
199bis, Rue St. Martin,
75003 Paris
(M°: Rambuteau /
Etienne Marcel)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தும் பலதும்

## பசுப்பால்தான் சிறந்ததாம்!

செம்மறி ஆடாகப்பிறந்து இரண்டு வருடங்களைத் தனது இனத்துடன் கழித்த ஒரு ஆடு அந்த இனத்தை விட்டு பசுக்களுடன் சேர்ந்து வாழத்தொடங்கியுள்ள ஒரு கதை நியூசிலாந்தில் இடம்பெற்றுள்ளது.



நியூசிலாந்தில் சவுத்லாந்து பகுதியில் பண்ணையை வைத்திருப்பவர்கள் டேவிட்டும், பியோனாவும். அவர்களது செல்லப் பிள்ளை `Humphrey'. இது ஒரு கருப்பு வெள்ளைச் செம்மறிக்குட்டி. மிகவும் உற்சாகமாக தனது ஆட்டு இனத்துடன் திரிந்த Humphrey க்கு திடீரென தனது இனத்தின் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. அருகே இருந்த பசுக்களுடன் சென்று இணைந்துகொண்டது.

பண்ணையாட்கள் பல முறை இக்குட்டியை கொண்டு வந்து ஆடுகளுடன் விட்ட போதும் எப்படியாவது அது பசுக்களுடன் சென்று கலந்து விடுவதுண்டு. அங்கு தனக்கு பசிக்கும் வேளை எந்தவித பயமுமின்றி பசுக்களிடமே சென்று பால்குடித்துவிடும்.

பசுக்களும் இவ் ஆடு பால் குடிக்கும்போது எந்தவித எதிர்ப்பையும் காட்டுவதில்லை எனக் கூறும் பண்ணை உரிமையாளர் டேவிட், தனது மற்றொரு ஆடு RUSSEL உம் முன்னையதைப் பின்பற்றி அடிக்கடி பசுக்களுடன் சென்று தங்குகின்றது என்றார்.

## ஏன் இந்தத் தீராத கோபம்?

ரஷ்யப் புரட்சியின் தந்தையும் சோவியத் யூனியனின் உருவாக்கத்திற்கு காரணகர்த்தாவுமான விலாடிமீர் லெனின் மீது பலருக்கு இன்னமும் கோபம் தீரவில்லை போலும். 'எனக்கு வரும் ஆத்திரத்திற்கு உன்னை



கடித்து தின்றுவிடுவேன் போலிருக்கு' என நாம் சிலவேளை கூறுவதுண்டு. ஆனால் கடந்த வாரம் ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில் லெனினை வெட்டித்தின்ற சம்பவம் நடந்தேறியது.

சோவியத் யூனியன் கலைக்கப்பட்டு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு ரஷ்யா தனியான நினைவுநாளன்று மொஸ்கோவில் ஒரு மண்டபத்தில் கம்யூனிச எதிர்ப்பாளர்கள் ஏராளமானோர் ஒன்றுகூடினார்கள். அங்கு மொஸ்கோவின் கலைஞர்களான `YURI SHAVELNIKOV', `YURI FESENKO' போன்றோர்களால் வடிவமைக்கப்பட்ட கேக் ஒன்று கொண்டு வரப்பட்டது.

தற்போது மொஸ்கோவில் நூதனசாலையில் பாதுகாக்கப்பட்டுள்ள லெனின் உடலைப் போல, அதேயளவிலான கேக் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. 2 மீட்டர் நீளமும் (ஆறு அடி), 50 கிலோ கிலராம் எடையும் கொண்டதாக காணப்பட்ட அந்த 'லெனின்' கேக் அங்கு கூடியிருந்த கம்யூனிச எதிர்ப்



பாளர்களால் மிக மகிழ்ச்சியாக வெட்டிப் பரிமாறப்பட்டது.


1924ம் ஆண்டு மக்களுக்காகப் போராடிய அந்தத் தலைவன், இறந்தும் இறக்காத அந்த மாமனிதன் இன்று கொலை செய்யப்பட்டதாக உண்மையான கம்யூனிச ஆதரவாளர்கள் கவலை தெரிவித்தனர்.

## வெள்ளரிக்காயிலும் உலகசாதனை

இந்தியாவின் பெங்களூரில் ஆராய்ச்சியாளராக இருக்கும் இளைஞர் ரமேஸ்பாபு. இவர் அண்மையில் தனது பெயரை உலக சாதனையாளர் பட்டியலில் புதுப்பித்துள்ளார்.



ஏற்கெனவே பன்னிரண்டு தடவைகள் பல வகையான சாதனைகளின் மூலம் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ரமேஸ்பாபு கடந்த ஞாயிற்று (05.04.98) அன்று வெள்ளரிக்காய் ஒன்றினை வெட்டி உலக சாதனை படைத்துள்ளார். வெள்ளரிக்காய் வெட்டுவதால் என்ன உலக சாதனை படைக்க முடியும் என யோசிக்கிறீர்களா? இது அப்படியொன்றும் இலே




சான வேலையல்ல. 32 சென்ரிமீற்றர் மட்டுமே நீளமான வெள்ளரிக்காய் ஒன்றினை 120,000 துண்டுகளாக வெட்டியுள்ளார். இதற்காக இவர் செலவிட்டது மூன்று மணி நேரங்களை.

ஆனால், இந்த சாதனைக்கான பயிற்சிக்காக இவர் ஒதுக்கியது ஒருவருடத்தை. இரண்டு மத்தியஸ்தர்கள் பென்சில், கடதாசி, நேரம் கணிக்கும் கருவி போன்றவற்றுடன் உன்னிப்பாகக் கவனித்திருக்க வெள்ளரிக்காயை ரமேஸ் முதலில் 79 துண்டுகளாக வெட்டினார். பின்னர் ஒவ்வொரு துண்டையும் 2500 துண்டுகளாக வெட்டினார்.

ரமேசுக்கு 100,000 துண்டுகள் வெட்டுவதற்கு 2 மணி 24 நிமிடங்கள் எடுத்துள்ளன. மிகுதி 20,000 துண்டுகளை வெட்டுவதற்கு 21 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார் இவர்.

## டிட்டானிக்கின் பெயரால் சாதனை!

ஆங்கிலத் திரைப்படங்களின் வரலாற்றில் அண்மைக்காலங்களில் வெளியாகிய திரைப்படங்களின் வரிசையில் ஏற்கனவே ஏற்படுத்தியிருந்த பல சாதனை



களை முறியடித்தும், பல புதிய சாதனைகளை ஏற்படுத்தியும் உள்ள படமாக `TITANIC' கூறப்படுகிறது. இதுவரையில் மிக அதிகமான வருவாயை பெற்றுக் கொடுத்த படமாக 'ஜுராசிக் பார்க்' கருதப்பட்டது. அந்தச் சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் வேறுபல நாடுகளிலும் தொடர்ந்து பல சாதனைகளை டிட்டானிக் ஏற்படுத்தி வருகிறது. இந்த வகையில் அண்மையில் அவுஸ்திரேலியாவில் டிட்டானிக்கின் பெயர் மற்றுமொரு சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரைச் சேர்ந்த நடுத்தர வயதுப் பெண்மணியொருவர் டிட்டானிக் வெளியிடப்பட்ட நாள் முதல் 150-க்கும் அதிகமான தடவைகள் பார்வையிட்டுள்ளார்.

அதற்காக ஆயிரத்துக்கும் அதிகமான அவுஸ்திரேலிய டொலர்களைச் செலவிட்டுள்ளதாகக் கூறும் அடிலெய்ட்டின் திரைப்பட மாளிகையொன்றின் முகாமையாளர்.



இதே பெண்மணி மடோனாவின் நடிப்பில் வெளியான 'EVITA' வை நூறு தடவைகளுக்கு மேல் பார்வையிட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டார்.


தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
Organisation pour la Reinsertion des Tamouls
சேர்ஜி பொந்துவாஸ் கிளை நடாத்தும்

**மாபெரும் ஒளிவிழா - 98**

**Fête de la lumière**

காலம்: 09.05.98 சனிக்கிழமை பிற்பகல் 5 மணி
Le 09 Mai 1998 à 17 heures
இடம்: Maison de Quartier des Linandes - Cergy

செங்குருதியில் நனைந்திட்ட தமிழீழ மண்ணில் துயருறும் எம் உறவுகளுக்கு உதவிட அனைவரும் கரம் கொடுப்போம் வாருங்கள்.

உங்கள் சிறார்களின் கலைத்திறனைக் காண்பதற்கு இதுவோர் அரிய சந்தர்ப்பம்.

மேலதிக தொடர்புகளுக்கு: 01 30 73 19 65



**கவிஞர்களுக்கான கலந்துரையாடல்**

பிரான்ஸ் தமிழர் கலைபண்பாட்டுக்கழகம் கவிஞர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை நடாத்த தீர்மானித்துள்ளது. இக் கலந்துரையாடலில் ஆர்வமுள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

காலம்: 26.04.1998 ஞாயிறு பிற்பகல் 6 மணி
இடம்: தமிழ்ச்சோலை மண்டபம்
26, Rue du Département, 75018 Paris.
Métro: La Chapple.

மேலதிக தொடர்புகளுக்கு: 0143581142


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் வாழ்வில் ஒரு புதிய பாதப்பதிவு

### ஜேர்மனியில் செல்வி மிருதுளா இராஜகுமாரனின்

# பரதநாட்டிய அரங்கேற்றம்

ஜேர்மனி - ஒபகௌசன் நகரில் 28.03.98 அன்று முல்கைமில் வசிக்கும் திரு.திருமதி இராஜகுமாரன் தம்பதிகளின் புதல்வி செல்வி அனிற்றா மிருதுளாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நடந்தேறியது.

பத்து வருடங்களாக ஜேர்மனியில் செயற்பட்டுவரும் கஸ்தூரி சலங்கை ஒலி நாட்டியக் கலாமன்றத்தின் எட்டாவது அரங்கேற்ற விழாவாக இது அமைந்திருந்தது.

திருமதி சாவித்திரி இம்மானுவேலின் திறமையான நெறிப்படுத்தலில் கடந்த ஆறு ஆண்டுகள் பெற்ற கடுமையான பயிற்



சியின் முதிர்ச்சி அனைத்து நடனங்களிலும் அழகாக வெளிப்பட்டு வியப்பூட்டியது.

புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் விழிப்புணர்வை விடுதலைப்பாடல்கள் மூலம் இறுதி மூச்சுவரை எழுப்பிய இசைக்குயில் திருமதி கலாநாயகி சூரியக்குமார் அவர்களின் நினைவில் அரங்கேற்ற மண்டபம் 'கலாநாயகி கலையரங்கம்' எனப் பெயர் சூட்டப்பட்டிருந்தது பலரதும் கவனத்தை ஈர்ந்தது.

600-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் அரங்கேற்றத்தைக் கண்டுகளித்து செல்வி மிருதுளாவை வாழ்த்துவதற்கு ஜேர்மனியின் பல பகுதிகளிலுமிருந்து வந்து அரங்கத்தை நிறைத்திருந்தார்கள்.

சென்னை இயேசு சபை இறையியல் பயிற்சி மையம் (அருட்கடல்) இயக்குநர் அருள் கலாநிதி பீற்றர் ஆரோக்கியதாஸ் பிரதம விருந்தினராக வருகை தந்து வாழ்த்துரை வழங்கினார். ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணிய இயக்குநர் அருள்கலாநிதி ஜெயசேகரம் விழாவிற்கு தலைமை தாங்கியிருந்தார். ஜேர்மன் விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர். கா.சிவநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து இன்றைய நடனங்கள் பற்றி ஆய்வு செய்து பாராட்டும் வழங்கியிருந்தார்.

அரங்கேற்றத்தின் அமைப்பும் உள்ளீடும் பழமையும் புதுமையும், அரசியலும் ஆன்மீகமும் ஒன்றிணைந்து விழிப்பும் வீரமும் வேகமும் தருவதாக இருந்தது குறிப்பிடக்கூடியது.

பரதக் கலை தமிழர் அனைவரதும் பொதுக்கலை என்பதனை உணர்த்தும் வகையில் சிவன், முருகன், பார்வதி, கண்ணன் இவர்களைப் பற்றிய பாரம்பரிய பாடல்கள் இடம் பெற்ற அதேவேளையில் முதல் முறையாக இயேசு, மரியாள் பற்றிய கிறிஸ்தவ உருப்படிகளும் புதிய முத்திரைகளும் அபிநய பாவ உருவாக்கத்தோடு இந்நிகழ்ச்சியில் இடம்பெற்றது ஒரு புதிய வரலாற்றுப் பதிவாக இருந்தது. புலம்பெயர்ந்த தமிழருக்கும் பிறருக்கும் தமிழுணர்வூட்டி எதிர்கால தமிழீத்தை இன்றைய நிகழ்வாக்கும் ஈடுபாட்டில் பங்கேற்கச் செய்யும் விடுதலைப்பாடல்களும் நடன உருப்படிகளிலும் இசைவேளைகளிலும் இடம்பெற்று இரத்த நாளங்களை இலட்சிய தாகத்தில் முறுக்கேறச் செய்தன.

பரதக்கலை தமிழரின் தனித் தமிழ்க்கலை. ஆகவே ஆடல் பாடல்களை எங்களிடமிருந்து களவாடியவர்களிடம் கடன் வாங்கத் தேவையில்லை என்பதனை உணர்த்தும் வகையில் உருப்படிகள் எல்லாம் தமிழிலேயே அமைந்திருந்தது நெஞ்சுக்கு நிறைவளித்தது. வடமொழி, தெலுங்கு மொழிப் பாடல்களைப் புறக்கணித்தது தமிழரை தலைநிமிரச் செய்யும் செயலாக இருந்தது.

அரங்கேற்ற நாயகி செல்வி மிருதுளா இராஜகுமாரன் ஏற்கனவே பல அரங்குகளில் தமிழீழ விடுதலைப் பாடல்களுக்கு நடனமாடிய அனுபவம் உடையவராக இருந்த காரணத்தால் அச்சமோ, தயக்கமோ, குழப்பமோ இல்லாமல் இயல்பாக, எழிலாக நடனமாடினார். அவரது நடனத்தில் முத்தமிழ் அன்னை தன் முழுமையான அழகோடு ஒயிலாக உலவினாள். உமை தன் நவரச மெய்ப்பாடுகளோடு வலம்வந்தாள். நர்த்தனம் புரியும் நடராசரும் அருளின் செல்வன் ஆறுபடை முருகனும் கண்குளிரக் காட்சியளித்தனர். ஆண்டவர் இயேசுவும் அன்னை மரியாளும் அபயமளித்து அருள்பாலித்தனர். ஆதலால்' நடன வேளையில் செல்வி மிருதுளா கண்களுக்கு காணாமற் போனதை கடைசியில்தான் உணரமுடிந்தது.

அரங்கேற்ற நினைவுமலரும் ஒரு விளம்பர மலராகவோ, வாழ்த்துரைத் தொகுப்பாகவோ இல்லாமல் நடனவியல் பற்றிய அரிய ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கியதாக, படித்துப் பாதுகாத்து பயன்படக்கூடியதுமாக மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. இந்நிகழ்ச்சியின் இன்னுமொரு சிறப்பு, பேதங்கள் எதுவுமற்ற இனமான உணர்வோடு கைமாறு கருதாமல் ஊண், உறக்கம் பாராமல் இரவு பகலாக பலரும் ஒத்துழைத்து உருவாக்கியது என்பதாகும். ஒளிமேடையில் முகம்காட்டாமல் ஒலிபெருக்கியில் முழக்கமிடாமல் மறைந்திருந்தே மகிழ்ச்சியோடு ஒத்துழைத்த எண்ணற்றபேர் தமிழினத்தில் இருக்கிறார்கள் என்பதை இந்நிகழ்ச்சி உலகிற்கு அறிவித்தது.

இந்த அரங்கேற்ற நிகழ்ச்சி நிறைவுற்று நாட்கள் சில ஆகியும் இன்னும் சுவைமாறாமல் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருப்பது - மதுரக்குரலோன் திரு.சி.கண்ணன் அவர்களின் தேனிசைப்பாடலும், அகில இந்திய வானொலி புகழ் சென்னை நாகநல்லூர் திரு. சூரப்பராஜு ராதாகிருஷ்ணன் அவர்களின் அற்புதமான வயலின் வாசிப்பும், திரு. எஸ். பிரணவநாதனின் பிரமாதமான மிருதங்க ஆட்சியும், திரு.ச. தேவகுருபரனின் அபாரமான தபேலா இசைப்பும், நிகழ்ச்சிகளை அழகுறத் தொகுத்த திரு. வலன்ரைன் - செல்வி சுபாஷினி கைலைநாதன் ஆகியோரின் குரல்வளமுமாகும்.

இவ்வாறு எல்லாக் கோணங்களிலும் செல்வி மிருதுளா இராஜகுமாரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் வாழ்விலும் வரலாற்றிலும் நிலைத்து நிற்கும் ஒரு பாதப்பதிவாகும். சிதறியடிக்கப்பட்டாலும் தமிழும் தமிழினமும் தமிழர் கலையும் செழித்தும் செம்மாந்தும் வாழும் வாழமுடியும் என்பதற்கு இது ஒரு உற்சாக முழக்கமாகும்.

*- பெருமாள்மலை கலைப்பிரியன்.*

# புகலிட நிகழ்வுகள்

## உலக தமிழ் பண்பாட்டு இயக்கம் நடாத்தும் 'குறள்மணி' பட்டத்தேர்வு

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து, அதன் ஜேர்மன் கிளை 'குறள்மணி' மூன்றாண்டு பட்டத்தேர்வொன்றை நடாத்தவுள்ளது. திருக்குறள் நெறியை உலகெங்கும் பரப்பும் நோக்குடன் இப்பட்டத்தேர்வை நடாத்த உ.த.ப.இயக்கம் முன் வந்துள்ளது. கலைமாமணி பி.ஏ. பட்டத்துக்கு நிகரான பட்டத் தேர்வு இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப்பண்பாடு கமழும் பாடத்திட்டத்தை கொண்டுள்ள 'குறள்மணி' பட்டத்தேர்வை ஓரளவு தமிழ் அறிவு உள்ளவர்களும் எழுதலாம். இலகுவாகப் பயிலும் வகையில் பாட நூல்கள் வழங்கப்படுவதுடன், தேவை ஏற்படின் விரிவுரைகளும் வழங்கப்படும்.

ஐரோப்பாவில் தமிழ்ப் பாடசாலைகளில் ஒன்பதாம் வகுப்புகளில் கல்வி கற்ற மாணவர்கள் தொடர்ந்தும் தமிழில் மேற்படிப்பை மேற்கொள்ளும் வாய்ப்பை வழங்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். 1999-ம் ஆண்டு ஆவணியில் 16 வயதைத் தாண்டும் சகலரும் இத்தேர்வில் தோற்றலாம்.

உங்கள் தொடர்புகளை: கணேசலிங்கம்

தொலைபேசி, தொலைநகல்: 05971 - 14258 என்ற இலக்கத்துடன் ஏற்படுத்திக் கொள்ளவும்.

*- வீ.ஆர். வரதராஜா, ஜேர்மனி.*

# அறிவித்தல்

பிரான்ஸ் ராதா கிருஸ்ணா ஆலயத்தினரால் நடாத்தப்படும் 1998ம் ஆண்டுக்கான மகாபாரதம், இராமாயணம், பகவத் கீதை வினாவிடை எழுத்துப் போட்டிகள். ஆடி மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (19.07.98) அன்று ஆலய மண்டபத்தில் காலை 10மணி தொடக்கம் 12 1/2மணி வரை நடைபெறும்.

இப் போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறும். 1. ஆரம்பப் பிரிவு 2. மத்திய பிரிவு 3. அதி மேற்பிரிவு இம் மூன்று பிரிவுகளும் ஒரேநாளில் (19.07.98 ஞாயிற்றுக்கிழமை 10 மணி - 12 1/2) நடைபெறும். இப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறுபவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்து இருக்கின்றது. போட்டியில் பங்குபெறுவோர் ஆனி 30 வரை ஞாயிறு தோறும் சென்று தங்கள் - பெயர் - விலாசம் - வயது - தொலைபேசி எண் ஆகியனவற்றைப் பதிவு செய்து கொள்ளவும். மறந்து விடாது மாதிரி வினாவிடைப் புத்தகத்தை கேட்டுவாங்கிப் படித்து தங்கள் அறிவை மேலும் விருத்தி செய்து போட்டியில் வெற்றி பெறுங்கள்.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குரிய பரிசில்கள் ஆவணி மாதம் 15ம் திகதி சனிக்கிழமை நடைபெற இருக்கும் கிருஸ்ண ஜெயந்தி அன்று இரவு 10 மணிக்கு வழங்கப்படும். ஆகவே போட்டியில் பங்கு பெறுபவர்கள் உடன் கீழ்க்கண்ட விலாசம், தொலைபேசியுடன் தொடர்பு கொள்க.

TEMPLE RADHAKRISHNA
31, rue du Dr.Jean Vaquler
93160 Noisy le Grand
(Ling: RER-A)
Tel: 01 43 04 32 63
தமிழ்த் தொலைபேசி:
0143042766
0143829637

ஈழமுரசு சந்தா
Eelamurasu Weekly
விண்ணப்பப் படிவம்

பெயர்:.........................................

முகவரி:.........................................

.........................................

தொலைபேசி எண்: .........................................

பிரான்சுக்கான சந்தா (தபாற் செலவுடன்)
12 மாதம் ➤ 420 பிரெஞ்சு பிராங் ☐
பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா (தபாற் செலவுடன்)
12 மாதம் ➤ 520 பிரெஞ்சு பிராங் ☐

காசுக்கட்டளை, காசோலையை 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும்.
நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
"EELAMURASU"
22, Rue Perdonnet, 75010 Paris.
Tél: 01 40 37 63 63 / Fax: 01 40 37 64 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Asces பாடசாலையின் 8வது ஆண்டு நிறைவு விழா



Asces பாடசாலையின் 8வது ஆண்டு நிறைவு விழா கடந்த ஞாயிறு 05.04.98 மாலை Salle Adyar இல் நடைபெற்றது. மண்டபம் பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. குங் பூவின் பிரஞ்சு தேசிய நடுவர் திரு. திருமதி ராஜ்குமார் கந்தசாமி பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர். ஆங்கில ஆசிரியர் திரு.சபேஷ் ஐயர் தனது வரவேற்புரையில் இக் கல்வி நிலையத்தில் கற்க தொடங்கிய பின் மாணவர்கள் கணிதம், பௌதிகம், இரசாயனம், பிரஞ்சு, ஆங்கிலம் போன்ற பாடங்களில் அதிக மதிப் பெண்கள் பெறுகின்றார்கள் என்றும், எதிர்காலத் திட்டமாக செவிப்புலன் குறைந்தவர்களுக்கு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் தெரிவித்தார். சிறார்களின் தமிழ்ப் பாட்டுக்களையடுத்து சங்கீதக் கச்சேரி திருமதி லீலா சண்முகதாசனின் மாணவிகளால் நடாத்தப்பட்டது. அதையடுத்து மேலைத்தேய நடனங்களும் கராத்தே கண்காட்சியும் நடை பெற்றன. திருமதி கௌசல்யா தர்மகுலசிங்கத்தின் மாணவ, மாணவிகளின் பரத நாட்டியமும், Mad Master and Bad Boys என்ற நகைச் சுவை நாடகமும் நடை பெற்றன.

அடுத்து சிறந்த மாணவர்களுக்கு பரிசும் வழங்கப்பட்டன. ரவியின் இயக்கத்தில் மெல்லிசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிகளை கணினி ஆசிரியர் திரு.கிறிஸ்தோபர் தொகுத்து வழங்கினார். பிரெஞ்சு ஆசிரியர் பிரகலாதனின் நன்றியுரையுடன் விழா இனிதே முடிந்தது.

# திலிபனின் வழியில் ஒளிதந்த தீபம் அன்னை பூபதி

அன்னைபூபதி அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவுநாள் ஜேர்மனியில் எதிர்வரும் 18-ம் திகதி மாலை 5.00 மணிக்கு வூப்பற்றால் நகரில் FEST SAAL DER RUDOLF-STEINER - SCHULE மண்டபத்தில் நடைபெறும். காலையில் அன்னைபூபதி நினைவாக கவிதைப் போட்டியும், மாலையில் எழுச்சிக்கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

கீழ்ப்பிரிவு, நடுப்பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக நடைபெறும் கவிதைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கவிதைப் போட்டியாளர்கள் கலந்துகொள்வார்கள். இப்போட்டியில் வெற்றி பெற்றோருக்கு மாலையில் நடைபெறும் எழுச்சி நிகழ்ச்சியின் போது பரிசுகள் வழங்கப்படும். முதலிடங்களைப் பெற்ற போட்டியாளர்களின் கவிதைகளும் அங்குநடைபெறும்.

மாலையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அமைதி வணக்கத்துடன் ஆரம்பமாகும். மலர் வணக்கம், கவிதை வணக்கத்தையடுத்து 'தாயைக் காப்போம்' என்ற சுதந்திரக் கனல் நடனம் இடம்பெறும். இன்னிசை வேந்தர் சங்கீத பூஷணம் பொன். சுந்தரலிங்கமும் அவரின்மாணவர் கண்ணனும் இணைந்து வழங்கும் 'தமிழிசை வணக்கம்' விசேட நிகழ்ச்சியாக நடைபெறும்.

அன்னை பூபதி நினைவு நாளில் உண்மையின் குரலான வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பணிப்பொறுப்பாளர் வண.பிதா கஸ்பர்ராஜ் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு தமிழர்களை ஜேர்மனி விடுதலைப் புலிகள் பணியகக் கலைபண்பாட்டுக் கழகம் அன்புடன் அழைக்கின்றது.


# பிறந்தநாள் வாழ்த்து

## செல்வன் மிதுனன்



*யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு கேணியடியைச் சேர்ந்த கண்ணதாசன் புவனேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் மிதுனன் தனது 6-வது பிறந்தநாளை 17.04.98 அன்று ஜேர்மனி Hildesheim இல் உள்ள தனது வீட்டில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார்.*

*இவரை அன்பு அம்மா, அப்பா இலங்கையில் உள்ள அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா, சித்திமார், மாமன்மார், அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கொக்குவில் பிடாரி அம்மன் அருளால் பல்கலைகளும் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.*


## கிடைக்கப்பெற்றோம்

# அம்மா



பிரான்சில் இருந்து வெளிவரும் சிறுகதைச் சஞ்சிகை 'அம்மா' 5-வது இதழ் கிடைக்கப்பெற்றோம். வெளிவந்த குறுகிய காலத்திற்குள் தீவிர வாசகர்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டதில் 'அம்மா' வெற்றிகண்டுள்ளாள். குறுகிய வாசகர் ஒளிவட்டத்தை உடைத்து பரந்தளவில்..... பரந்தளவு வாசகர்களை ஈர்த்துக்கொள்வதிலேயே 'அம்மா' பூரண வெற்றி கொள்வாள் என்பது எமது எண்ணம். நினைவோடு பிரமிள்.. து.குலசிங்கம், தலித் வாழ்க்கை, ச.சச்சிதானந்தம், கலைக்கு எதிரான கலைஞன்/தமிழில் ஜமுனா ராஜேந்திரன் கட்டுரைகள் உள்ளிட்டு பல கதைகளும் பதிவாகியுள்ளன. 'அம்மா' மூலம் சோபா சக்தி பலரின் கவனத்திற்குரிய கதைஞராகிறார். இச் சஞ்சிகையிலும் அவரது 'க.ட.வு.ளு.ம் காஞ்சனாவும்' ரசனைக்கும் சிந்தனைக்குமுரிய கதையாகிறது. இளைய அப்துல்லாஹின் 'பிரசவமாய்... நல்ல சிறுகதை. 'அம்மா'வில் பலரது ஈர்ப்புக்குரிய இன்னுமொரு பகுதியான 'உரைகல்' வாசகர் கருத்தொலிகள் ஆழ்ந்த ஈர்ப்பிற்கும் அவதானத்திற்குமுரியதாகின்றது. ஒரு சஞ்சிகையின் வளர்ச்சியில் வாசகர்களின் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுகின்ற அதே வேளையில் அதுவே சஞ்சிகையின் போக்கை மாற்றி அதனை அபாயத்துக்குள் சிக்கவைத்துவிடவும் கூடும். 'அம்மா', 'உரைகல்' மீது விழிப்பாக இருக்க விழைகின்றோம்.

**'அம்மா' தொடர்புகளுக்கு:**
**S. Manoharan**
**210. Ave 8 Mai 1945,**
**93150 le Blanc Mesnil,**
**France**

# புலம்

ஐ.பி.சி. ஒரு சஞ்சிகையை வெளிக்கொணர உள்ளதென்ற செய்தியுடனேயே அது ஒரு 'வானொலி மஞ்சரி' போன்றதாம் என்ற வாலும் தகவலாய் ஒட்டிக்கொண்டிருந்தது. முதலாவது 'புலம்' இதழ் வந்துவிட்டதாம் என்று கேள்விப்பட்டபோது ஈழமுரசுப் பத்திரிகைக்கும் அது வந்திருக்கவில்லை. 'சரி! அது வானொலி நேயர்களுக்குத்தானே' என அதிகம் அக்கறை கொள்ளவில்லை. முதல் இதழைக் கையில் வைத்திருந்தவர்களும் 'வானொலியுடன் தொடர்புள்ளவர்களுக்கு மட்டும்தான்' எனச் சொல்லிக் கொண்டார்கள்.

ஆனால் அண்மையில் ஐ.பி.சி. முதல் இரண்டாம் இதழுடன் சேர்த்து கூடவே கடிதமொன்றினையும் இணைத்து அனுப்பி இருந்தது. அவ்விதழ்களில் விலை குறிப்பிடப்பட்டு காசு கொடுத்து வாங்கும் எவர்க்கும் உரியது எனத் தெரிவித்திருந்தது.

வானொலிக்கான இதழ்தான் புலம் என்றாலும், அதை ஒரு சஞ்சிகை வடிவத்திற்கு தொகுத்து தயாரித்துள்ளார்கள். வானொலிக்கான நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் சிலர் இச் சஞ்சிகையின் ஆக்கதாரர்களாய் இருப்பதும் இச் சஞ்சிகையின் பலம். இரண்டாவது இதழிலேயே வளர்ச்சியின் பாய்ச்சல் தெரிகின்றது.

'வானொலிக்கான சஞ்சிகை இது' என புலம் இதழ் தன்னை அறிமுகம் செய்துள்ள நிலையில் இது பல வானொலிகளுக்கான சஞ்சிகையாக இருக்குமாயின் வாசகர்களுக்கு பயன் தராதா? என்ற கேள்வியொன்றும் எழுந்தது.

மூன்று நான்கு வருடங்களுக்கு முன் ஈழத்தில் இருந்து 'வானொலி' என ஒரு சிறுசஞ்சிகை வெளிவந்திருந்தது. அதில் உலகின் பல்வேறு வானொலிகள் கேட்கப்பட்டு அவற்றை பதிவு செய்திருந்தார்கள். அப்படியான முயற்சி புலம் இதழிற்கு கனம் ஏற்றக்கூடும். இந்தியாவில் 'ஆகாஷவாணி' இருந்தபோதும் தமிழ் நாட்டில் இலங்கை வானொலிதான் புகழ் பெற்றிருந்தது. நேயர்களும் அநேகர் இருந்தனர். அந்த இலங்கை வானொலி பற்றிய கதையை நிகழ்ச்சிச் சிறப்பை புலம் வெளியிட்டால் அதனை அறியாதோர் பலர் அறிய வாய்ப்பேற்படும்.

புலம் அனுப்பிய கடிதத்தில் 'புலம் உங்களுடன் சிநேக பூர்வமான நேச பூர்வமான உறவினை பேண விரும்புகின்றது' எனக் குறிப்பிட்டிருந்தது. ஈழமுரசு தமிழ் பேசும் மக்களின் தேசிய கட்டமைப்புக்கான எந்தவித ஆக்கபூர்வமான முயற்சிக்கும் துணையாக இருக்கும். விமர்சனங்கள் பகைமைக்கானதல்ல. அது வளர்ச்சிக்கானது.

புலம் தன் பணி தொடர வாழ்த்துக்கள்.

புலம் – மிக முக்கியமாக வாசகர் கருத்துக்கள் (கடிதம்) பகுதிக்கு அதன் ஏடிட்டோரால் 'புலம்பல்' என பெயரிடப்பட்டிருப்பது சற்று நெருடலாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**"வட்டி வட்டிதான்.... இது சூப்பர் வட்டிதான்.... இந்த(?) வட்டிக்கு விடும் தமிழர் நாங்கள்தான்....
ஏ.... வட்டி வட்டி வட்டி முதலை மிஞ்சுது....!"**

இப்பிடி 'ஸ்ரைலா' ஒரு பாட்டை எடுத்து விடுவமெண்டா, இந்த வயசிலை உடம்பு ஒத்துழைச்சாலும் மனசுதான் ஒத்துழைக்குதில்லைப் பாருங்கோ. அங்கை அந்தச் சிங்களவன் உந்த ஆயுதங்களுக்கெண்டு வெளிநாடு வழியை பணத்தைக் கொண்டேக் கொட்டுறதாலை (அதுவும் நல்லதுக்குதான். எப்பிடியோ அதுகள் எங்கடை பிள்ளையளிட்டைத்தானே வந்து சேரப்போகுது) விலைவாசிதான் 'யானை விலை குதிரைவிலை' கணக்கா ஏறிக்கொண்டு போகுதெண்டு பாத்தா, இஞ்சை எங்கடை வட்டி வீதம் எல்லோ தலைகால் புரியாமல் ஏறிக் கொண்டு போகுது....! உப்பிடியே போனா உழைக்கிற உழைப்பிலை என்னத்தை மிச்சம் பிடிச்சு, முதுகை எப்பதான் நிமித்திறது.

போன மாசம் வரைக்கும் ஐஞ்சு, ஆறு வீதம் எண்டு போய்க்கொண்டிருந்தது இந்தமாசம் சில இடத்திலை பத்து வீதமா எல்லோ பாய்ஞ்சேறி முதலையும் ஆரோ அனுபவிச்சிட்டுப் போறதிலும் பாக்க, ஒருத்தர்ரை உழைப்பை ஒட்டுமொத்தமா சுரண்டாம நியாய தர்மத்தோட நடக்கிறது எல்லாருக்கும் நல்லதுதானே.

என்னத்தைக் கொண்டு வந்தனாங்கள், என்னத்தை கொண்டு போகப்போறம்? பிறக்கேக்கை மனிசன் அழுதுகொண்டுதானே பிறக்கிறான். அவன்ரை அழுகையைப் பாத்தாப்பிறகுதான் பெத்தவை சுத்தியிருக்கிறவை சந்தோசமாச் சிரிக்கினம். அப்பிடி வர்ற நாங்கள், போகேக்கை சிரிச்சுக்கொண்டு போக, சுத்தியிருக்கிறவைதான் எங்களுக்காக அழவேணும். இதுதான் மனிசனாப் பிறந்ததுக்கு பெருமை கண்டியளோ. இந்த இடைப்பட்ட காலத்திலை ஏன்தான் அளவுக்கதிகமா தங்களுக்கே வந்து சேரவேணுமெண்டு நினைக்கினமோ தெரியேல்லை.

இப்பிடி 'எண்ணு'றவையைப் பாத்துத்தானோ என்னமோ, கடவுளும் ரெண்டு இடத்திலைதான் சிரிக்கிறவர் எண்டு சில பேர் சொல்லுறவை. வைத்தியர் உயிருக்கு நான் உத்தரவாதம் எண்டு சொல்லேக்கை ஒருக்காச் சிரிப்பாராம், இதெல்லாம் எனக்குதான் எண்டு சொல்லேக்கை இன்னொருக்காச் சிரிப்பாராம். இது கற்பனையாக்கூட இருந்தாலும் எல்லாம் எங்களிட்டையே வந்து சேரவேணுமெண்டு பேராசைப்பட்டு கடைசியிலை பேரிழப்பாய் போறதைத்தானே கற்பனையான நரிக்கதையிலை இருந்து நிஜமான வாழ்க்கையிலையும் நாளுக்குநாள் பாத்துக் கொண்டிருக்கிறம்.

ம்.... என்னத்தைப் பாத்தென்ன, என்னமா இருந்த வட்டி, எப்பிடி வளந்து வந்து நிக்குது!

# கடன்பட்டார்... பட்டார்!! கொடுத்தார்.. கொடுத்தார்..!?

யிட்டுதாம்! இவன் கந்தப்பற்றை பேரன்தான் உங்கினை ஆரிட்டையோ ஆறு வீதத்துக்கு எடுத்தவன். இப்ப பத்துவீதத்துக்கு வேறை இடத்திலை கேட்டிருக்கிறதாலை, தாங்களும் பிழைக்கக் கூடிய நேரத்திலைதானே பிழைக்கலாமாம்(?)எண்டு சொல்லி, உடனை முதலைத் தரச் சொல்லியும், இல்லாட்டி மாசா மாசம் பத்து வீதம் தரச்சொல்லியும் கேட்டிருக்கினமாம் குடுத்தவை. கேட்ட உடனை கொடுக்கிறதெண்டா பெடியன் ஆரைப் பிடிக்கிறது? இப்பதான் ஊரிலை இருந்து வீட்டுக்காறரும் வவுனியாவோ கொழும்போ வந்துட்டுப் போனதா வேற சொன்னவன். அப்ப மரத்தாலை விழுந்தவனை மாடும் ஏறிமிதிச்ச நிலைமைதான் அவன்ரை நிலைமை. அப்ப என்ன செய்யிறதாய் உத்தேசம் எண்டு கேட்டா 'அவசரமெண்டு போய்க்கேட்ட இடத்திலை நம்பிக்கையிலை தந்துதவினவை. இனி ஒண்டும் கதைக்கேலாது பத்து வீதத்தை குடுக்க வேண்டியதுதான்' எண்டுறான்.

அதுசரி, இப்பிடி ஒரு இடத்திலை மொத்தமா எடுத்து அவதிப்படுறதைவிட, பல இடங்களிலை பிரிச்சுப்பிரிச்சு எடுத்தா வர்ற உழைப்பிலை சுகமா குடுத்து முடிக்கலாம் எண்டு கொஞ்சம் யோசிக்க.... ஓ... குடுக்கிறதெண்டாத்தானே அதைப்பற்றி யோசிக்கவேணும் எண்டு நினைக்கிறவையும் இருக்கினம் எண்டதை இந்த இடத்திலை மறந்துபோனன் பாருங்கோ.... இப்ப வாங்கினைவையை விட குடுத்தவைதானே ஆப்பிழுத்த குரங்கு கணக்கா எக்கச்சக்கமா யோசிக்கினம். நல்லகாலம் இந்த நிலைமையை பாக்கிறதுக்கு கம்பர் இல்லைக் கண்டியளோ! இருந்திருந்தா 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான்' எண்டு எழுதினதுக்கு பதிலா 'கடன்கொடுத்தார் நெஞ்சம்போல் கலங்கினான்' எண்டெல்லோ எழுதியிருக்க வேணுமெண்டு மனிசன் கவலைப் பட்டிருக்கும்.

ஏதோ, இப்பிடி வட்டிக்கு விடுற சிலபேர் இருக்கிறதாலைதான் வாழ்க்கை பிரச்சினையளை சமாளிச்சுக் கொஞ்சம் நிம்மதியா ஓட்டிக் கொண்டுபோகேலுது எண்டது உண்மைதான். அதுக்காக அவசர ஆத்திரத்துக்கு தந்துதவினதெண்டுபோட்டு நாளுக்குநாள் வட்டியை ஏத்திக் கொண்டு போறது என்ன விதத்திலை நியாயமெண்டுதான் எனக்கு விளங்கேல்லை. வறுகின வரைக்கும் லாபமெண்டு அடிக்கொருக்கா வட்டியை ஏத்தி கடைசியிலை வட்டி மட்டுமில்லை, அந்த நாளையிலை எனக்குத் தெரிய ஐம்பதுசத வட்டிதான் பாருங்கோ. அப்ப அதே பெரியொரு வட்டிதான். அதுவும் அருணாசலத்தானிட்டைதான் அறுபது எழுபது சதமெண்டு அறாவட்டி போகும். தலைபோற காரியமெண்டாத்தான் சனங்கள் என்ன செய்யிறதெண்டுபோட்டு அவனிட்டை ஓடுறதுகள். போய்க்கேட்டாலும் என்ன உடனை குடுக்கப்போறானே. நாள்கோள் பாத்து, பஞ்சாங்கத்திலை பதியாமல் விட்டுப்போன சகுனம் எல்லாம் அவனுக்குத்தான் தெரியும். அதெல்லாம் பாத்து, கேக்கிறதுக்கு ஏத்த பொறுப்பும் சரிவந்து அவனிட்டை பணம் பெற்றுட்டா கல்லிலை நாருரிச்சதுக்குச் சரியுங்கோ. அதோட

**அதுக்காக அவசர ஆத்திரத்துக்கு தந்துதவினதெண்டுபோட்டு நாளுக்குநாள் வட்டியை ஏத்திக்கொண்டு போறது என்ன விதத்திலை நியாயமெண்டுதான் எனக்கு விளங்கேல்லை. வறுகின வரைக்கும் லாபமெண்டு அடிக்கொருக்கா வட்டியை ஏத்தி கடைசியிலை வட்டி மட்டுமில்லை முதலையும் ஆரோ அனுபவிச்சிட்டுப் போயினம்.**

முடியுதே.... முதல் குடுக்க முதலே முதல்மாச வட்டியை பிடிச்சுப் போட்டுத்தான் குடுப்பான் பாவி. மாசம் ஒண்டானா வட்டி போய்ச்சேந்திட வேணும் இல்லாட்டி முதலோட சேந்து வட்டிக்கு வட்டிதான். அந்தப் பயத்திலை சனங்கள் உடனை கொண்டக்குடுத்திடுங்கள். அதை வேண்டி இன்னொரு முதலாக்கி அங்காலை வட்டிக்கு விட்டுப்போடுவான். இப்பிடியே பணத்தைப் பெருக்கிப்பெருக்கிக் கொண்டுவந்தென்ன.... கடைசி வரைக்கும் அவன் 'வட்டியைக்கூட' அனுபவிக்க முடியாமலே போய்ச்சேர்ந்திட்டான் எண்டதுதான் வேதனையான உண்மை பாருங்கோ.

**அருமைத்தம்பி**

# சித்திரகுப்தனார் பதில்கள்

வே.இந்திரா – இத்தாலி
- தமிழர்கள் தமிழர்களாக வாழ என்ன தேவை குப்தனாரே?
- பூரண இறைமையுள்ள சுதந்திர தாய்நாடு முதல் தேவை. அடுத்த தேவை, இனவெறிக்கு அல்லாத நாம் தமிழர்கள் என்ற தேசிய உணர்வு.

சு.அமலன் – பாரிஸ் 10
- கதிர்காமர் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?
- பிரதமர் பதவி கிடைக்கும் என்ற கனவு சிதைந்துபோன சோகத்தில் இருக்கிறார்.

வ.மலர்விழி – லண்டன்
- சந்தனக்கடத்தல் வீரப்பனின் கதையை இப்போது காணோமே?
- இப்போது 'கோயம்புத்தூர்' கதாநாயகர்கள் வந்துவிட்டார்கள். வீரப்பன் துணை நடிகர் ஆகிவிட்டார்.

ப.பரமசிவம் – பாசல், சுவிஸ்.
- தன்னலம் கருதாத அன்பு யாரிடம் கிடைக்கும்?
- பெற்ற தாயிடம்.

கு.சுப்பிரமணியம் – சென்ஜேர்மன், பிரான்ஸ்.
- தமிழ் சினிமாவின் குறிக்கோள் என்ன?
- மக்களை மூளைச் சலவை செய்வது.

வ. அமலதாஸ் – பாரிஸ் 12.
- 'சாண் ஏற முழம் சறுக்கும்' நல்ல உதாரணம் ஒன்று சொல்லுங்கள் பார்ப்போம் குப்தனாரே.
- 'ஜெய்சிக்குறுய்'.

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

# விடியலைத் தேடி

போச்சுதுகள்.. உயரப் போச்சுதுகளோ என்னவோ ஆண்டவா...' என்று மரியாவும் துக்கத்தை அடக்கிய குரலில் கூற 'சீ... அவங்கள் உயரப் போயிருக்க மாட்டாங்கள்...! ...இந்த நேவி எங்க மோனை இலக்கு பாத்து சுடுறது? நீ யோசிக்காத என்ற ஆறுதல் மொழிகளை கூறியபடி அப்பால் செல்ல, மேரி 'சம்மாட்டியாருக்கென்ன ரெண்டு பிள்ளையளும் வெளியாலை... அவருக்கு என்ன கவலை...' என்று தனக்குள்ளே முணுமுணுத்தாள்.

பக்கத்து வீட்டிலிருந்து, 'பெடியனின் போட்டை கண்டு தான் வெடிவைக்கிறாங்கள் போல கிடக்கு...?' என்ற ஒரு யதார்த்தமான கேள்வியொன்று காற்றோடு கலந்து போய்க் கொண்டிருந்தது அதைத்தொடர்ந்து அந்தோனியார் கோவில் கோபுரத்தில் ஏறிநின்று பார்த்த ஒருவன் 'உயரத்தில... போட் ஒண்டு எரியுது...' என்று கத்தினான்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த மரியாவின் மனம் வேதனையில் கதறியது. கணவனின் கனிவான முகமும், மகனின் சிரிப்பும் கண்முன் தோன்றி மனதை அலைக்கழித்தன. சிறிது நேரம் அமைதியாக இருப்பாள், பின் திடீரென்று விக்கி விக்கி அழுவாள். தாயின் கோலம் கண்ட மேரி, தன்னால் முடிந்தளவு ஆறுதல் கூறினாள். இரவும் விடியாத பொழுதாக நீண்டு கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் கடலையே வெறித்த வண்ணம் இருந்தனர்.

(தொடரும்)

# சேர் ஐசாக் நியூட்டன்..


(14-ம் பக்கத் தொடர்ச்சி)

னைக் கூப்பிட்டுக் கேட்டார், 'நான் சின்னப் பூனைக்காக ஒரு சின்ன ஓட்டையும், பெரிய பூனைக்காக ஒரு பெரிய ஓட்டையும் போடச் சொன்னேன். ஆனால் நீ ஒரு பெரிய ஓட்டையை மட்டும் போட்டிருக்கிறாய். எதற்காக என்று எனக்கு விளங்கப்படுத்து' என்று. 'மேதையான உங்களுக்கே நான் இதை விளங்கப்படுத்தலாமா?' என்று மரவேலையாளன் கேட்டான். 'பரவாயில்லை கூறு' என்று நியூட்டன் சொன்னார். மரவேலையாளன் சொன்னான், 'சிறிய ஓட்டையூடாக பெரிய பூனை போகாது. ஆனால் பெரிய ஓட்டையூடாக சிறிய பூனையும் போகும், பெரிய பூனையும் போகும். இதனால் சிறிய ஓட்டை தேவை இல்லை' என்று. அப்போது நியூட்டன் சொன்னார் 'உன்னுடைய சிந்திப்புத்திறன் என்னுடைய சிந்திப்புத்திறனைவிட அபாரமானது. 'பெரிதாய் சிந்திக்கிறவன் சிறிதாய் சிந்திக்காமல் தன்னையே இழக்கின்றான்.' என்று.

விஞ்ஞான உலகின் ஒளி விளக்காய் திகழ்ந்த நியூட்டன் தனது எண்பத்தி நான்கு வருட வாழ்க்கைக் காலத்தில், இறுதிப் பத்து வருடத்தை மட்டும் (1717, 1727) மனைவியுடன் இல்லற வாழ்க்கையில் கழித்து தனது எண்பத்தி நாலாவது வயதில் (1727.03.31) உலகைவிட்டுப் பிரிந்தார். இவரின் பூதவுடல் 'வெஸ்ற்மின்ஸ்ரெர் அபே'யில் (Westminster Abbey) புதைக்கப்பட்டது.

*நவீனன் (ஏழாலை)*
*ஜேர்மனி*


## வாணன் வாகன சேவை



உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்

Tel: 01 42 52 06 80 / 01 48 05 21 63 / 06 09 26 88 35


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியின் உலக சாதனை



1998ம் ஆண்டு பிறந்த பின்பு இந்திய கிரிக்கட் அணிக்கு ஏற்பட்டுள்ள புதிய உத்வேகம், இந்திய அணியைப் பொறுத்த வரையில் சாதனை ஆண்டு என்று கூறும்படியாக அண்மைய நிகழ்வுகள் அமைகின்றன.

இந்தியா, அவுஸ்திரேலியா, சிம்பாவே ஆகிய நாடுகள் பங்குகொள்ளும் ஒருநாள் பந்தயங்களில், ஆரம்பத்தையே உலக சாதனையுடன் ஆரம்பித்தவர் இந்திய அணித் தலைவர் அசாருதீன்.

09.04.98 அன்று கட்டாக் நகரில் நடைபெற்ற இந்திய - சிம்பாவே அணிகளுக்கிடையிலான போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, ஒருநாள் போட்டிகளில் ஜொலிக்கும் டெண்டுல்கர், கங்குலி உட்பட மூன்று வீரர்களை இழந்து 26 ஓட்டங்களை மட்டும் எடுத்த நிலையில், நாலாவது விக்கட் இணைப்பாட்டத்தில் அசாருதீன், ஜடஜா ஆகியோர் இணைந்துகொண்டனர். இவர்கள் இருவரது அபார ஆட்டத்தில் ஓட்டங்கள் மின்னல் வேகத்தில் பெறப்பட்டன. பார்வையாளர்களின் ஏகோபித்த கரகோஷத்தின் மத்தியில் புதிய உலக சாதனையும் படைக்கப்பட்டது.

ஆட்ட முடிவில் 150 பந்துகளை எதிர்கொண்ட அசாருதீன் 153 ஓட்டங்களையும், ஜடஜா 116 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர். இந்திய அணி 4 விக்கட்டுக்கள் இழப்பிற்கு 301 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அசாருதீன், ஜடஜா ஆகியோர் 4வது விக்கட்டுக்காக இணைந்து பெற்ற 275 ஓட்டங்கள், ஒருநாள் போட்டியொன்றில் பெறப்பட்ட அதிகூடிய இணைப்பாட்ட ஓட்டமாக புதிய சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்னர் 4வது விக்கட்டுக்கான இணைப்பாட்டத்தில் பெறப்பட்ட அதிகூடிய எண்ணிக்கையாக, தென்னாபிரிக்க வீரர்கள் குலினன் டோடஸ் ஆகியோர் பாகிஸ்தானுக்கு எதிராக 29.09.96ல் பெற்ற 232 ஓட்டங்களும், ஒருநாள் போட்டியொன்றின் அதிகூடிய இணைப்பாட்ட எண்ணிக்கையாக, பாகிஸ்தான் வீரர்கள் அமிர் சொலி, இசாம் ஆகியோர் 20.04.94ல் பெற்ற 263 ஓட்டங்களுமே சாதனைகளாக இருந்தன.

கடந்த வருடம் அசாருதீன், ஜடஜா இருவரும் 5ம் விக்கட்டுக்கான இணைப்பாட்டத்தில் பெற்ற 223 ஓட்டங்கள் இது வரை 5ம் விக்கட் இணைப்பாட்ட சாதனையாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் சளைக்காது ஆட்டத்தைத் தொடர்ந்த சிம்பாவே அணி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ' கிரான் ' புளவர் பெற்ற 102 ஓட்டங்களால் 269 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. முடிவில் 32 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி கொண்டது.

# ஒருநாள் போட்டித் தொடரையும் மேற்கிந்திய தீவுகள் வென்றது

மேற்கிந்திய தீவுகள், இங்கிலாந்து அணிகளுக்கான ஒருநாள் போட்டித் தொடரில், இறுதியாக நடைபெற்ற 4 போட்டிகளிலும் மேற்கிந்திய பந்து வீச்சாளின் கை ஓங்கிக் காணப்பட்டு அனைத்துப் போட்டிகளையும் இலகுவாக வெற்றிக்கொண்டது. தோல்வி தான் வெற்றிக்கு அறிகுறி என்பதை இத்தொடர் நன்கு புலப்படுத்தியிருக்கிறது.

4:1 என்று தொடரை மேற்கிந்திய தீவுகள் வெற்றிகொண்டதால் தலைமை உடைந்து சிரற்றுக்காணப்படும் இங்கிலாந்து அணிக்கு இத் தோல்விகள் மேலும் பல அழுத்தங்களைக் கொடுக்கும் என்பதில் ஐயம் இல்லை.

**தொகுப்பு: பொன். தாமோதரம்**

## உதைபந்தாட்டத்தில் உலக நாடுகளின் நிலைகள்

ஐரோப்பிய கோடைக் காலம் அரும்பத் தொடங்கி விட்ட நிலையில், இந்த வருட கோடைகால நிகழ்வாக, உலகமே ஆனந்தமாக எதிர்பார்த்துக் காத்திருக்கும் உலக உதைபந்தாட்ட கிண்ணப் போட்டிகள் இன்னும் சில மாதங்களில் பிரான்ஸ் நாட்டில் நடைபெற உள்ளது. இவ் உதைபந்தாட்டப் போட்டிகளை முன்னிட்டு பல தகவல்கள் வெளியேறத் தொடங்கிவிட்ட நிலையில், உலக உதைபந்தாட்ட சம்மேளனமான FIFA மார்ச் மாதத்திற்கான நாடுகளின் தர நிலைமைகளை புள்ளிகளின் அடிப்படையில் வெளியிட்டுள்ளது. உலக சம்பியன் பிறேசில் தொடர்ந்து முன்னணியில் இருப்பதையும், மற்றைய நாடுகளின் வளர்ச்சி, வீழ்ச்சிகளையும் அட்டவணையின் மூலம் அறிந்துகொள்ளலாம். வரிசைப்படுத்தலில் முதல் 15 நாடுகளின் அட்டவணையை இங்கே காணலாம்.

| | நாடு | புள்ளிகள் | தர உயர்ச்சி அல்லது வீழ்ச்சி |
|---|---|---|---|
| 1. | பிறேசில் | 72.40 | 0 |
| 2. | ஜேர்மனி | 66.48 | 0 |
| 3. | செக் குடியரசு | 62.82 | 0 |
| 4. | மெக்சிக்கோ | 61.16 | 0 |
| 5. | இங்கிலாந்து | 60.70 | 0 |
| 6. | நெதர்லாந்து | 60.32 | +19 |
| 7. | ஆர்ஜென்டீனா | 59.19 | +10 |
| 8. | சிலி | 59.01 | -1 |
| 9. | ஜப்பான் | 58.95 | 0 |
| 10. | நோர்வே | 58.94 | 0 |
| 11. | மொறோக்கோ | 58.87 | +2 |
| 12. | யூகோஸ்லாவியா | 58.67 | -4 |
| 13. | இத்தாலி | 58.24 | +1 |
| 14. | பிரான்ஸ் | 58.18 | -8 |
| 15. | ருமேனியா | 57.94 | -4 |

## பிழை திருத்தம்

முழக்கம் 169-ல் பக்கம் 28ல் வெளியான விளையாட்டுச் செய்திகள் பகுதியில், 'அசாருதீனின் உலக சாதனை'யில் அவர் 274 பந்தயங்களில் கலந்துகொண்டுள்ளார் என்பதற்குப் பதிலாக தவறுதலாக 247 என்று அச்சிடப்பட்டுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம்

- ஆர்

## கிரிக்கட் ஒருநாள் பந்தய சாதனையாளர்கள்

கூடிய மொத்த ஓட்டங்களைக் குவித்தவர் - கெயின்ஸ் (மேற்கிந்திய தீவுகள்) ஓட்டங்கள் - 8648
கூடிய சதங்கள் குவித்தவர் - கெயின்ஸ் (மேற்கிந்திய தீவுகள்) சதங்கள் - 17
போட்டியொன்றில் கூடிய ஓட்டங்கள் பெற்றவர் - சயிட் அன்வர் (பாகிஸ்தான்) ஓட்டங்கள் 194
கூடிய போட்டிகளில் விளையாடியவர் - அசாருதீன் (இந்தியா) போட்டிகள் - 275க்கு மேல்
கூடிய விக்கட்டுக்களை வீழ்த்தியவர் - வசிம் அக்ரம் (பாகிஸ்தான் ) விக்கட்டுக்கள் - 341க்கு மேல்
சிறந்த பந்துவீச்சு - அஜாப் யாவிட் (பாகிஸ்தான்) 37 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுக்கள்
போட்டியொன்றில் கூடிய ஓட்டங்களைப் பெற்ற அணி - சிறீலங்கா - ஓட்டங்கள் - 398
அதிகூடிய இணைப்பாட்ட எண்ணிக்கை - அசாருதீன், ஜடஜா (இந்தியா) ஓட்டங்கள் - 275
குறைந்த பந்தில் சதம் அடித்தவர் - சயிட் அப்பாறி (பாகிஸ்தான்) பந்துகள் - 37


## நீங்களும் தொழிலதிபர் ஆகலாமே?

இவ்வாண்டின் நடுப்பகுதியில் எமது நிறுவனம் தமது சேவையினை இந்திய வர்த்தகச் சந்தையினை நோக்கி நகர்த்தவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

1959-ம் ஆண்டு உருவாக்கப்பட்ட எமது நிறுவனம், தற்போது சர்வதேச ரீதியில் 70 நாடுகளிலும் பிரதேசங்களிலும் தனது சேவையினை விஸ்தரித்துள்ளது. கடந்த வருடம் மட்டும் 6.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை வியாபார புரள்வாக ஈட்டியுள்ளது.

இப்போதுநாம் இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் வியாபார இயக்குநர்களைத் தேடுகிறோம். உங்களுக்கு எமது முயற்சியில் ஆர்வமிருப்பின் அல்லது குறைந்த மூலதனத்துடன் புதிய தொழில் முயற்சி ஒன்றை நீங்கள் தொடங்க திட்டமிட்டாலோ உதவக் காத்திருக்கிறோம்.

தொடர்புகளுக்கு: **T.K.C. International**

**24 Allée du Clos Fleury, Résidence les Séquoias, 45000 Orleans, France.**
**Tel: (33) 02-38629083 / Fax: (33) 02-38770485**




தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்
கர்ப்பிணித் தாய்மார் - குழந்தைகளுக்கான
சத்துணவுத் திட்ட நிதிக்காக
**ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் - பிரான்ஸ்**
நடாத்தும்




26.04.1998 ஞாயிறு காலை 9.00 மணி
Centre Sportif des Fillettes
54 bis, Boulevard Ney, 75018 Paris.
(Metro: Porte de La Chapelle)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் சிவக்கொழுந்து சின்னத்துரை
(பண்ணாகம்)

தோற்றம்
06.01.1908

மறைவு
18.03.1998

பண்ணாகத்தைச் சேர்ந்தவரும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி. சிவக்கொழுந்து சின்னத்துரை 18.03.1998 அன்று சிவபதமடைந்தார். அன்னார் அமரர் சின்னத்துரையின் அன்பு மனைவியும், அமரர் இந்திரராஜா, அமரர் நடராஜா, அமரர் சிவராமலிங்கம், மனோன்மணி (கொழும்பு), திருமூர்த்தி (சிங்கப்பூர்), பூமாதேவி (சிங்கப்பூர்), ருக்மணி (லண்டன்), திருச்செல்வம் (பாரிஸ்), தங்கமலர் (சிங்கப்பூர்) ஆகியோரின் அருமைத் தாயாரும், புஷ்பம், கனகேஸ்வரி, அமரர் தம்பிராஜா, அமரர் கதிர்காமத்தம்பி மனோகரன், ஜெயராஜ் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையம் அனுப்பி வைத்தவர்களுக்கும், தொலைபேசி, தொலைநகல் தபால் மூலமும், மற்றும் நேரடியாக வந்து அனுதாபங்களை தெரிவித்தவர்களுக்கும் எமது குடும்ப சார்பில் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்வதுடன், எதிர்வரும் 17/18.04.1998 வெள்ளி சனிக்கிழமைகளில் அந்தியேட்டிகிரியைகளும், வீட்டுக்கிருத்தியம், பந்திபோஜனமும் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

உறவினர்கள் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

தகவல்: திருச்செல்வம் (மகன்)
(கோல்டன்ஸ்ரார் பாரிஸ்)
தொலைபேசி: 0142092650

சின்னத்துரை குடும்பம்
571/3 காலி வீதி, கொழும்பு–6
தொலைபேசி: 589600

Pub







## எங்கும் கிடைக்கிறது




*Marketed & Distributed by*
**Ayngaran Limited**
172, Woodmansterne Road,
London SW16 5TZ,
United Kingdom.
Tel: 0181 7645200
Fax: 0181 764 5255
*E-mail:*
*bhasky@aol.com*




போலி CD க்களை வாங்கி ஏமாறாதீர்கள். Bhasky முத்திரைகளை கவனித்து வாங்குங்கள்

Pub


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகம்



# மூலதனம்

## ரஷ்யா கற்கும் விதிகள்

ரஷ்யா உலக சந்தையின் விதிகளுடன் ஒத்துப்போக ஆரம்பித்துவிட்டது. தனது பெற்றோலிய உற்பத்திக்காக அதிக விலையை பெறுவதற்காக, ஏனைய எண்ணெய் உற்பத்தி நாடுகளுடன் இணைந்து உலகிற்கான எண்ணெய் விநியோகத்தை குறிப்பிட்ட ஒரு வரையறைக்குள் வைத்திருக்க முடிவு செய்துள்ளது. ரஷ்யாவின் அரைவாசிக்கு மேற்பட்ட ஏற்றுமதி வருவாயைத் தேடித்தரும் பெற்றோலிய பொருட்களிற்கு, ஏற்றவிலையை பெறுவது ரஷ்யாவின் பிரதான பிரச்சினையாக இருந்து வருகின்றது.

தினசரி 61,000 பரல்கள் (பீப்பாய்) உற்பத்தியை மட்டுமே மேற்கொள்ள முடிவு வெய்துள்ள ரஷ்யா, உலகின் 3-வது பெரிய எண்ணெய் வள உற்பத்தி நாடாகும். ரஷ்யாவின் முடிவு உலக எண்ணெய் விலையில் எதுவித பாரிய மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை என லண்டன், நியூயோர்க் பெற்றோலிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## மக்களிடம் மனுப்போடும் மைக்ரோ சொவ்ட்

நினைத்துப் பார்க்க முடியாத வகையில் உலக அரசுகளினால் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படும் உலக செல்வந்த வணிகர் பில்கேட்ஸ், தன் நிறுவனத்தின் மீதான அரச நெருக்கடிக்கு மக்களிடம் நீதி கோருகின்றார்.

'நாங்கள் போராடும் கொள்கைகள்' என்ற தலைப்பில் பில்கேட்சின் மைக்ரோ சொவ்ட் நிறுவனம் 'அரசியல் பாணி' விளம்பரங்களை பிரதான அமெரிக்க பத்திரிகைகளில் வெளியிட்டுள்ளது.

பாவனையாளர்களிற்கு எத்தகைய கண்டுபிடிப்புக்கள் தேவை என தீர்மானிக்கும் அதிகாரம் தரப்படவேண்டும் என்பதே தமது நோக்கம் எனக்கூறும் பில்கேட்சின் பிரச்சார பிரிவினர், தமது போட்டியாளர்கள், உற்பத்தியின் தரத்தை கூட்டுவதற்கான அதிகாரத்தை உற்பத்தியாளனிடம் இருந்து பறிக்க முற்படுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

ஜூன் 25 ல் தமது தயாரிப்பான புதிய வின்டோஸ் 98 இனை வெளியிடவுள்ள மைக்ரோசொவ்ட், தமது இன்ரர்நெட் நிகழ்ச்சிக்கோவையை சந்தைப்படுத்துவதற்காக நீதியற்ற வணிக ஆதிக்கத்தை பயன்படுத்துவதாக போட்டியாளர்களால் குற்றம் சாட்டப்படுகின்றது.

**சிட்டிகுறூப்**

## மூலதன உலகின் முதலாமிடம்

தசாப்தத்தின் பிரதான வணிக இணைப்பு என விபரிக்கப்பட்ட வேர்ல்ட்கொம் MCI இணைப்பை பின்தள்ளிவிட்டு, 698 பில்லியன் டொலர்கள் சொத்துக்களைக் கொண்ட உலகின் முதலாவது மூலதன நிறுவனம் உருவாக உள்ளது. சிட்டிகுறூப் என பெயரிடப்பட்டுள்ள இப்புதிய நிதி நிறுவனம் சிட்டிபாங் (Citibank), த ரவலர்ஸ் (The Travelers) ஆகிய நிறுவனங்கள் இணைந்து உருவான புதிய நிறுவனம் ஆகும்.

100 நாடுகளில் வணிகம் புரியும் இந் நிறுவனம், மத்திய தர வர்க்கத்தினர் தமது பணத்தை முதலிடத்தக்க மூலதன வணிகத்தை ஊக்குவிப்பதே தமது புதிய இலக்கு என அறிவித்துள்ளனர்.

வங்கி நடவடிக்கைகளில் முன்நிற்கும் Citibank உம், காப்புறுதித் துறையில் முன்னணி வகிக்கும் The Travelers உம், 70 பில்லியன் டொலர்கள் பேரத்தில் இப்புதிய இணைப்பை மேற்கொண்டுள்ளனர்.

### சொத்துக்கள் அடிப்படையில் உலகின் பெரிய நிறுவனங்கள்

1. சிட்டிகுறூப் 697.46 பில்லியன் டொலர்கள்.
2. பாங் ஒஃப் டோக்கியோ/மிட்சுபிசி 582.65 பில்லியன் டொலர்கள்
3. HSBC 393.67 பில்லியன் டொலர்கள்.
4. சேஸ் மன்கட்டன் 365.52 பில்லியன் டொலர்கள்.
5. ஜெனரல் எலக்ரிக்கல் (GE) 304.01 பில்லியன் டொலர்கள்.

## மோட்டார் வாகன பேரம்

இன்றைய மோட்டார் வணிக உலகின் பரபரப்பான விடயம், பிரசித்தமான Rolls Royce நிறுவனத்தை வாங்குவதற்கு BMW உம் வோக்ஸ் வெகனும் நடாத்தும் பேரமாகும்.

Bayerische Motoren Werke (BMW) முன்வைத்த 564.4 பில்லியன் டொலர்கள் பேரத்தை எதிர்த்து 701.3 பில்லியன் டொலர்களைச் செலவழித்து Rolls Royce ஐ வாங்குவதற்கு வோக்ஸ் வெகன் (VW) முன்வைத்தது.

பிரித்தானிய ஆடம்பர வாகனமான Rolls Royce நிறுவனத்தை ஜேர்மனிய உற்பத்தியாளர்கள் வாங்கமுயல்வது பிரித்தானியாவில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவின் றோவர் குறூப் நிறுவனத்தை 1994 ல் கைப்பற்றிய BMW, தற்போது Rolls Royce நிறுவனத்திற்கு மோட்டார் மற்றும் சில உதிரிப்பாகங்களை விநியோகித்து வருகின்றது. தமது போட்டியாளர்களான வோக்ஸ் வெகன், Rolls Royce ஐ கைப்பற்றினால் தமது மோட்டார்களை அவர்கள் உபயோகிக்க தாம் அனுமதிக்கமாட்டோம் என BMW அறிவித்துள்ளது.

## சீன இலக்கு

21ம் நூற்றாண்டின் பொருளாதார வல்லரசாக உருவாகும் என விபரிக்கப்படும் சீனா, தன் பொருளாதார துரிதத்தை சமூகத் தளம்பல்களை கருத்தில் எடுத்து ஸ்திரப்படுத்த முனைகின்றது.

1998 இன் முதல் காலாண்டுப் பகுதியில் 7.5% பொருளாதார விரிவாக்கத்தை அடைந்துள்ள சீனப் பொருளாதாரம், 1998–ன் முழு ஆண்டிற்கான இலக்காக 8% ஐ தெரிவு செய்துள்ளது.

சீனப் பொருளாதார இலக்குப் பற்றி அண்மையில் பாரிசில் உரையாற்றிய சீனப் பிரதமர், தமது தேசிய நாணயத்தை தொடர்ந்தும் அதே பெறுமதியில் பாதுகாக்கப் போவதாக அறிவித்திருந்தார். கிழக்காசிய நாடுகளில் ஏற்படும் நாணய மாற்றுக் குழப்பமும், மதிப்பிழப்பும் சீன நாணயத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகித்துவரும் சூழ்நிலையில், பிரதமரின் அறிவிப்பு முதலீட்டாளர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.

உலக முதலீட்டாளர்களை வரவேற்றுள்ள பிரதமர், சீனா தனது பொருளாதார மேம்பாட்டிற்காக எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

### நாணயமாற்று விகிதம்

| | $ | £ | DM | F Fr | S. Fr |
|---|---|---|---|---|---|
| பிராங்பேட் | 1.82 | 3.04 | – | 0.30 | 1.20 |
| சூரிச் | 1.51 | 0.39 | 0.83 | 0.25 | – |
| பாரிஸ். | 6.10 | 10.20 | 3.35 | – | 4.03 |
| லண்டன் | 0.60 | – | 0.33 | 0.09 | 2.53 |
| நியூயோர்க் | – | 1.67 | 0.55 | 0.16 | 0.66 |
| பம்பாய் | 39.50 | 66.05 | 21.69 | 6.47 | 26.11 |
| கொழும்பு | 62.20 | 104.00 | 34.15 | 10.18 | 41.11 |

## Levi இன் மனித உரிமைகள்

இளைஞர்களின் கனவாக வளர்முக நாடுகளில் வணிக ஆதிக்கம் செலுத்திவரும் Levi டெனிம், தன்மீது தானே பூசிக்கொண்ட 'மனித உரிமைகள்' விதிமுறைகளைத் தூக்கி எறிய முடிவு செய்துவிட்டது.

5 வருடங்களுக்கு முன் சீனாவின் மனித உரிமை மீறல்களைக் காரணம்காட்டி அங்கிருந்து வெளியேறிய Levi நிறுவனத்தினர், மீண்டும் அங்கு தம் வணிகத் தயாரிப்புகளை மேற்கொள்ள் முடிவு செய்துவிட்டனர்.

12 ஆசிய நாடுகளில் தன் டெனிம் உடைகளை உற்பத்தி செய்யும் Levi சமீபகாலமாக ஏற்பட்டுவரும் அமெரிக்க - சீன வணிக வருவாயை அவதானித்தே இம் முடிவை எடுத்துள்ளது. அண்மையில் கொக்கோ கோலாவும், கொடேக் நிறுவனமும் சீனாவில் தமது வணிகத்தை அதிகரிக்க முடிவு செய்திருந்தன. ஜப்பானிய-கொரிய சந்தைகளில் 300 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான டெனிம் உடைகளை விற்பனை செய்யும் Levi ஆசியாவில் 468 மில்லியன் டொலர்களை வணிகம் மூலம் ஈட்டுகின்றது.


செல்வம் திரட்டும் சந்தை அமைப்பில் 'மனித உரிமைகள் கோஷம்' வெறும் சுமைதான் என்ற சந்தை அவதானிப்பை Levi இன் முடிவு உறுதிசெய்துள்ளது.

## கணினி + கடிகாரம் = $289

இலத்திரனியல் உலகின் வணிகப்போட்டி பாவனையாளரை திருப்திசெய்யும் கண்டுபிடிப்புக்களை ஊக்குவிக்கின்றது என்பதை நிரூபிக்க, உலகின் பல்தேசிய நிறுவனங்கள் போட்டியிட்டு வருகின்றன.

பிரபல கடிகார நிறுவனமான சீக்கோ, எதிர்வரும் ஜூன் 10-ல் வெளியிடவுள்ள புதிய கைக்கடிகாரம் PC கணினிகளைக் கொண்டதாக அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

Ruputer எனப்படும் இக் கடிகாரங்கள் மைக்ரோ சொவ்ட்டின் வின்டோஸ் 95 முறைமையில் இயங்கும்.



285 டொலர்கள் பெறுமதியான இக் கடிகாரம் முதலாவது 'அணியக்கூடிய PC' (Wearable PC) என வர்ணிக்கப்படுகின்றது. 100,000 Ruputer கள் முதலாம் ஆண்டில் விற்பனையாகும் என சீக்கோ எதிர்பார்க்கின்றது.

ஈழமுரசு ஜேர்மனி

நடாத்தும் ஐரோப்பா தழுவிய நாடகப்போட்டி

ஐரோப்பா வாழ் தமிழ் கலைஞர்களிடையே நாடகக் கலையை ஊக்குவிக்கும் வகையில் ஐரோப்பா தழுவிய நாடகப்போட்டியொன்றினை ஈழமுரசு பத்திரிகையின் ஜேர்மனிப் பணியகம் நடாத்தவுள்ளது. இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் தனிக்குழுக்கள் அல்லது கழகங்கள் எதிர்வரும் 01.05.98-ற்கு முன்னர் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்படுகின்றீர்கள். நாடகப்போட்டி பற்றிய மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக் கொள்வதற்கு கீழ் உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

N. Kathirgamanathan - Branden Burger Str -13, 40880-Ratingen, Germany.
தொலைபேசி எண்: 02102–475633

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச தொடர்புக்கான நிமிடங்களை மிக அதிகமாகத் தருகின்றோம்*

# ஞானம் சென்ரர்

40




40

| | |
|---|---|
| இந்தியா | 36 நிமிடம் |
| கனடா | 100 நிமிடம் |
| தாய்லாந்து | 27 நிமிடம் |
| ஹொங்கொங் | 45 நிமிடம் |
| பிரான்ஸ் | 135 நிமிடம் |
| இலங்கை | 40 நிமிடம் |
| சுவிஸ் | 70 நிமிடம் |
| மொறிசியஸ் | 35 நிமிடம் |
| சிங்கப்பூர் | 50 நிமிடம் |

| | |
|---|---|
| பிரித்தானியா | 100 நிமிடம் |
| அமெரிக்கா | 100 நிமிடம் |
| ஜேர்மனி | 75 நிமிடம் |
| அவுஸ்திரேலியா | 65 நிமிடம் |
| பிலிப்பைன்ஸ் | 32 நிமிடம் |
| அல்ஜீரியா | 55 நிமிடம் |
| மொரோக் | 55 நிமிடம் |
| பிரான்ஸ் (கைத்தொலைபேசி) | 80 நிமிடம் |

## இலங்கைக்கு 40 நிமிடங்கள்

**GANANAM**
TELECOM CENTERS
195, Rue du Fg.Saint Denis
75010 PARIS,
FRANCE
Tel: 01 46 07 09 36
Fax: 01 46 07 00 14
M° : La Chapelle / Gare du Nord

TELECOM CENTERS
13, Rue de Suez
75018 PARIS
Tel: 01 42 52 32 52
Fax: 01 42 52 34 52
M°: Chateau Rouge

TELECOM CENTERS
175, Rue de St.Maur
75011 PARIS
Tel: 01 43 38 22 98
M°: Belleville

TELECOM CENTERS
38, Rue de Belleville
75020 PARIS
Tel: 01 40 33 36 72
M°:Concourt

TELECOM CENTERS
83, Rue du Fg.St.Denis
75010 PARIS
M°: Chateau d'eau

TELECOM CENTERS
107 Av de Clichy
75017 PARIS
Tel : 01 42 63 63 25
M°: La Fourche ou Brochant

TELECOM CENTERS
120 Bd de la Chapelle
75018 PARIS
Tel: 01 44 92 83 32
M°: Barbes Roche chouart

TELECOM CENTERS
261 Rue de Paris
93100 MONTREUIL
Tel: 01 43 60 86 62
Fax: 01 43 60 86 65
M°: Mairie de Montreuil

TELECOM CENTERS
78 Bd Bd Barbes
75018 PARIS
Tel: 01 55 79 75 11
M°: Marcadet Poissonier

TELECOM CENTERS
33, Rue de Menilmontant
75020 PARIS
Tel: 01 40 33 41 74
M°: Menilmontant

வெகு விரைவில்

சுவிஸ், லண்டனில்
எமது சேவை ஆரம்பமாகின்றது!

*குறிக்கப்பட்ட சில நாடுகளுக்கு மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வேயில் சிறுபான்மையினருக்கு சம உரிமை உண்டு - நோர்வே அதிகாரி

அண்மையில் நோர்வே நாட்டிற்கு சென்றிருந்த சிறீலங்கா பாராளுமன்ற தூதுக்குழுவைச் சந்தித்த நோர்வே உள்நாட்டு அமைச்சின் செயலாளர் தமது நாட்டில் சமி சிறுபான்மை இனத்தினர் கௌரவமாகவும், சம உரிமையுடன் நடத்தப்படுவது பற்றி கூறியதுடன், அவர்களுக்கு தனிமையான பாராளுமன்றம் அமைக்கப்பட்டுள்ளமை பற்றியும் விளக்கிக்கூறியுள்ளார்.

முன்னதாக சிறீலங்காவிலிருந்து சென்ற தூதுக்குழுவில் இ.தொ.க, ஈ.பி.டி, புளொட், மு.காங்கிரஸ் ஆகிய கட்சிபிரதிநிதிகள் உட்பட 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். இவர்களுக்கான கருத்தரங்கில் ஸ்கன்டிநேவிய நாடுகளில் மனித உரிமைச் சட்டங்கள் அமுல்படுத்துவது பற்றி வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் தெளிவாக விளக்கியுள்ளதுடன் தமிழர்களின் போராட்டம் பற்றியும் கலந்துரையாடியுள்ளனர்.

# குடாநாட்டில் எட்டு வருடத்தில் எண்ணாயிரம் விதவைகள்

கடந்த எட்டுவருடங்களாக குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் சுமார் 8000 பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டுள்ளனர் என சிறீலங்கா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

தொடரும் போர் நடவடிக்கைகளால் இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இவ்விதம் பாதிப்பிற்கு உள்ளான பெண்கள் ஒருவித விரக்தி நிலையில் காணப்படுவதாகவும், பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து கவலை கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டை சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்த கடந்த இரண்டு வருடங்களில் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட தமது கணவன்மார் உயிருடன் உள்ளார்களா அல்லது இறந்து விட்டார்களா என்பது குறித்து அறியமுடியாமல் ஏராளமான பெண்கள் வாழ்ந்துவருகின்றனர். தமது கணவர்மார்பற்றி எதுவுமே தெரியாத இவர்கள் தமது எதிர்காலம் என்ன என்று தெரியவில்லை எனவும் கூறியுள்ளனர்.

# யாழ் இராணுவத்திற்கு ரத்வத்தை மனோசிகிச்சை

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் யாழ். குடாவின் பகுதிகள் படிப்படியாக வருவதனால் பீதி கொண்டுள்ள படையினருக்கு மனோதிட சிகிச்சை அளிப்பதற்காக சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை கடந்த 8ம் திகதி யாழ். குடாவிற்குச் சென்றிருந்தார்.

பலாலிப் படைத் தளத்தில் இராணுவ அதிகாரிகளைச் சந்தித்த ரத்வத்தை விடுதலைப் புலிகளின் போராட்டம் ஒடுக்கப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டு படையினருக்கு உற்சாகம் கொடுக்க வேண்டுமென அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு குடாநாட்டின் ஏனைய பகுதி இராணுவ நிலைகளுக்குச் செல்வதை தவிர்த்த ரத்வத்தை, அன்று மாலையே கொழும்பு திரும்பியுள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### தாக்குதல் தீவிரம்....

காரணங்கள் என அறிய வருகின்றது.

இதேவேளை குடாநாட்டில் புலிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் தொடர்புகள் அதிகரித்து வருகின்றமையால் புலிகளுடன் தொடர்புகளை மேற்கொள்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். நகர சிறீலங்கா இராணுவப் பொறுப்பாளர் எச்சரித்துள்ளார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### புலிகள் மூழ்கடித்த....


கப்பலில் ஏற்றப்பட்ட இல்மனைடின் பெறுமதி செலுத்தப்பட வேண்டும் என சிறீலங்கா தரப்பும், இல்மனைட் கப்பல் நங்கூரமிட்டிருந்த வேளையில் தாக்குதலுக்கு உள்ளானதால் பெறுமதியை வழங்க முடியாதென ஏ.சி.ஐ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்பொழுது கிழக்குக் கடற் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் பெருமளவு ஆதிக்கம் செலுத்துவதால் புல்மோட்டை இல்மனைட் பிரதேசத்தில் பாரியளவில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது சிறீலங்கா அரசு திணறிவரும் அதேவேளை இத் தாக்குதலின் பின்னர் இரண்டு இல்மனைட் கொள்வனவு ஒப்பந்தம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு கல்லடியில் மீன்பிடி உபகரணங்கள் அழிப்பு

கல்லடி கரையோரக் கிராமத்தில் சிறீலங்கா இராணுவத்தினர் மீனவர்களின் உடைமைகளை தீவைத்து எரித்து அழித்துள்ளனர். கல்லடி முகாமிலுள்ள படையினரே இவ் நாசகாரத்தை புரிந்துள்ளனர். தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் தமிழ் மீனவர்களின் பல இலட்சம் ரூபா பெறுமதி மிக்க வலைகளே படையினரால் அழிக்கப்பட்டுள்ளன.

கடந்த 31.03.98ல் சிங்கள ஊர்காவற்படையினரால் கடத்திச் செல்லப்பட்ட கல்லாறு குடியேற்றத்திட்டத்தைச் சேர்ந்த ஐந்து தமிழ் சிறுவர்களின் கதி என்ன என்பது பற்றி தெரியவரவில்லை. இவர்களின் பெற்றோர், உறவினருக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை என தெரிவிக்கப்படுகிறது.




மூன்னூறு வருட மத முரண்பாடுகளுடனும், 76 வருட பிரதேச முரண்பாடுகளுடனும், 30 வருட ஆயுத போராட்டத்துடனும் வாழ்ந்து வந்த வட அயர்லாந்தில் கத்தோலிக்க சமூக ஆயுதப்போராட்ட அமைப்பான 'ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் அரசியல் தலைவரான ஜெரி அடம்ஸ்.

## தமிழ் பத்திரிகையாளர்கள் மீது அச்சுறுத்தல் ஐ.நா.வில் முறையீடு

தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மீது சிறீலங்கா அரசு அச்சுறுத்தல்களை விடுத்துவரும் அதேவேளை சர்வதேச பத்திரிகையாளர்கள் மீதும் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அபிவிருத்திக்கான ஆசிய கலாச்சார அமைப்பு ஐநா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 54வது கூட்டத்தொடரில் குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த 29.11.97 அன்று மூன்று தமிழ்ப் பத்திரிகையாளர்கள் பொலிசாரினால் அச்சுறுத்தப்பட்டு அவர்களது புகைப்படச் சுருள்கள் பறிமுதல் செய்யப்பட்டதையும் இவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.




நன்றி: 'தினக்குரல்'

## வீடு விற்பனைக்கு

Noisy Le Grand ல் RER க்கும் Centre Commercial க்கும் அண்மையில் நல்ல நிலையில் 76M² கொண்ட 3 Pcs வீடு விற்பனைக்குண்டு.

விலை - 420,000Frs.
தொடர்புகட்கு:- 0145923518
அல்லது 0614496647

AMV
IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும். மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

லண்டனில் புதுப் பொலிவுடன்
கணபதி தமிழ்க்கடை

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள் +
மளிகைப்பொருட்களுக்கு
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே
இடத்தில் பூர்த்தி செய்வதற்கு
Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

# புத்தாண்டு தாக்குதல் அச்சம் கொழும்பு மக்கள் கிராமங்களில்

புத்தாண்டு காலப் பகுதியில் கொழும்பு நகரில் தாக்குதல்கள் இடம்பெறும் என்ற அச்சத்தால் கொழும்பு நகர மக்கள் கிராமப் புறங்களை நோக்கி செல்ல முனைந்ததால் கொழும்பு நகரில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது.

வழமையாக தமது புதுவருட கொள்முதல்களை கொழும்பில் மேற்கொள்பவர்களும்கூட இம்முறை தாக்குதல் அச்சம் காரணமாக நகரப் பகுதிக்கு செல்லாமல் கிராமப்புறங்களை நோக்கி சென்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் அண்மைக் காலங்களில் நடாத்தப்பட்ட பல குண்டுத் தாக்குதல்கள் விடுமுறைநாட்களில் பெற்றதால் இப் புத்தாண்டு கால விடுமுறையின் போதும் தாக்குதல் இடம்பெறலாம் என்ற அச்சத்தினாலேயே நகரவாசிகள் கிராமங்களை நோக்கி சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

## அநுராதபுர இராணுவ தலைமையகம் புலிகளின் குறி - பாதுகாப்பு தீவிரம்

அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ கட்டுப்பாட்டுத் தலைமையகத்தையும் அதன் பாதுகாப்பு வளாகங்களையும் புலிகள் ஊடுருவித் தாக்கலாம் என்ற புலனாய்வுத்துறையினரின் எச்சரிக்கையை தொடர்ந்து அநுராதபுர எல்லைக்கிராமங்கள் பலப்படுத்தப்பட்டுவருகின்றன.

இப் பாதுகாப்பிற்கென எல்லைக் கிராமங்களில் விசேட காவலரண்கள் அமைப்பட்டு உட்பிரவேசிக்கும் வாகனங்கள் பலத்த சோதனைக் கெடுபிடிக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. எல்லைப் புறங்களில் மாத்திரமல்லாது. நகருள்ளும் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டு திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்துடன், அநுராதபுர மாவட்டத்தில் கடமையாற்றும் ஏழாயிரம் ஊர்காவர்படையினருக்கு தானியங்கித் துப்பாக்கிகள் வழங்கப்பட்டு விசேட இராணுவ பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

## தாக்குதல் தீவிரம் - குடாநாட்டு நிலவரம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க சிறீலங்கா ஜனாதிபதி பணிப்பு

யாழ். குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்து வருவதால் இவை பற்றி மாதாந்தம் அறிக்கை சமர்ப்பிக்கும்படி சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா வட பிராந்திய இராணுவ தளபதியாக உள்ள ஜெனரல் பலகல்லயவை பணித்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களும், வடமராட்சிப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்க முடியாமல் போனவையும், குடாநாட்டின் பகுதிகள் எங்கும் மேற்கொள்ளப்படும் சிறு சிறு தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றமையே இந்த அறிக்கை சமர்ப்பிக்கும் படி பணிக்கப்பட்டமைக்கான

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## வடமராட்சி கிழக்கை கைப்பற்ற புதிய தளபதி

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடமராட்சி கிழக்குப் பகுதியை கைப்பற்ற சிறீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட பல முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து இதுவரை வடமராட்சி இராணுவ இணைப்பாளராக கடமையாற்றிய கேர்ணல். லறி விஜயரட்னா கொத்தலாவலை பாதுகாப்புக் கல்லூரி இடமாற்றம் செய்யப்பட்டு அவரது இடத்திற்கு கேர்ணல் சரத்கருணாரட்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

கேர்ணல் சரத்கருணாரட்ன 1991ம் ஆண்டு ஆனையிறவில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆ.க.த சமரில் படையணிகளை வழிநடத்திய அனுபவத்தைக்கொண்டு வடமராட்சி கிழக்கையும் விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பார் என்ற நம்பிக்கையுடனேயே அவரை வடமராட்சிக்கு பொறுப்பாக நியமித்துள்ளது.

## யுத்தமுனைகளுக்கு மேலதிக புலனாய்வுத் துறையினர்

விடுதலைப் புலிகள் தந்திரோபாயமாக மேற்கொள்ளும் தாக்குதல்கள் படையினருக்கு பலத்த இழப்புக்களையும், பின்னடைவுகளையும் ஏற்படுத்தி வருவதால் இவைகுறித்து புலனாய்வு செய்யவென யுத்த முனைகளுக்கு ஏராளமான புலனாய்வுத்துறையினர் அனுப்பட்டுவருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்திட்டத்தின்படி தேசியப் புலனாய்வுப் பணியகத்தில் பணியாற்றிய· 88 அதிகாரிகள் இரண்டு வாரங்களில் யுத்த முனைகளுக்கு அனுப்பப்பட உள்ளனர்.

இவர்கள் யுத்த முனைகளில் விடுதலைப் புலிகளின் நட்மாட்டங்கள், அரசுக்கு எதிராக செயற்படுவோர் (அரச அதிகாரிகள்) ஆகிய விடயங்களில் முக்கியகவனங்கள் செலுத்துவர் எனச் சொல்லப்படுகிறது.

## புலிகள் மூழ்கடித்த இல்மனைட் கப்பல் விவகாரமாகிறது

தமிழீழக் கனிவளத்தைக் கொள்ளையடித்த கப்பல் மீது கடந்த வருடம் செப்டம்பர் மாதம் கடல்சிறுத்தைகளால் புல்மோட்டைக் கடற்பரப்பில் வைத்து மேற்கொண்ட தாக்குதலால் 27 ஆயிரம் தொன் இல்மனைட்டுடன் அக்கப்பல் கடலில் மூழ்கியது தெரிந்ததே.

தற்பொழுது இக் கனிவளத்தின் பெறுமதியினை செலுத்துவது தொடர்பாக சிறீலங்கா அரசிற்கும், இல்மனைட்டை கொள்வனவு செய்த ஏ.சி.ஐ இரசாயண நிறுவனத்திற்கும் சர்ச்சை எழுந்துள்ளது.

சர்வதே வர்த்தக உடன்படிக்கைகளின் பிரகாரம் இந்த விவகாரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளது.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

லண்டனில்
ஆச்சீஸ்
இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இலங்கை மரக்கறி வகைகள், கடல் உணவு வகைகள் மற்றும் பலசரக்கு வகைகளுக்கும், ஒறிஜினல் Pyramid CD, Audios and Video CD (D.V.D) மற்றும் பழைய, புதிய பாடல்கள் அடங்கிய எல்லாவிதமான CD களையும், இலங்கை, இந்திய பத்திரிகைகள், சஞ்சிகைகளையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ள

Archie'S Tel: 0181-2053652
205, Edgware Road, Colindale-Nw 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org